விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 21 வியாழக்கிழமை (05.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 076

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# உறவுகளை மீட்கப் போராட்டம் சோகத்தில் ஆழ்ந்தது யாழ். நகரம்

## ஜனாதிபதிக்கும் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது உறவுகளை எம்மிடம் மீளத் தாருங்கள் அல்லது எம்மையும் கொன்று விடுங்கள் என போர்க்காலத்தில் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் போனவர்களை மீட்டுத் தரக் கோரி அவர்களது உறவுகள் நேற்றையதினம் யாழ் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக முன்னெடுத்த மாபெரும் போராட்டத்தினால் யாழ் நகரே சோகத்தில் ஆழ்ந்தது.

வட பகுதியில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற

23ஆம் பக்கம் பார்க்க....



## கடத்திச் செல்லப்பட்ட மகன் அச்சத்தில் வெளிநாட்டில் தஞ்சமாம்!

### பொலிஸார் தகவல்; தாயார் கதறல்

(யாழ்ப்பாணம்)

தனது மகனை கடத்தி சென்று விட்டு கடன் காரணமாக வெளிநாடு சென்று விட்டான் என கொழும்பு உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் தற்போது கடிதமொன்றினை அனுப்பியுள்ளதாக மூளாய்ப் பகுதியை சேர்ந்த தாயொருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த கடிதம் கடந்த ஜனவரி மாதம் இருபத்தோராம் திகதியன்று கொழும்பு

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசின் கடன் கோரிக்கையை நிராகரித்தது நாணய நிதியம்

(கொழும்பு)

இலங்கையின் புதிய அரசாங்கம் விடுத்திருந்த 4 பில்லியன் டொலர் கடன் கோரிக்கையை சர்வதேச நாணய நிதியம் நிராகரித்துள்ளது.

சீனாவிடம் இருந்து மகிந்த அரசாங்கம் பெற்றுக் கொண்ட கடன்களில் ஒரு பகுதியை அடைப்பதற்கே அனைத்துலக நாணய நிதியத்திடம் கடனுதவியைக் கோரியிருந்தது.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க கடந்த மாதம் வாஷிங்டனுக்கு மேற்கொண்ட பயணத்தின் போது, அனைத்துலக நாணய நிதியம் மற்றும் உலக வங்கியிடம் இருந்து கடன்களை கோரியிருந்தார்.

இந்த நிலையில், இலங்கைக்கு ஒன்பது நாள் பயணத்தை மேற்கொண்ட சர்வ

23ஆம் பக்கம் பார்க்க....

# காணாமல் போனோர் இரகசிய முகாம்களில்

## சப்பாத்து துடைப்பதாக முதலமைச்சர் தகவல்



(யாழ்ப்பாணம்)

வட, கிழக்கு மாகாணங்களிலிருந்து போர் நடைபெற்ற காலப்பகுதியில் கடத்தப்பட்டு காணாமல் போனவர்கள் பலர் இலங்கையின் பல இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் இரகசிய தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக எமக்கு இரகசியத் தகவல்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் படையினரின் சப்பாத்துக்களை துடைப்பதற்கும் மற்றும் சில இதர வேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் அறிந்திருக்கின்றோம் என வட மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)


## பிராந்திய சுயாட்சி கிடைத்தால் மத்திய அரசை பரிசீலிப்போம்

### சம்பந்தன் கருத்து

(கொழும்பு)

பிராந்திய சுயாட்சியைப் பெற்ற பின்னரே மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பது குறித்து பரிசீலிக்க விருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்

23ஆம் பக்கம் பார்க்க....



## மருந்து உற்பத்தியாளர்களிடம் 25 இலட்சம் திரட்டிய மகிந்த !

### ஜனாதிபதி மைத்திரி குற்றச்சாட்டு


(கொழும்பு)

மக்கள் தன்னை ஜனாதிபதியாக தெரிவு செய்ததன் காரணமாகவே மருந்துகள்தொடர்பான சட்டமூலத்தை நாடாளுமன்றத்திற்கு கொண்டுவர முடிந்ததாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஊடகங்கள் பாதுகாப்புச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## உள்நாட்டு விசாரணைக்கு சரத் பொன்சேகா தயார்



(கொழும்பு)

இறுதிக்கட்ட போரின்போது நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல்கள் குறித்து ஒரு உள்நாட்டு விசாரணை நடப்பதை தான் ஏற்றுக்கொள்வதாக முன்னாள் இராணுவத் தளபதி

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா[illegible]க்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமராக்கும் போராட்டம் தொடர்ந்து நடைபெறும்!

## மேல் மாகாண முதலமைச்சர் சவால்

மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் அமர்த்தும் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ மற்றும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய அரசாங்கத்தை கவிழ்க்கும் வேலைத்திட்டதில் இணைய வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மினுவங்கொடையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், எந்த நிபந்தனையின் கீழாவது மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில அமர்த்த நான் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன.

மைத்திரிபால சிறிசேன பல வருடங்களாக எமது கட்சியின் செயலாளராக பணியாற்றியுள்ளார். மூன்று மாதங்கள் மாத்திரமே எங்களிடம் இருந்து பிரிந்து சென்றார். மூன்று மாதங்கள் பிரிந்து சென்றதால், அவர் முற்றாக மாறியிருக்க மாட்டார். அவர் எங்களது கட்சியின் தலைவர்.

அவரது தலைமையில், எந்த நிபந்தனையிலாவது மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து, இந்த நாட்டை ஐக்கியமான நாடாக பேணி பாதுகாத்து, மக்களின் விருப்பு வெறுப்புகளை புரிந்து கொண்டு செயற்படும் அரசாங்கமாக மாற்றும் எமது போராட்டத்தை நாம் கைவிட போவதில்லை.

மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்க வேண்டும் எனக் கோரி அண்மையில் நுகேகொடையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களை விட அதிகளவான மக்கள் கண்டியில் நாளை 6 ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் எனவும் பிரசன்ன ரணதுங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (எ-11)

# யாழ்ப்பாண தமிழனுக்கு விரைவில் மரண தண்டனை

அவுஸ்திரேலியப் பிரஜையான மயூரன் சிவகுமாரன் என்ற தமிழரின் மனுக்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டு, அவர் மரண தண்டனையை எதிர்கொள்வதற்கான அதி பாதுகாப்புச் சிறைக்கு நேற்று மாற்றப்படடுள்ளார்.

இந்தோனேசியாவில் வைத்து 2005-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தனது 24 வயதில், போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் மயூரன் சிவகுமாரன் கைது செய்யப்பட்டார்.

2006-ம் ஆண்டு மரணதண்டனை இவருக்கு விதிக்கப்பட்டிருந்தது. அதற்கெதிராக கொடுக்கப்பட்ட கருணைக் கோரிக்கை மனு இந்த ஆண்டு ஜனவரி மாத இறுதியில் நிராகரிக்கப்பட்டிருந்தது.

மயூரனின் கருணை மனுவை நிராகரித்த இந்தோனேசிய ஜனாதிபதி, தற்போது போதைப்பொருள் கடத்தல்களுக்காக கடந்த காலங்களில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள 64 பேருக்கும் தண்டனையை நிறைவேற்றுமாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தோனேசிய நடைமுறைப்படி மரண தண்டனை கைதிகள் சுட்டுக் கொல்லப்படுவார்கள். 12 பேர்கொண்ட குழு ஒவ்வொரு கைதிக்கும் நியமிக்கப்படும். மூன்று காவலர்களின் துப்பாக்கிகளில் சத்தம் மாத்திரம் வருகின்ற சன்னங்களும் இருக்கும்.

அனைவரும் ஒரே நேரத்தில் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொள்வார்கள். உண்மையான சன்னங்கள் எந்தத் துப்பாக்கியில் இருந்து சென்றன என்பது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்பவர்களுக்கு தெரியாது. இது ஒரு கொடூரமான மரணதண்டனை முறையாகக் கருதப்படுகின்றது.

நுசாகம்பங்கனொன் என்ற தீவிலேயே இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படவுள்ளது. அந்தத் தீவிற்கு நேற்று மாற்றப்பட்ட இவர்களிற்கு மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கு 72 மணித்தியாலங்களிற்கு முதலே இதுதொடர்பாக தெரிவிக்கப்படும்.

இந்தத் தீவிற்கு புறப்படுவதற்கு தயாராகிவிட்ட மயூரன் சிவகுமாரன் தனது ஆடைகள மற்றும் உபயோகித்த பொருட்களை ஏனைய சிறைக்கைதிகளிற்கு பகிர்ந்தளித்துள்ளார். அத்துடன், நன்றாக நடவுங்கள், அவதானமாக இருங்கள் என அறிவுரை கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

தான் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமொன்றில் கலைப்பட்டதாரியாகச் சிறப்புத் தேர்வு பெற்றதோடு, சிறைச்சாலையில் ஆங்கிலம், கணனி, கணனி வரைகலை, கணக்கியல் போன்ற பாடங்களை கற்பித்ததோடு தானிருந்த சிறைப்பகுதிக்கான தலைமை சிறைக்கைதியாக ஏனையவரை வழிநடத்தும் பொறுப்பையும் மேற்கொண்டு வந்தார்.

அத்தோடு தங்களது சித்திரங்கள், வரைகலைகள் விற்பதற்கான வியாபார நிறுவன மொன்றையும் ஆரம்பித்து, அதனூடே தங்களது தயாரிப்புக்களை விற்பனை செய்தும் வந்துள்ளார்.

இந்த நிலையில் இவர்களின் விடுதலைக்கு ஆதரவாக அவுஸ்திரேலியாவில் கடந்த மாதம் மெழுகுவர்த்திப் போராட்டம் இடம் பெற்றுள்ளது. (எ-11)

## கர்ப்பிணிகளுக்கு போசாக்குப் பொதி

கர்ப்பிணிப் பெண்களுக்கு போஷாக்குப் பொதி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பொலநறுவையில் ஆரம்பமாகவுள்ளது என சிறுவர் விவகார அமைச்சர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்தார்.

கண்டி பௌத்த சங்க மண்டபத்தில் சிறுவர் வவகார அமைச்சின் அதிகாரிகளை தெளிவுபுடுத்தும் நிகழ்வு இடம்பெற்றது. அதன் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மாதாந்தம் 20 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்க அரசு தீர்மானித்திருந்தது. அதற்கமைய மாதாந்தம் 2 ஆயிரம் ரூபாய் பெறுமதியான போஷாக்கு பொதி வழங்கப்படவுள்ளது.

கர்ப்ப காலத்தில் ஆறு மாதங்கள் தொடக்கமும் குழந்தை பிறந்த பின்னர் ஆறு மாதங்களுக்கும் இப்போஷாக்குப் பொதி வழங்கப்படவுள்ளது.

போஷாக்கு நிபுணர்கள் மற்றும் மருத்துவர்களின் ஆலோசனைக்கமைய பிரதேச சபை சுகாதார காரியாலயத்தினூடாக போஷாக்குப் பொதி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

**Granton Group Sri lanka** **VACANCY**

எமது Granton Group Companyக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள துடிப்பும் ஆர்வமும் தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர். 20 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

● மேற்பார்வையாளர் ● முகாமைத்துவ பயிற்சியாளர் ● சந்தைப்படுத்துனர் ஆகியோர் தேவைப்படுகின்றனர்.

■ வயதெல்லை 18-32 ■ தங்குமிட வசதி இலவசம்

■ அனுபவம் தேவையில்லை ■ சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்

குறிப்பு: நேர்முகத் தேர்வுக்கு வருபவர்கள் இவ்விளம்பரத்தை கொண்டு வரவும்

தொடர்புகளுக்கு: **0774458134**

முகவரி: இல.225, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (9674)

**வேலைவாய்ப்பு**

நீங்கள் தொழில் தேடுபவரா?

விஸ்தரிக்கப்பட்டு வரும் எமது சர்வதேச கம்பனியின் புதிய கிளைகளுக்குரிய வேலை வெற்றிடங்கள் உள்ளன.

● அலுவலக உதவியாளர் ● களஞ்சியப்படுத்துனர்

● மேற்பார்வையாளர்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசத்தினைச் சேர்ந்தோருக்கு முன்னுரிமை

➡ தங்குமிட வசதிகள் உண்டு ➡ வயதெல்லை 18-28

➡ சம்பளம் 15,000/= - 18,000/=

தொடர்புகளுக்கு: 0775566226, 0777981471, 0775566224, 07733[illegible]

# களைத்துப் போன திருடன் கடைக்குள் கண்ணயர்ந்தான்

## பொலிஸார் காவிச் சென்றனர்

கடைக்குள் புகுந்த திருடன், திருடிய பொருட்களையெல்லாம் மூட்டைக்கட்டிவிட்டு விடிய விடிய கண்ணயர்ந்து விடிந்தும் விழி அயராத சம்பவமொன்று மஹியங்கனையில் இடம பெற்றுள்ளது. பொலிஸார் வந்து திருடனை தூக்கிச்செல்லும் வரையிலும் அவன் அக்கடைக்குள்ளேயே ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ளான். குறித்த திருடன் இவ்வாறான திருட்டு சம்பவங்களுடன் தொடர்புபட்டு நான்கு முறைகள் சிறைச்சாலைக்கு சென்று வந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மஹியங்கனை நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் திருடுவதற்காக திருடன் ஒருவன் நேற்றுமுன்தினம் அதிகாலை நுழைந்துள்ளான். அந்த வர்த்தக நிலையத்தில் தனக்கு தேவையான மற்றும் பெறுமதியான பொருட்களை மூட்டையில் கட்டி மேசை மேல் வைத்துள்ளான். பக்குவமாக திருடிய பொருட்களை மூடையாக கட்டுவதற்குள் கண்களும் கட்டிவிட்டன. விடிய விடிய விழித்திருந்த களைப்பில் அங்கிருந்த மேசையிலேயே சௌக்கியமாக சாய்ந்து காலையும் குளிர்சாதன பெட்டியின் மேல் நீட்டி கண்ணயர்ந்து விட்டான். போதையும் சுகமாக நித்திரைக்கு இடையூறு விளைவிக்காமையால் விடிந்ததையும் தான் வந்த வேலையும் தெரியாமல் போனமையால் விடியவிடிய கண் விழிக்கவும் இல்லை. இந்நிலையில் குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளரான பெண் நேற்றுமுன்தினம் காலை வந்து வர்த்தக நிலையத்தை திறந்த போது திருடன் நித்திரை கொள்வதையும் பொருட்கள் மூட்டை கட்டப்பட்டுள்ளதையும் அவதானித்துள்ளார். அரவம் கேட்காது பொலிஸாருக்கு அப்பெண் அறிவிக்கவே ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொண்டு, திருடனின் தூக்கத்தை கலைத்துவிட்டாமல் அப்படியே தூக்கி வாகனத்தில் ஏற்றி கொண்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று வட்டனர். சந்தேக நபர் பல முறை சிறை சென்றவர் என தெரிவித்த மஹியங்கனை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## மின்னல் தாக்கி ஒருவர் பலி

வவுனியா, மடுக்கந்தைப் பகுதியில் மின்னல் தாக்கி இளைஞன் ஒருவர் மரணமடைந்துள்ளார். நேற்று புதன்கிழமை மாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, மடுக்கந்தைப் பகுதியில் உள்ள வயல் ஒன்றில் வேலை செய்துவிட்டு மண்வெட்டியுடன் வீடு நோக்கி சென்றவர் மீது மின்னல் தாக்கியதில் அவர் மரணமடைந்துள்ளார். ஹமித சிரந்த (வயது 19) என்பவரே மரணம் அடைந்தவர் ஆவார். இவரது சடலம் வவுனியா வைத்தியசாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது. (எ-250)

## பாக்.யுத்தக்கப்பல் திருமலை துறைமுகத்தில்

பாகிஸ்தான் யுத்த கப்பலொன்று இலங்கையின் திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது.

இந்த கப்பல் நேற்று முன்தினம் இந்த நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

303 பாகிஸ்தான் கடற்படையினருடன் விஜயம் செய்துள்ள சுல்பிகார் எனும் குறித்த யுத்த கப்பல் 123 மீட்டர் நீளத்தை கொண்டுள்ளது. திருகோணமலையை வந்தடைந்த கப்பலை இலங்கை கடற்படையினர் அதற்கு பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்துள்ளனர்.

இதன்படி பாகிஸ்தான் யுத்த கப்பலின் தளபதி கப்டன் அமீர் முஹம்மட், கிழக்கு பிராந்திய கடற்படை தளபதி ரியர் அட்மிரல் ரோகண பெரேராவை கிழக்கு கடற்படை தலைமையகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். (எ-11)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**யாழ்.மாவட்டத்தில் 01.03.2005 தொடக்கம் கடந்த 10 வருடங்களாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய**



**வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன்**

(பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்-யாழ்.மாவட்டம்)

அவர்கள் பதவி உயர்வு பெற்று வடமாகாண

**பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக**

செல்லும் இவ்வேளையில்

அவர் தனது சேவைக்காலத்தில் யாழ்.மாவட்டத்தில் சுகாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களை சிறப்பாக செயற்படுத்தி அளப்பரிய சேவைகள் ஆற்றியமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று என்றும் நலமாக புன்சிரிப்புடன் வாழ எல்லாம் வல்ல முருகண்டிப் பிள்ளையாரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(9669)

வாழ்த்துவோர்:-
ஆதார வைத்தியசாலைகளான மந்திகை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை மற்றும் பிரதேச வைத்தியசாலை சங்கானை ஆகியவற்றிற்கு சுத்திகரிப்பு சேவையை வழங்கும் நிறுவனத்தினரும் ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காணாமற் போனவர்களின் உறவினர்கள் யாழில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம்






இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்களை மீட்டுத்தரக் கோரி யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக காணாமற் போனோரின் உறவுகள் ஆர்ப்பாட்டத்தில் நேற்றைய தினம் ஈடுபட்டிருந்தனர். வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டம் முற்பகல் 10 மணியளவில் யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக நடைபெற்று அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு சென்று ஆளுநர் அதிகாரிகளிடமும் மகஜர் கையளிக்கப்பட்டு தொடர்ந்து பேரணியாக வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்திற்கும் சென்று அங்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் சந்தித்து கதறியழுதனர். இதன்போது முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறி இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். இப்போராட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளர் எஸ்.சுஜீவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள் :-உ.சாவின்)

# சுதந்திரக்கட்சி இரண்டுபட்டால் அதிகஅனுகூலம் எங்களுக்கே

## பிரதமர் தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டு படுவது ஐக்கிய தேசிய கட்சிக்கு அதிக அனுகூலம்என பிரதமர்ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்

அண்மையில் நுகேகொட கூட்டத்தற்கு வருகை தந்தவர்கள் திருடர்களே என கூறியுள்ளார். நுகேகொட கூட்டத்திற்கு வந்தவர்கள் மகிந்தவின் திருடர்கள் சிலரே. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி துண்டு துண்டாக பிரிவது ஐக்கிய தேசிய கட்சிக்கு மிகவும் அனுகூலமான ஒரு விடயமாகும்.

நாங்கள் ஏனோதானோ என்று திருடர்களை பிடித்துக்கொள்ள மாட்டோம். வாய் மூலமே காலத்தை ஓட்டுபவர்களே அதிகம். நாங்கள் அவ்வாறான திருடர்களை நிச்சயமாக கைது செய்வோம்.

மகிந்த, வீரவன்சவின் மனைவியை பார்க்க சென்றிருந்த போது, தற்போதைய வேலைகளை பாருங்கள் இது ஒரு பழிவாங்கும் அரசாங்கம் என்று கூறியுள்ளார். அவரால எப்படி இவ்வாறான ஒரு விடயத்தை கூறமுடிந்ததென எனக்கு புரியவில்லை எனறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.(இ-5)

# அரசிற்கும் எங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை

100 நாள் திட்டத்தின் மூலம் சிறப்பான அரசியல் சாசனத்திருத்தங்களை முன்னெடுக்க மக்கள் விடுதலை முன்னணி தொடர்ந்தும் முயற்சிக்கும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற நேரடி தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில், அரசாங்கத்துக்கும் எங்களுக்கும் எவ்வித பொறுப்புக்களோ அல்லது தொடர்புகளோகிடையாது என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி நாங்கள் அல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அரசியல் சாசனத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு எமது கட்சிக்கு காணப்படுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இராசி பலன்

05.03.2015
மாசி 20, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
பூரணை பின்னிரவு 12.14 மணிவரை
மகம் முற்பகல் 9.19 மணிவரை
இராகுகாலம் 1.56-3.26 மணிவரை
சுபநேரம் 7.56-9.26 மணிவரை
அமிர்தசித்தம்,பூரணை விரதம்

வளவன்

**மேடம்:** தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் நாள், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள்.

**இடபம்:** சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும் நாள்,தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கிடைக்கும்.

**மிதுனம்:** பொதுநல ஈடுபாடுகள் அதிகரிக்கும் நாள்,பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சகோதர ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**கடகம்:** தூரதேச செய்திகள் வந்து சேரல்ாம்,குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்,வருமானம் திருப்தி தரும்.

**சிம்மம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும்,சுற்பனை மிகுதியான நாள்,திடீர் பயணங்கள் உருவாகலாம்.

**கன்னி:** குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி கூடும்,விரதங்களில் நம்பிக்கை கூடும்,இடமாற்றம் ஊர்மாற்றம் என்பன இடம் பெறலாம்.

**துலாம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்,புதிய பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்,குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், ஆரோக்கியமான நாள், பொதுநல ஈடுபாடுகள் அதிகரிக்கும்.

**தனுசு:** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**மகரம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்,உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது,செலவுகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு,போசன சுகமுண்டு நண்பர்கள் சந்திப்பில் பரவசமடைவீர்கள்

**மீனம்:** உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு, பகைவரால் நன்மையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## பயத்தை எதிர்கொள்ளல்

ஆன்மீகம் 156



••இந்த முறை ஹரா-கிரி என்று அறியப்படுகிறது. நாம அனைவரும் எப்பொழுதும் மரணத்தைப் பற்றிய பயத்துடனேயே வாழ்கிறோம். எவ்வாறாயினும் அதிலிருந்து தப்பிவிடத் தயாராக இருக்கிறோம். மரணம் ஒரு மிகப் பெரும் எதிரியாகவே பார்க்கப்படுகிறது.

சாக்ரடீஸ் ஹெம்லாக் என்று அழைக்கப்படும் ஒரு விஷச் செடியின் சாற்றை அருந்த வைத்துக் கொல்லப்பட்டார். விஷத்தை அருந்துவதற்குச் சற்று முன்னார் அவருடைய சீடர் ஒருவர் கேட்டார் குருவே தங்களுக்கு இறப்பதைப் பற்றி அச்சமில்லையா? தாங்கள் மிகவும் அமைதியாகக் காணப்படுகிறீர்கள்.

சாக்ரடீஸ் சொன்னார். நான் ஏன் பயப்பட வேண்டும். இறப்பிற்குப் பின்னால் இரண்டு விடயங்கள் தான் நடக்க முடியும் என்பது எனக்குத் தெரியும். இறப்பிற்குப் பிறகு வேறு ஏதாவது ஒரு வடிவத்திலோ பெயரிலோ நான் தொடர்ந்து இருப்பேன். அல்லது இல்லாமல் போய் விடுவேன். முதலாவதைப் பற்றிக் கவலைப்பட ஏதுமில்லை. இராண்டாவதில் கவலைப்பட யார் இருக்கப் போகிறார்கள்.

அதனால் எந்த வழியிலும் அச்சப்பட எதுமில்லை!

சாக்ரடீஸ் இறப்பைப் பற்றிய அச்சம் ஏதுமின்றி இருந்தார். ஏனெனில் அவரிடம் இறப்பைப் பற்றியும் அதன் பின்விளைவுகளைப் பற்றியும் ஒரு தெளிவான புரிந்து கொள்ளுதல் இருந்தது.

மரணம் எப்பொழுதுமே ஒரு முடிவாகவே பார்க்கப்பட்டதால் மக்கள் அதனைப் பார்க்கும் பொழுது துயரப்படுகின்றனர். மரணத்தைப் பற்றிய அடிப்படையான புரிந்து கொள்ளுதல் இல்லை.

மரணம் எப்பொழுதுமே ஒரு முடிவாக இருந்ததில்லை. அது வேறு ஏதோ ஒரு வடிவத்தில் தொடர்ச்சியாகவோ அல்லது வெறுமனே விடுதலையாகவோ இருக்கிறது அவ்வளவே. இதை மனிதன் புரிந்து கொள்ளும் பொழுது இதற்காக துயரப்படுவது எவ்வளவு முட்டாள் தனம் என்பதை உணர்கிறான். மனிதன் ஸ்தூல வடிவத்தின் மீது மிகுந்த பற்று வைத்திருக்கின்றன. அதனால்தான் மிகுந்த துயரம் அடைகிறான். உடல் ஆத்மாவின் ஒரு வெறும் வாகனம் மட்டுமே இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

பூமியில் மனிதனுக்கு ஒரே ஒரு நிச்சயமான விடயம் மரணமாக இருந்தும் அது உண்மையில் நிகழும் பொழுது அவன் வியப்படைகிறான். இதுவே மனிதனைப் பற்றியே ஒரு வியப்பிற்குரிய விடயம்.

ஒரு சின்னக் கதை...

ஒரு பெண்மணி அவளது நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடிக் கொண்டிருந்தாள். அவளது குடும்பத்தினர் அனைவரும் அதில் பங்கேற்றனர். அவர்கள் உறவினர்களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் வந்த பரிசுகளை பிரித்துக் கொண்டும் வாழ்த்துக்களைப் படித்துக் கொண்டும் இருந்தனர். அவர்கள் அவளிடம் அவளுடைய 94 வயதான ஒரு சினேகிதி அனுப்பியிருந்த ஒரு வாழ்த்தைக் காண்பித்தனர். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

### பசிக்கு உணவளித்த சிறுமி: பரிசு பொருட்களை குவித்து நன்றி தெரிவிக்கும் விநோத காகங்கள்



உணவளித்து தங்களது பசியை போக்கி வரும் சிறுமிக்கு. காகங்கள் பரிசு பொருட்களை குவித்து வருகிறது. அமெரிக்காவில் உள்ள சீட்டில் நகரில் கேபி மேன்(age 8) என்ற சிறுமி தனது தாயுடன் வசித்து வருகிறார். பறவைகள் பிரியரான இவர் வீட்டு வாசலுக்கு வரும் காகங்களுக்கு தினந்தோறும் உணவளித்து வருகிறார். அந்த சிறுமிக்கு 4 வயது இருக்கும்போது. சில உணவு தானியங்களை காகங்களுக்கு போட்டு பழக்கியுள்ளார். அதன் பிறகு, அதையே அந்த சிறுமி தொடர்ந்து செய்து வந்ததால் அவரது வீடு முன்பு எண்ணற்ற காகங்கள் குவிய தொடங்கியது. சிறுமியும். காகங்களுக்கு வகை வகையான உணவுகளை அளித்து வந்துள்ளார். இந்நிலையில் தனது வீட்டின் முன்பாக. இதுவரை காணப்படாத அழகிய மின்னும் பொருட்கள் கிடப்பதை கண்டு அதை சேகரிக்க தொடங்கினார். மேலும். இந்த பொருட்கள் எவ்வாறு இங்கு வருகிறது என்பதை தனது தாயாருடன் அந்த சிறுமி கண்டுபிடிக்க தீர்மானித்தார். காகங்களுக்கு உணவு அளித்ததும். உணவை அருந்திவிட்டு பறந்து செல்லும் காகங்கள். சில மின்னும் பொருட்களை கொண்டுவந்து தனது வீட்டின் முன்பு போடுவதை கண்டுபிடித்தார். இதன் மூலம் ஆர்வம் அதிகமானதால். காகங்களுக்கு முந்திரி பருப்புகள் உள்ளிட்ட விலை உயர்ந்த தானியங்களையும் அளித்து வருகிறார். இதற்கு மாறாக. காகங்களும் தொடர்ந்து பல பரிசு பொருட்களை அந்த சிறுமியின் வீட்டுற்கு கொண்டு வருகின்றன. இதுவரை நூற்றுக்கணக்கான பரிசுப் பொருட்களை காகங்கள் கொண்டுவந்துள்ளதால். அவற்றை எல்லாம் ஒரு பொக்கிஷமாக ஒரு பெட்டி முழுவதிலும் அந்த சிறுமி சேகரித்து வைத்துள்ளார். இது குறித்து அந்த சிறுமியின் தாயார் லிசா கூறியதாவது. அவளுக்காக தயார் செய்து தரும் மதிய உணவில் பாதிக்குமேல் காகங்களுக்கு தான் போய் சேருகிறது. மேலும். ஒரு சமயம் தனது 'காண்டக்ட் லென்ஸ்' மூடியை பூங்கா ஒன்றில் விட்டுவிட்டு வந்ததாகவும். அதை ஒரு காகம் கவனமாக தூக்கி கொண்டு வந்து தனது வீட்டின் முன்பு போட்டதை அவரே நேரில் பார்த்ததாக கூறியுள்ளார். இந்த விநோத சம்பவம் குறித்து விலங்குகள் மற்றும் பறவைகள் நல ஆர்வலர் ஜான் மார்சுலாப் கூறுகையில். காகங்கள் பொதுவாக ஒன்றொடு ஒன்று ஒலிகள் மூலம் தகவல்களை பரிமாறிக் கொள்ளும் திறன் கொண் டது. மேலும். பறவைகளுடன் நெருக்கமான தொடர்பு வைத்துக் கொள்ளும் போது அது தனது முதலாளிகளுக்கு விஷேச பொருட்களை கொண்டு வருவதை தானும் நேரடியாக பார்த்துள்ளதாக தெரிவித்துள்ளார். சிறுமிக்கு காகங்கள் தினமும் வகை வகையான பரிசு பொருட்களை குவித்து வரும் இந்த சம்பவம் அந்த பகுதி மக்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சமைப்போம் சுவைப்போம்

## வெண்ணிலா ஐஸ்கிரீம்



தேவையான பொருட்கள்:

கிரீம் - 1 கப்

பால் - 1 கப்

சர்க்கரை - 1/2 கப்

வெண்ணிலா எசன்ஸ் - 1/2 டீஸ்பூன்

ஐஸ் கட்டிகள் - 4 கப்

கல்லுப்பு - 1 கப்

ஜிப்லாக் பை or கெட்டியான பிளாஸ் டிக் பை - 1

டக்ட் டேப் or செல்லோ டேப் - 1

ஹார்லிக்ஸ் பாட்டில் or டப்பா - 1

**செய்முறை:**

பால், கிரீம், வெண்ணிலா எஸ்ஸெ ன்ஸ், சர்க்கரை எல்லாவற்றையும் பிளாஸ்டிக் பையில் ஊற்றவும். பிறகு ஒரு நல்ல இறுக்கமாக பிடிக்கும் டேப் கொண்டு மூடி ஒட்டவும். இது இறுக்கமாக பிடிக்க வேண்டும். ஏனென்றால் இதை நன்றாக உலுக்கும்போது பால் வெளியே வந்து விடும். இப் போது டப்பாவில் இந்த பிளாஸ்டிக் பையை போட்டு அதன் மேல் ஐஸ்கட்டிகள், உப்பு எல்லாவற்றையும் போட்டு நன்றாக மூடவும். இதையும் தண்ணீர் வெளிவராமல் இரு க்க டேப் போட்டு ஒட்டலாம். இப்போது நன்றாக பத்து நிமிடம் குலுக்கவும். அதிக நேர மும் குலுக்கலாம். பிறகு இந்த டப்பாவைத் திறந்து, பையை எடுத்து அதை ரெஃப்ரிஜ்ரேட்டரில் இருக்கும் ஃப்ரீஜரில் வைக்கவும். அரை மணிநேரம் கழித்து இந்தப் பையை திறந்து பாருங்கள். சுவையான வெண்ணிலா ஐஸ்கிரீம் ரெடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸா பள்ளத் தாக்கில் தொழிற்பயிற்சி நிலையம்

## 13 கோடி ரூபா மகிந்தவால் செலவிடப்பட்டதாக பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

பாலஸ்தீனத்தின் காஸா பள்ள த்தாக்கில் மகிந்த ராஜபக்ஷ தொழிற்பயிற்சி மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்கு 13 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே பிரதமர் ரணில் விக்ரமசிங்க இவ்வாறு மேற்க ண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள் மக்களுக்கு சேவையாற்றாமல் மக்கள் நிதியில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றார்கள்.

முன்னாள் பிரதமர் டட்லி சேனாநாயக்க, மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன ஆகியோர் முன்னெடுத்த கொள்கைகள் மகிந்த சிந்தனையில் மாற்றப்பட்டுள்ளன.

குறித்த திட்டங்களை முன்னெடுப்பதற்கு தமது சொந்த பணத்தை செலவிடாமல் மக்களின் பண த்தை செலவிடுவதே மிகவும் கவ லைக்குரிய விடயமாகும்.

மேலும் இலங்கையின் உயர் தலைமைகளின் விடுமுறை விடுதிகளுக்காக அதிக பணம் செலவிடப்பட்டுள்ளதுடன், அவற்றில் 50இற் கும் அதிகமான அறைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்நிலையில் உயிருடன் இருப்பவர்களின் பெயர்களை அபிவிருத்தி திட்டங்களுக்கும், கட்டடங்களுக்கும் வைக்கும் கலாசாரத்தை தான் ஒருபோதும் அனுமதிக்க போவதில்லை எனவும் பிரதமர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-5)

# சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம் நடத்தும் சமயப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

ஆன்மீகம் மற்றும் மானுட மேம்பாட்டுடன் தொடர்புடைய அறிவை மேம்படுத்தி அவ் அறிவைப் பெற்றவர்களைப் பயன்படுத்தி சமூகத்தில் ஆன்மீகம் மற்றும் மானுட மேம்பாட்டுடன் தொடர்புடைய வேலைத்திட் டங்களை மேற்கொள்வதற்காக 3 நாட்கள் வதிவிடப் பயிற்சி நெறியொன்று தொண்டைமானாறில் அமைந்துள்ள செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தப்படவுள்ளது.

அப்பயிற்சி நெறி தொடர்பான சில முக்கிய விபரங்கள் வருமாறு,

21 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இலங்கையின் எல்லாப் பாகத்திலிருந்தும் விண்ணப்பங்கள் பெறப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ளும் அனைவரும் சிவதீட்சை பெறுவதற்கும் பயிற்சி வேளையில் வழங்கப்படும். சிவதீட்சை பெற்ற அன்றிலிருந்து தொடர்ந்து 21 நாட்களுக்கு சைவ உணவு மட்டுமே அருந்துவதற்கும் உறுதி கொண்டவர்களாயிருத்தல் வேண் டும்.

பயிற்சிக்குரிய 3 நாட்கள் சனி, ஞாயிறு ஆகிய நாட்களுடன் வெள்ளி அல்லது திங்கள் உள்ளடக்கியதாக அமையும்.

இப்பயிற்சியில் 50 தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் இணைத்துக் கொள்ளப்படுவர்.

50 இற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்தால் இப்பயிற்சிக்குப் பொருத்தமானவர்கள் என்று இனங்காணப்பட்ட அனைவரும் ஓர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு மிகத் தகுதியான 50 பேர் தெரிவு செய்யப்படுவார்கள்.

இப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் பின்வரும் தொலைபேசிக்கு குறுந்தகவல் அல்லது மின்னஞ்சலுக்கு உங்கள் பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் மின்னஞ்சல் இருப்பின் மின்னஞ்சல் முகவரியையும் அனுப்பினால் தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் விண்ணப்பப்படிவம் அனுப்பி வைக்கப்படும்.

தொலைபேசி இலக்கம் 077 868 6150 மின்னஞ்சல் arivukkathir@gmail.com என்பனவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

பயிற்சியை நிறைவு செய்து சான்றிதழ் பெறுபவர்கள் சமயம் சமூகம் சார்ந்த தொண்டுச் செயற்பாடுகளில் தத்தம் மாவட்டங்களில் ஈடுபடலாம்.

விண்ணப்பப்படிவம் கிடைக்கவேண்டிய கடைசிநாள் 13.03.2015 பிற்பகல் 4 மணியாகும்.

தபால் மூலமான விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம், 48, புனித மரியாள் வீதி, திருகோணமலை என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# நிலாமுற்றம் பகுதி 26 நிகழ்வு

வவுனியா நகரில் சுற்றுலா துறை இடங்களை இனங்காணலும் அபிவிருத்தி செய்தலும் என்ற தொனிப்பொருளில் நிலாமுற்றம் பகுதி 26 என்ற நிகழ்வு இன்று பிற்பகல் 4 மணி தொடக்கம் 6:30 மணிவரை வைரவ புளியங்குளம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நேசன் பொப்புலர் ரவல்ஸ் அன்ருவர்ஸ் முகாமையாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வவுனியா பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம சேவையாளர், கிராம அபிவிருத்தி சங்க தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)


# ST. JOHN'S COLLEGE, JAFFNA. CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA, THE JAFFNA ACADEMY AND SCHOOL OF TECHNOLOGY.

ADMISSION- ST.JOHN'S COLLEGE:2016 FOR GRADE-1, GRADE-4,GRADE-6,GRADE-10 & A/L CHUNDIKULI GIRLS' COLLEGE:- 2016 FOR GRADE-1,GRADE-6 & GRADE-12

01. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 02.03.2015 முதல் 16.03.2015 வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 21.03.2015 சனிக்கிழமை. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

02. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்படவேண்டும்.

03. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

04. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா. 1000/=

05. வயதெல்லைகள்:

அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2010 இற்கும் 31.01.2011 இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2007 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

இ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2005 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

ஈ. தரம் 10 விண்ணப்பதாரி 01.02.2001 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

06. தரம் 12 (A/L-2018 Batch) விண்ணப்பதாரி 01.02.1999 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

07. தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 17.10.2015 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:-

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.

02. தரம் 12 இற்கு (A/L-2018 Batch) தமிழ் மொழி மூலம் (தொழில் நுட்பத்துறை, விஞ்ஞானம், கணிதம்- வர்த்தகம்), ஆங்கில மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம் ) London A/L 2016/2017 இற்கும் கற்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் சென். ஜோண்ஸ் கல்லூரியினால் ஏற்றுக் கொள்ளப்படும். அனுமதிப்பரீட்சை 02.01.2016 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 06.01.2016 ஆரம்பமாகும்.

03. சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L) (தமிழ்/ ஆங்கில மொழி மூலம் 2018 Batch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

04. The Jaffna Academy and School of Technology இல் Gr.5 மற்றும் 2 ஆம் தடவையாக O/L, A/L எடுக்கும் மாணவர்களினதும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(C-272) அதிபர்கள்.


# கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

சிறுவர் கழகங்கள் மற்றும் யாழ். சமூக செயற்பாட்டு மையம் என்பன இணைந்து நடத்தும் சிறுவர் கழ கங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

புளியங்கூடல் மகாமாரி சிறுவர் கழகத்தைச் சேர்ந்த பாஸ்கரன் பார்த்தீபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் அலுவலக செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செல்வி. வைரமுத்து தர்சினி, வேலணை மத்திய கல் லூரி அதிபர் சி.கிருபாகரன் ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)


## தேவை

விருப்பமில்லையா? 35000/- சம்பளத்தில் பால்மா / பிஸ்கட்/ சொக்லெட்/ தொழிற்சாலைகளில் சேவை செய்ய ஆண்/ பெண் 18-50 வயதிற்கிடையில் இருபாலாரும் தேவை. தொடர்புகளுக்கு:- 077 292 6515 (9634)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 02 | | 16 |
| 11 | | 03 |
| 1929 | | 2014 |



## அமரர் செல்லமுத்து கணகி

திதி:-05.03.2015

இதயத்தின் தூறலில் உயிர்பிழந்து போனது
நேற்றிருந்த உறவு ஒன்று இன்று முடிந்து போனது
காத்திருந்த உறவு கண்விழித்துப் பார்த்திருக்க
பார்த்திருந்த மரணம் பரிதவிக்கச் செய்தது.

கலாசாலை வீதி,
பாரதிபுலம், திருநெல்வேலி.

(C-273)

மகன் செல்லமுத்து துரைசிங்கம்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவகற்றுவதில் ஊழியர்கள் சிரமங்களுக்குள்ளாகின்றனர்

(கரணவாய்)


நெல்லியடி வர்த்தக சங்கத்திற்குட்பட்ட கடைகளில் இருந்து பல்வேறுபட்ட நேரங்களில் கழிவுகள் வெளியே கொட்டப்படுவதனால் கழிவகற்றும் ஊழியர்கள் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

அத்துடன் அகற்றப்படாமல் கடை வாயில்களின் அருகே கொட்டப்படும் கழிவுகள் நாய்களினால் இழுத்து செல்லப்படுவதுடன் பரப்பப்படுவதனால் சுகாதார சீர்கேடுகளுக்கும் வழி சமைப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் கடை உரிமையாளர்கள் பல்வேறுபட்ட நேரங்களில் தமது கடைகளைப் பூட்டும் போது கழிவுகளை கடைக்கு வெளியே வைத்துவிட்டு செல்கின்றனர்.

இதனால் கழிவகற்றும் செயற் பாடுகளை ஒருங்கிணைத்து மேற்கொள்ள முடியாத சூழ் நிலை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே கழிவகற்றும் ஊழியர்கள் வரும் பொழுது அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்க்க முடியுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-3-60)




## வைரவர் வழிபாடு நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார் பண்ணை வெள்ளாந்தெரு நல்ல தண்ணிக்கிணற்றடி அருள்மிகு ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவ காலங்களில் தெய்வீக பேருரை ஆற்றி வந்த மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் சொற் பொழிவாற்றிய விடயங்களைத் தொகுத்து ஆலய பரிபாலன சபையினரால் வைரவ வழிபாடு எனும் நூல் இன்று மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது. (இ-3)

## நிர்வாகத்தெரிவு

(கரணவாய்)

நெல்லியடி இராசகிராமம் சன சமூக நிலையத்தின் இவ்வாண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக வே.தங்கேந்திர ராஜா, செயலாளராக த.தவசீலன், பொருளாளராக க.கருணகரன், உப தலைவராக கி.கிருஷ்ணராசா, உப செயலாளராக த.சவுந்ருபினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள் ளனர். (இ-3-60)

# மாற்றுவலுவுடைய பெண்கள் பிறரில் தங்கியிருக்காது உழைத்து முன்னேறும் நிலைக்கு மாற்றப்பட வேண்டும்

## வலி.மேற்கு தவிசாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாற்றுவலுவுள்ள பெண்களுக்கு பல்வேறு ஊக்குவிப்புகள் மற்றும் உதவிகள் வழங்குவதன் வாயிலாக பிறரில் தங்கியிருக்கும் நிலையிலிருந்து தாமாகவே உழைக்கும் உற்பத்திகளுக்கு வலுச் சேர்ப்பவர்களாக மாற்ற முடியும் என வலி.மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் திருமதி. நாகரஞ்சனி ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

வ்லி.மேற்குப் பிரதேச சபையினால் பிரதேச ரீதியாக அமுல்படுத்தப்பட்டு வரும் மகளிர் எழுச்சி வாரத்தில் மாற்றுவலுவுள்ள பெணகளுக்கான குடிநீர் மற்றும் சுகாதாரம் தொடர்பிலான கருத்தமர்வு கடந்த முதலாம் திகதி இடம்பெற்றுது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

50 இற்கும் மேற்பட்ட மாற்றுவலுவுள்ள பெண்கள் கலந்து கொணட இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மகளிர் எழுச்சி வாரத்தினை ஆரம்பித்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். வெறுமனே மகளிர் தினத்தினை அனுஷ்டிப்பதற்கு மேலாக ஒரு வார காலமாக மகளிர் தொடர்பிலான பல்வேறு நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்து அதன் வாயிலாக மகளிர் தினத்திற்கும் மகளிருக்கும் பெருமை சேர்ப்பதே எனது இலக்காக உள்ளது.

இந் நிகழ்விலும் இன்றைய எழுச்சி நாள் ஒன்றில் மாற்று வலு உள்ள மகளிர் தொடாபில் அவர்களது தேவைகளை ஆராய்ந்து அதன் வாயிலாக அவர்கள் தொடர்பிலான பல்வேறு உதவித் திட்டங்களை ஆரம்பிப்பதே இலக்காக உள்ளது.

இம் மாற்று வலுவுள்ளவர்கள் தொடர்பில் சமூகம்சார் சிந்தனையாளர்கள் மிக முக்கியம் வழங்க வேண்டியது அவசியமான ஒன்றாக அமைந்துள்ளது. இம் மாற்றுவலுவுள்ளோர் தொடர்பில் பல்வேறு தேவைகள் உள்ளது. இவர்களையும் எமது சமுதாயத்தின் பல்வேறு தேவைகள் தொடர்பில் பயன்படுத்த முடியும். இவர்களுக்கான பல்வேறு ஊக்குவிப்புக்கள் மற்றும் உதவிகள் வழங்குவதன் வாயிலாக பிறரில் தங்கியிருக்கும் நிலையில் இருந்து தாமாகவே உழைக்கும் உறபத்திகளுக்கு வலுசேர்ப்பவர்களாக இவர்களை மாற்ற வேண்டும்.

இந் நூற்றாண்டில் பெண்களது சாதனைகள் பல பல விடயங்களில் பல கோணங்களில் பெண்கள் பல் பரிமாணங்களைக் கொண்டவர்களாக மாற்றம் அடைந்து வருகின்றமை யாவரும் அறிந்த ஓர் விடயம். இந்த வகையில் எமது பிரதேசத்திலும் பெண்கள் பல்வேறு மாற்றங்களை முனனேற்றம் நோக்கிய தானதாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ் விடயம் தொடர்பில் இம் மகளிர் வாரத்திலேயே பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கையை முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதேவேளை இவ் எழுச்சி வாரத்தில் தினமும் ஒவ்வோர் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

குறிப்பாக இம் மாற்றுவலுவுள்ளோர் தொடர்பில் அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்த கொடுப்பனவு தொடர்பில் அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உரிய முறையில் முன்வைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

இதேவேளை இது வரை உதவிக் கொடுப்பனவுகள் பெறாதோர் தொடர்பில் அவர்களுக்கு கொடுப்பனவினை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)




# சுமந்திரனின் உருவப்பொம்மை மீண்டும் யாழ்ப்பாணத்தில்!




(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனின் தேசத்துரோகி சுமந்திரன் என எழுதப்பட்ட உருவப்பொம்மை வடக்கு மாகாண சபை, மாட்டின் வீதியிலமைந்துள்ள தமிழரசுக்கட்சியின் பணிமனை என்பவற்றுக்கு முன்னாலும் கரவெட்டியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காரியாலயம் முன்பாகவும் தொங்க விடப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இச் செயற்பாட்டிற்கு இளைஞா அணி எனவும் துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் முதல் இவ் உருவப்படம் தொங்கவிடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (இ-4-60)

## கருத்துரை

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் ஐக்கிய நாடுகள் சபையும் மனிதவுரிமையும் என்ற தலைப்பில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கருத்துரை இடம்பெறவுள்ளது.

இலக்கம் 62, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் கருத்துரையை அகிலன் கதிர்காமர் வழங்கவுள்ளார். (இ-3)

## நூல் வெளியீடு

வி.விஷ்ணுகரன் எழுதிய பிறையில் முறையியல் நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதி சுங்க அத்தியட்சகர் செ.சக்திதரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவின் சிரேஷ்ட மருத்துவர் டாக்டர்.சி.யமுனாநந்தா கலந்து கொள்வார். (இ-5)

# போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் வடமாகாணததில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு பின்வரும் பயிற்சி நெறிகளை கற்பிக்கும் போதனாசிரியர்களிற்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

மின்னிணைப்புத் தொழில் நுட்பவியலாளர், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்படவியலாளர், மரவேலை கைவினைஞர், முன்பள்ளி ஆசிரியர், அறை பராமரிப்பாளர், அழகுக்கலை நிபுணர், கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர், சமையலாளர், மின்மோட்டார் வைண்டிங்கைவினைஞர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர், நீர்க்குழாய் பொருத்துநர். கல்வித்தகைமை க.பொ.த. (சாதாரணதர) தமிழ் உட்பட 4 திறமை சித்திகளுடன் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**தொழில்சார் தகைமை**

அரசாங்க அங்கீகாரம் பெற்ற NVQ மட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 3 வருட காலத்திற்கு மேல் தொழில் அனுபவச் சான்றிதழ் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா அல்லது பட்டம் பெற்றிருத்தல்.

அனுபவம் சம்பந்தப்பட்ட துறையில் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் 2 வருடத்திற்கு மேலான அனுபவம்.

எனவே மேற்படி தகைமைகளுடைய ஆர்வமுடையவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை விண்ணப்பிக்கும் கற்கை நெறியினை குறிப்பிட்டு எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்பதாக உதவிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, 1 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## தேவாரத்திரட்டு முற்றோதல் இன்று

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்ற மாதாந்த பூரணை தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.சிவதொண்டன் நிலைய நாயனார் மண்டபத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடை பெறவுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி ஆசிரியை நஸ்பியா அஜீத்தின் *சிதறல்களில் சில துளிகள்* எனும் நூல் வெளியீட்டு விழா வைபவத்தில் யாழ்.எழுத்தாளர் அல்ஹாஜ் எம்.எப்.எம்.இக்பாலை (ஜே.பி) கௌரவித்து பாணந்துறை ஜீலான் நவோதய கல்லூரி பிரதி அதிபர் முபராக் மௌலவி பொன்னாடை அணிவிப்பதையும் இவ்விழாவின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மகளிர் விவகார பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனையும் நூலாசிரியரையும் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

# முழுநிலா நாள்

தென்மராட்சி உயர்கலைக் கல்லூரியின் 8 ஆவது முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை மீசாலை மற்றும் கிளிநொச்சியிலும் நடைபெறவுள்ளது.

2015 உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள விதாதா கல்விவள நிலையத்தில் அரசியல் விஞ்ஞானம், தொழில் நுட்பவியல் பாடங்களும் மீசாலை உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் தமிழ் பாடநெறியும் காலை 8.30 மணிமுதல் பி.ப 3 மணிவரை நடைபெறவுள்ளது. (இ-29)

# நாங்கள் தவறு செய்யவில்லை

## நாமல் எம்.பி கூறுகிறார்



தங்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக குற்றமற்றவர்கள் என்று நிரூபிக்க எந்த நேரத்திலும் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள அரச களஞ்சியத்தில் இருந்து மீட்கப்பட்ட சிறியரக ஹெலிகொப்டர் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோசிதவிடம் வாக்குமூலத்தை பெறுவதற்காக அவரை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் அழைத்திருந்தனர்,

யோசித வாக்குமூலம் வழங்க சென்ற சந்தர்ப்பத்தில் நாமல் குறித்த இடத்திற்கு வருகை தந்துள்ளார். அதன் போது நாமல் இவ்வாறு ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் யோசித ராஜபக்ஷவிடம் 2 மணித்தியாலங்கள் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

அதன்போது ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த நாமல் ராஜபக்ஷ,

நாங்கள் அரசாங்கத்தில் இருந்த காலத்திலும் பலவிதமான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

நாங்கள் எந்த சந்தர்ப்பத்தில் எங்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பாக குற்றமற்றவர்கள் என்று நிரூபிக்க தயாராக உள்ளோம் என தெரிவித்திருந்தோம் எனவும் தாங்கள் தவறு எதுவும் செய்யவில்லை எனவும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# முறைப்பாடு செய்தால் கோத்தவிடம் விசாரணை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டால் விசாரணை நடத்தத் தயார் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி அண்மையில் நாடு திரும்பிய போது கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எதிராக சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஊடகங்களின் முன்னிலையில் அவரால் சுமத்தப்பட்டிருந்தது.

கடந்த கால அரசாங்கத்தின் ஆட்சியின் போது இடம்பெற்ற கடத்தல்கள், காணாமல் போதல்கள் மற்றும் கொலைகள்தொடர்பில் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்தால் விசாரணை நடத்தத் தயார் என தற்போதைய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

பிரசாந்த ஜயகொடி, உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பாதுகாப்புச் செயலாளர் தமக்கும் தமது குடும்ப உறுப்பினர்களுக்கும் கொலை மிரட்டல்களை விடுத்ததாக குற்றம் சுமத்தியிருந்தார்.

வெள்ளை வான் கலாசாரம் தொடர்பிலான சகல விபரங்களையும் வெளியிடத் தயார் எனவும் விசாரணை நடத்தப்பட்டால் அதற்கான சாட்சியங்களை முன்வைக்கத் தயார எனவும் பிரசாந்த ஜயகொடி கூறியிருந்தார். வெள்ளைவான் கடத்தல்கள் கொலைகளுடன் இராணுவ அதிகாரிகளுக்கே தொடர்பு உண்டு என அவர் தெரிவித்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என தற்போதைய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். (இ-5)


இவர்களுக்கு கல்யாண மாலை இவர்களுக்கு

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 12 1/2 சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L கனடா PR<br>தொ.இ: B/4215 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 21 1/2 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: ஆயுள்வேத மருத்துவபீட மாணவி<br>தொ.இ: G/4222 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 513/4<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4217 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் கி.பா: 21 செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>தொ.இ: G/4226 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 431/4 செவ் 2 இல்<br>உயரம்: 174cm<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4218 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 18<br>உயரம்: 166cm<br>தகைமை/தொழில்: BSC, BIT சுவிஸ் PR<br>தொ.இ: G/4228 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 22 சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4220 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 38<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BIT, IT/ தனியார் தொழில்<br>தொ.இ: G/4229 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail: kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# அகிலஇலங்கை இந்துமாமன்றத்தால் நடத்தப்படும் நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றத்தால் நடத்தப்படும் இலங்கையின் சைவத்தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம்-ஓர் ஆய்வு நூல் வெளியீடு எதிர்வரும் சனிக்கிழமை பி.ப 4.30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும், இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்களும், ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ஆன்மீகச்சுடர் தொண்டுநாதன் சுவாமிகளும் வழங்கவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டனின் தலைமையுரையும் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரித்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி மா.வேதநாதனின் அறிமுகவுரையும் இடம்பெறும்.

நூல் சமர்ப்பண உரையை நூலாசிரியராகிய யாழ்.பல்கலைக்கழக இந்து மெய்யியல் இந்து நாகரிகத்துறை வருகைதரு விரிவுரையாளராகிய திருமதி. செல்வ மனோகரன் ஆற்றுவதோடு நூலின் ஆய்வுரையை கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம.பாலகைலாசநாதசர்மா ஆற்றுவார். இதனைத் தொடர்ந்து அன்றைய நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் வடமாகாண முதலமைச்சர் சத்தியவித்தகர், நீதியரசர் சீ.வீ.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினர் உரையை ஆற்றுவார்.

நிறைவுரையை இந்து மாமன்றத் துணைத்தலைவரும் யாழ்.இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆற்றுவார்.

இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பாடசாலை மாணவர்கள், அன்பர்கள், புத்திஜீவிகள் மற்றும் ஆதரவாளர்களை அகில இலங்கை இந்து மாமன்றம் கேட்டுள்ளது.(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸ் வங்கிகளில் இலங்கையர் வைப்பு துருவப்படும்

(கொழும்பு)

**சுவிட்ச்லாந்து வங்கிகளில் இலங்கையர்கள் வைப்புச் செய்துள்ள பணம் தொடர்பில் விசாரணை செய்யப்பட உள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுவிட்சர்லாந்து வங்கிகளில் 90 பேருக்கு கணக்குகள் காணப்படுகின்றன.

சுமார் 129 வங்கிக் கணக்குகளில் 85 மில்லியன் சுவிஸ் பிராங்க் பணம் வைப்பு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், மொடல் அழகிகள் போன்றவர்கள் பணத்தை வைப்புச் செய்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளது.

நாட்டின் நிதிச் சட்டங்களுக்கு அமைவாக இந்தப் பணம் சம்பாதிக்கப்பட்டதா இல்லையா என்பது குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது.

சட்டவிரோத நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் இதுவரையில் முறைப்பாடு செய்யப்படவில்லை.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாக இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் கருணாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளனவா என்பது குறித்து விசாரணை நடத்தப்படுமா என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார நேற்று முன்தினம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் தெரிவித்தார். (இ-5)

# பேசும் படம்-43

இடம்:- யாழ்ப்பாணம், கல்லுண்டாய் வெளி



உப்புக் காத்தில சைக்கிள் கறள்கட்டிடுமாம்
அதனாலதான் இந்த போர்வை!

குறிப்பு: அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்,

மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது நேரில்.

அனுப்பியவர்:




வி.கபிலானந், யாழ்ப்பாணம்.

உங்கள் புகைப்படங்களை பிரசுரிக்க விரும்பினால் பேசும் படத்துடன் அனுப்பி வைக்கவும்.

# மத்தள விமான நிலையம் இனி இரவில் மூடப்படும்!

## அமைச்சர் அர்ஜுன தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால், அம்பாந்தோட்டையில் தனது பெயரில் அமைக்கப்பட்ட, மத்தள சர்வதேச விமான நிலையம் இனி இரவில் மூடப்படவுள்ளது.



இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட இலங்கையின் விமானப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, அரசாங்கத்துக்கு வருமானத்தை அளிக்காததால், இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்

மத்தள விமான நிலையத்தை இரவு நேரத்தில் மூடுவது குறித்து கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம்.

இந்த விமான நிலையத்தின் பராமரிப்புக்காக அரசாங்கம் 250 மில்லியன் ரூபாவைச் செலவிட வேண்டியுள்ளது.

வரி செலுத்துவோரின் பணத்தில் இருந்தே, இந்த விமான நிலையம் பராமரிக்கப்படுகிறது.

இந்த விமான நிலையத்தை முற்றாக மூடுவதற்கு எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மில்லியன் கணக்கான டொலரை சீனாவிடம் இருந்து பெற்று இந்த விமான நிலையத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிர்மாணித்திருந்தார்.

மகிந்த ராஜபக்ஷவினால் அனைத்துலக விமான நிலையம் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த விமான நிலையம் வழியான சேவைகளை கடந்த ஜனவரி மாதம், ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுத்தி விட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# முன்னாள் கடற்படை தளபதி கப்பக்குழு தொடர்பில் முறைப்பாடு செய்யவில்லை

(கொழும்பு)

முன்னாள் கடற்படைத் தளபதி கப்பக்குழு தொடர்பில் முறைப்பாடு செய்யவில்லை என உயர் கடற்படை அதிகாரியொருவர் கூறியுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி வசந்த கரன்னாகொடவினால் அண்மையில் புலனாய்வுப் பிரிவினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன தொடர்புகளைப் பேணிய நேவி சம்பத் என்பவர் பற்றியே இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

லெ[illegible]ன் கொமாண்டர் எம்.ஏ. டி.எ[illegible]பத் எனப்படும் சம்பத் முணசிங்க அல்லது நேவி சம்பத் தொடர்பில் முறைப்பாடு செய்திருந்தார் என அவர் தெரிவித்தார்.

முன்னாள் கடற்படை பேச்சாளர் கே.பி. தஸாநாயக்க வழிநடத்திய கும்பல் ஒன்று இளைஞர்களை கடத்தி கப்பம் பெற்றுக் கொண்டு, அவர்களை கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அண்மையில் இது பற்றிய தகவல்களை ஊடகங்களில் வெளியிட்டிருந்தார்.

எனினும் குறித்த பேச்சாளர் கப்பக்குழுவினை வழிநடத்தியதாக தாம் கூறவில்லை எனவும், கப்பக் குழுவுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ கடமைகளில் பொறுப்பதிகாரியாக கே.பி. தஸாநாயக்க கடமையாற்றினார் என்றே தாம் கூறியதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன சிங்கள ஊடகத்திற்கு தெரிவித்துள்ளார்.

கப்பக்குழு மற்றும் கொலைகள் தொடர்பில் இதுவரையில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# வாக்குமூலத்துக்காக யோசிதவுக்கு அழைப்பு

கடந்த ஜனவரி மாதம் 13ஆம் திகதியன்று கொழும்பு நாரஹேன பிட்டியில் உள்ள அரச களஞ்சியத்தில் இருந்து மீட்கப்பட்ட சிறியரக ஹெலிகொப்டர் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோசித்தவிடம் வாக்குமூலம் பெறப்படவுள்ளது.



வாக்குமூலத்தை வழங்குவதற்காக அவரை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர் அழைத்துள்ளதாக தெரியவருகிறது.

குறித்த ஹெலிகொப்டர் சிங்கள திரைப்பட தயாரிப்பாளர் சந்திரன் ரட்ணத்துக்கு சொந்தமானது எனவும் எனினும் யோசித்த கோரியமையால் அதனை தாம் அவருக்கு வழங்கியதாக சந்திரன் ரட்ணம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# முகப்புத்தகத்தில் விருப்பம் கேட்கும் ஆபாச இணைப்பை அழுத்தாதீர்கள்

ஆபாச புகைப்படங்கள் மற்றும் ஆபாச தகவல்கள் அடங்கிய இணைப்புகளை (லிங்க்) முகப்புத்தக கணக்குகளுக்கு அனுப்புவதன் மூலம் முன்னெடுக்கப்படவிருந்த பாரியதொரு சமூக சீரழிவு, அமெரிக்காவிலுள்ள முகப்புத்தக தலைமையக அதிகாரிகளினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை கணனி அவசர நடவடிக்கைப் பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்தா தெரிவித்தார்.

இவ்வாறான இணைப்புக்கள் கிடைப்பதான ஐந்து முறைப்பாடுகள், இலங்கை கணனி அவசர நடவடிக்கைப் பிரிவுக்கு கிடைத்துள்ளதாகவும் தெரிவித்த சந்திரகுப்தா, முகப்புத்தக கணக்கை பேணுபவர், குறித்த இணைப்பு தொடர்பில் தேடியறியாமல் அதனை அழுத்துவதன் (க்ளிக் செய்தல்) மூலம் தேவையற்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறார் என்றார்.

அத்துடன், இந்த இணைப்பை அழுத்துவதால் கணக்கை பேணுபவரின் தொடர்பில் உள்ள ஏனைய பின்பற்றுநர்களின் கணக்குகளுக்கும் அந்த ஆபாச இணைப்பு போய் சேமிக்கப்படுகிறது.

இது தொடர்பில் முகப்புத்தக தலைமையகத்துக்கு இலங்கை கணனி அவசர நடவடிக்கைப் பிரிவினால் அறிவிக்கப்பட்டது.

இருப்பினும், இந்த பிரச்சினை ஏனைய பல நாடுகளும் எதிர்கொண்டு வந்திருக்கின்றன. இறுதியில், இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முகப்புத்தக தலைமையகம் நடவடிக்கை எடுத்து அதனை தடுத்து நிறுத்தியுள்ளது.

இந்த பிரச்சினையை கவனத்திற் கொண்டு, இனிவரும் காலங்களிலாவது முகப்புத்தக்க பாவனையாளர்கள் கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.

எக்காரணம் கொண்டும், தாங்கள் அறிந்திராத இணைப்புக்களை அழுத்தி பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டாம் என்று சந்திரகுப்தா மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கையில் முகப்புத்தகம் ஊடாக பல சமூக விரோதச் செயற்பாடுகள் இடம்பெற்று வந்த நிலையில் கணனி அவசர நடவடிக்கைப் பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தீர்வுத்திட்ட பேச்சுக்கள் இரகசியம் பேணப்படுவது ஏன்?

## ஒருங்கிணைப்பாளர் ஜெகன் கேள்வி

தமிழ் மக்கள் தமது அபிலாசைகளை பெற்றுக்கொள்ளமுடியும் என்று இலங்கை அரசியலின் மாற்றத்துக்காக தமது பங்களிப்பை வெளிப்படுத்தியிருந்தும் மீண்டும் ஏமாற்றமடைந்தவர்களாக வீதியிலிறங்கி போராடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்காக எதனை வேண்டுமென்றாலும் கூறிவிடுபவர்களின் கரங்களிலிருந்து தமிழ்மக்கள் என்று விடுபடுகின்றனரோ அன்றுதான் எமது இனத்துக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கான அடித்தளத்தை இடமுடியும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி. குகேந்திரன் (வி.கே. ஜெகன்) தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை தொகுதிக்கான கட்சியின் ஆதரவாளர்களுடனான கலந்துரையாடல் அண்மையில் கட்சியின் தெல்லிப்பழை காரியாலயத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஒருங்கிணைப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீண்டகாலமாக உரிமைப்பிரச்சனைகளுக்கு தமது அனைத்து வகையான பங்களிப்பையும் செய்து வந்த தமிழ் மக்களை பகடைக்காய்களாக வைத்துக்கொண்டு அரசியலில் உண்மைத்தன்மைகளை அவர்களுக்கு தெரிவிக்காது தமிழர் உரிமைப்பிரச்சினை தீர்வுகளுக்கு தாங்கள் மத்திய அரசுடன் பேசுவதாக கூறும் தரப்பினர் எத்தகைய தீர்வுத்திட்டத்தை எமது உரிமை விடயத்தில் முன்வைத்துள்ளனர் என்று இதுவரை எவருக்கும் தெளிவுபடுத்தவில்லை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் தற்போது மீண்டும் தமது அரசியல் பதவியை தக்கவைக்க வேண்டும் என்ற தருணம் வந்துள்ளதை உணர்ந்துள்ள அவர்கள் மக்களை மறுபடியும் ஏமாற்றுவதற்கு கிளம்பியுள்ளனர். ஆனால் தற்போது இவர்களது செயற்பாடுகளை மக்கள் தெரிந்துகொண்டதன் வெளிப்பாடுகள் தான் அண்மைய கால அவர்களது உட்கட்சி முரண்பாடுகளுக்கு காரணம் என பரவலாக பேசப்படுகின்றது.

தமிழர் அபிவிருத்திகளுக்காக பல்வேறுபட்ட எதிர்ப்புகளின் மத்தியிலும் உள்ழைத்தவர்கள் ஒருபுறமிருக்க, ஒரு சிறு செங்கல்லுக்கு கூட பங்களிப்பு செய்யாத சிலர் தற்போது பிரமாண்டமாய் எழுந்துநிற்கும் குடாநாட்டின் அபிவிருத்திகளில் தமது பதிவுகளை வைப்பதற்காய் நாடாக்கள் வெட்டுவதை பார்க்கும் போது தமிழரது அரசியல் நகர்வுகள் எவ்வளவு வங்குரோத்து நிலைக்கு சென்றுவிட்டது என நினைத்து வெட்கப்படவேண்டியுள்ளது.

ஒவ்வொரு மாற்றத்திலிருந்தும் தான் பல படிப்பினைகளை கற்றுக் கொள்ள முடிகின்றது. அந்த வகையில் இன்றைய அரசியல் மாற்றமானது எமது கட்சியின் புத்தெழுச்சிக்கான மாற்றமாகவே எமது ஆதரவாளர்களால் பார்க்கப்படுகின்றது.

மாற்றுக் கருத்துக்களுக்கும் மாற்று செயற்பாடுகளுக்கும் ஊடகங்கள் இடங்கொடுத்து மக்களுக்கு தெரியப்படுத்துவதனூடாகவே தமிழ் மக்களது உரிமைகளுக்கான தெளிவர்ன பாதைகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.

நடைமுறை சார்ந்ததும் மக்கள் நலன் சார்ந்ததுமான புதிய செயற்றிட்டங்களை செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஏற்கனவே மத்திய அரசிடம் கொடுத்துள்ளார். அவற்றையெல்லாம் மத்திய அரசிடம் பேரம்பேசி பெற்றுக்கொள்வதற்கு அதிகளவான அரசியற்பலம் தேவைப்படுகின்றது. எனவே கடந்த காலத்தை விட இனிவருங் காலத்தில் நாங்கள் அதிகளவான அரசியல்பலத்தை பெற மக்கள் தமது ஆதரவுகளை வழங்குவர் என எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## உணவு வழங்க நடவடிக்கை

முதலாம் ஆண்டு தொடக்கம் ஐந்தாம் ஆண்டு வரையான பாடசாலை மாணவர்களுக்கு ஒரு நேர உணவு பெற்றுக் கொடுப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர் புத்திக்க பத்திரன நேற்று முன்தினம் கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலை மாணவர்களில் 25 தொடக்கம் 30 வீதமானவர்கள் மந்தபோஷக்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே மாணவர்களது நலன்கருதி ஒரு வேளை உணவு வழங்குவது என தீர்மானித்துள்ளோம். அத்துடன் கட்டுப்பாடின்றி பாடசாலைகளில் பணம் சேகரிக்கப்பட்டு வருகின்றது. கொழும்பு பாடசாலையொன்று வருடத்துக்கு ஆயிரத்து 400 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொள்கின்றது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 80 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 70 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 100 | 100 |
| தக்காளி | 20 | 80 | 120 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 50 |
| கோவா | 50 | 50 | 70 | 80 |
| கரட் | 200 | 120 | 130 | 150 |
| பூசணி | 100 | 80 | 50 | 80 |
| புடோல் | 60 | 50 | 70 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 90 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 50 | 80 |
| பயற்றங்காய் | 60 | 60 | 110 | 100 |
| லீக்ஸ் | 200 | 150 | 150 | 200 |
| பீற்றூட் | 100 | 80 | — | 80 |
| கறிமிளகாய் | 200-300 | 140 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 200-300 | 400 | — | 400 |
| போஞ்சி | 200 | 200 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | 40 | — |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 50 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 50 | 50-60 | 40-50 |
| இராசவள்ளி | 160 | 150 | — | 100 |
| வெங்காயப்பூ | 40-90 | 160 | — | 140 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 301

அனுசா அனு




கம்சா மோகனதாஸ்




சுஜே செல்வா





பிரவின் தாஸ்




சுஜித் கெவின்



சிவம் சக்தி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திருடனைக் கண்டுபிடிப்பது எப்படி?

"அக்பர் ஒரு நாள் பீர்பாலுடன் தோட்டத்தில் உலவிக் கொண்டு இருந்தார். திடீரென அக்பர் தன் வலதுகை மணிக் கட்டை இடது கையால் அழுத்தித் தேய்க்க ஆரம்பித்தார். அவருடைய மணிக்கட்டு வீங்கியிருந்தது. அதைப் பார்த்த பீர்பால் சிரித்தார்.

"நான் வலியால் துடிக்கையில் உனக்கு சிரிக்கத் தோன்றுகிறதா?" என்றார் அக்பர்.

"மன்னிக்கவும் பிரபு! நான் ஏன் சிரித்தேன் என்று சொல்கிறேன்" என்ற பீர்பால் தோட்டத்திலிருந்த எலுமிச்சைச் செடிகளிலிருந்து ஒரு பழம் பறித்து வந்து அதை வெட்டி, அதன் சாறை வீக்கத்தில் தடவித் தேய்த்தார். வலி சற்றுக் குறைந்தாற்போல் தோன்ற, அக்பர் "எலுமிச்சைச் சாறை குளவி கொட்டின இடத்தில் தடவினால் வலி குறையும் என்பது இன்றுதான் புரிந்தது" என்றார்.

"உங்களுக்கு அந்த உண்மை இன்று புரிந்தது. எனக்கு இன்று மற்றொரு உண்மை புரிந்தது. அதனால்தான் சிரித்தேன்" என்றார் பீர்பால். "அது என்ன?" என்று அக்பர் கேட்டார்.

"பிரபு! உங்களைக் கண்டு நாங்கள் அனைவரும் பய, பக்தியுடன் மரியாதை செய்கிறோம். ஆனால் ஒரு அற்ப குளவி தைரியமாக உங்களிடம் பறந்து வந்து உங்களைக் கொட்டிவிட்டு சென்றுவிட்டதே! அதை நினைதததுத்தான் சிரித்தேன்" என்றார் பீர்பால்.

"நீ சொல்வது உண்மைதான்! என்னுடைய அதிகாரம் மனிதர்களிடம்தான் செல்லும். குளவி, வண்டு, எறும்பு ஆகிய சிறிய ஜீவராசிகள் கூட என்னைக்கணடு பயப்படுவதில்லை. ஏனெனில் அவை தங்களுக்கு ஏதாவது ஆபத்து என்று தோன்றினால் மட்டுமே தங்கள் தற்காப்புக்காக சண்டையிடுகின்றன. ஆனால் மனிதன் மட்டுமே ஆசை, பொறாமை, கோபம ஆகிய உணர்ச்சிகளால் தூண்டப்படடு, மற்றவர்களைத் துன்புறுத்துகிறான். அவ்வாறு குற்றமிழைப்பவர்களை தண்டிப்பதுதான் என் கடமை?" என்றார்.

அவ்வாறு உரையாடிக்கொண்டே தோட்டத்தின் சிறிய கதவருகே வந்தனர். பிறகு கதவைத் திறந்து கொண்டு அரண்மனைக்குச்செலல







நினைக்கையில் கதவருகே ஒரு பொற்கொல்லன் நின்று கொண்டு இருந்தான். அக்பரைக் கண்டதும் பணிவுடன் வணங்கினான்.

"யார் நீ?" என்றார் அக்பர்.

"நான் பொற்கொல்லன் பஜ்ரி தாஸ்!" என்றான் அவன்.

"உனக்கு என்ன வேண்டும்?" என்று அக்பர் கேட்டார்.

"ஐயா, என் வேலைக்குத் தேவையான அனைத்துத் தங்கத்தையும் ஓர் இரும்பு அலுமாரியில் பத்திரமாக வைத்திருப்பது என் வழக்கம்! பூட்டியிருக்கும் அந்த அலுமாரியின் சாவி என்னிடம்தான் இருக்கும். நான் வேலையில் மும்முரமாக இருந்தால், என் ப்ணியாளர்கள் நால்வரில் ஒருவனை அனுப்பி, அலுமாரிப் பூட்டைத் திறந்து தங்கத்தை எடுத்து வரச் சொல்வேன். என்னுடைய நான்கு பணியாளர்களும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்" என்றான்.

"சரிதான்! அப்படியிருந்தும் உன்னுடைய அலுமாரியிலிருந்து தங்கம் திருட்டுப் போய்விட்டதாக்கும்! உன் பணியாளர்களில் ஒருவன்தான் அதைத் திருடியிருக்க வேண்டும். அப்படித்தானே?" என்றார் அக்பர்.

"ஆம் பிரபு!" என்றான் பஜ்ரி தாஸ்.

"திருட்டுப்போன தங்கத்தின் மதிப்பு என்ன?" என்று அக்பர் கேட்டார்.

"பத்து தங்கக் கட்டிகள்! அவற்றின் விலை ஒரு லட்சத்திற்கும் மேல்!" என்றான் பஜ்ரிதாஸ்.

"கவலைப்படாதே! மூன்றே நாளில் உன் தங்கம் உனக்குத் திரும்பிக் கிடைத்துவிடும்" என்று சொல்லிவிட்டு அக்பர் நகர்ந்தார். "பிரபு? குற்றவாளியைக் கண்டு பிடிக்கும் பொறுப்பை யாரிடம் தரப் போகிறீர்கள்?" என்று பீர்பால் கேட்டார்.

"ஏன்? நகரக்காவல் தலைவர் இருக்கிறாரே.. அவரிடம்தான்!" என்றார் அக்பர்.

திருடனைக் கண்டு பிடிக்கும் பொறுப்பை அக்பரிடமிருந்து ஏற்றுக்கொண்ட நகரக்காவல் தலைவர், உடனடியாக பஜ்ரிதாஸின் நான்கு பணியாளர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தார். அவர்களைத் தலைகீழாகத் தொங்கவிட்டு சவுக்கால் அடித்து உடலை நாறாகக் கிழித்து விடுவதாக பயமுறுத்தி, உண்மையைக் கூறச் சொல்லி வற்புறுத்தினார்........ (தொடரும்)

## ஜோசப் ஸ்டாலின்



ஜோசப் ஸ்டாலின் 1878 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி பிறந்தார்.

இவர் லெனின் மறைவுக்குப் பின், சோவியத் ஒன்றியத்தின் பொதுவுடைமைக் கட்சியின் மத்தியக்குழு பொதுச் செயலாளராகவும், 1922 முதல் தலைவராகவும் விளங்கினார்.

இவருடைய திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கை, புதிய பொருளாதார கொள்கையுடன் கூடிய ஐந்தாண்டுத் திட்டங்களால் ரஷ்யா மிகப்பெரிய தொழில்புரட்சியை கண்டது. அதன் பொருளாதாரம் மேம்பட்டது."

ஸ்டாலின் காலத்தில் செய்யப்பட்ட பொருளாதார சீரமைப்புடன்கூறும் நோக்கிலும் தொலைநோக்கிலும் பல உணவுப் பட்டினி போன்று பல பாதகமான விளைவுகளையும் தோற்றுவித்தது என்று சொல்லப்படுகிறது.

இவரது ஆட்சியில் சோவியத் ஒன்றியம் இரண்டாம் உலகப் போரில் வெற்றிபெற்று, வல்லரசு ஆனது. 1930 களில் இவர் ஏற்படுத்திய அரசியல் தூய்மைப்படுத்தல் கொள்கையை பொதுவுடைமைக் கட்சியின் அறிக்கையாக, கொள்கையாக கடைப்பிடித்ததால், ஒழுக்கமின்மை, நம்பிக்கைத் துரோகம், நயவஞ்சகம், ஊழல் என்று குற்றஞ்சாட்டி பல்லாயிரக்கணக்கானோரை படுகொலை செய்ததாக சொல்லப்படுகிறது. இதனால் பயங்கரவாதி என்றும் அழைக்கப்பட்டார்.

இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்தபோதே ஸ்டாலினின் உடல்நிலை பாதிக்கப்பட்டது. இவரின் அதிக புகைப்பிடிக்கும் பழக்கத்தால் தமனிக்கூழ்மைத் தடிப்பு ஏற்பட்டது. 1945 ஆம் ஆண்டு இவருக்கு இதயத்திசு இறப்பு ஏற்பட்டதால் உயிரிழந்தார்.

## 03.2015 05 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1770 - பாஸ்டன் படுகொலை: பாஸ்டனில் அமெரிக்கர்களுக்கும் பிரித்தானியப் படையினருக்கும் இடையில் கிளம்பிய கலவரத்தை அடுத்து ஐந்து அமெரிக்கர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1793 - பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியாவினால் தோற்கடிக்கப்பட்டன.
- 1824 - பிரித்தானியர் பர்மாவின் மீது போர் தொடுத்தனர்.
- 1940 - சோவியத் உயர்பீடம் 40,100 போலந்துப் பிரஜைகளுக்கு மரணதண்டனை அளித்து கையொப்பமிட்டது.
- 1964 - இலங்கையில் அவசரகாலச் சட்டம் அமுலாகியது.
- 2008 - இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கி. சிவநேசன் படுகொலை செய்யப்பட்டார்.

**பிறப்புக்கள்**

- 1871 - ரோசா லக்சம்பேர்க், மார்க்சிய மெய்யியலாளர் (இ. 1919)
- 1886 - டொங் பிவு (Dong Biwu), சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப்பினர் (இ. 1975)
- 1934 - Daniel Kahneman, நோபல் பரிசு பெற்ற ஷ்ரேலியர்
- 1973 - த. ஜெயசீலன், ஈழத்து எழுத்தாளர்

**இறப்புக்கள்**

- 1878 - ரி. சின்னத்தம்பி, உடுப்பிட்டியைச் சேர்ந்த ஈழத்துப் புலவர்
- **1953 - ஜோசப் ஸ்டாலின், சோவியத் தலைவர் (பி. 1878)**
- 1966 - அன்னா அக்மத்தோவா, ரஷ்யக் கவிஞர் (பி. 1889)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

…எங்கள் கதாபாத்திரத்துக்கு பொருத்தமாக இருப்பார் என்று தீர்மானித்து, பிரபுவுடன் இணைந்து நடிக்க ஒப்பந்தம் செய்தோம்.

**தமிழ் கற்றார்**

அந்த சமயத்தில், குஷ்புவுக்கு தமிழ் ஒரு வார்த்தைகூட தெரியாது. ஆனால், தமிழ் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் நிறைய இருந்தது.

ஏவி.எம். படங்களில் நடிக்க வருகிறவர்களுக்கு தமிழ் கற்றுக் கொடுக்கும் எஸ்.எல்.நாராயணனைக் கொண்டு, குஷ்புவுக்கு தமிழ் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தோம். தமிழ் வார்த்தைகளை ஆங்கிலத்திலும், இந்தியிலும் எழுதி வைத்துக்கொண்டு பேசிப் பழகினார்.

இவ்வாறு முத்துராமன் கூறினார்.


**ஞாபக மறதி பேராசிரியர**

இந்தப்படத்தில் ரஜினிக்கு இரட்டை வேடம். ஒரு வேடத்தில், ஞாபக மறதி பேராசிரியராக நடித்தார். புதுமையான வேடம். ரசிகர்களை சிரிக்க வைத்த வேடம்.

இன்னொரு வேடத்தில், முரட்டு இளைஞனாக நடித்தார். இப்படத்துக்கு இளையராஜா இசை அமைத்திருந்தார். பாடல்கள் இனிமையாக இருந்தன. குறிப்பாக, **“தென் மதுரை வைகை நதி”** என்ற பாடல் ரசிகர்களின் இதயத்தைக் கவர்ந்த பாடல்.

**வெற்றிப்படம்**

24-4-1988இல் வெளிவந்த **“தர்மத்தின் தலைவன்”** நூறு நாள ஓடி வெற்றி பெற்றது.



ரஜினி- -சுஹாசினி

குறிப்பாக, குஷ்புவுக்கு இப்படம் மிகுந்த பெயர் தேடித்தந்தது. படிப்படியாக முன்னேறி, வெகு விரைவில் தமிழ் நடிகைகளில் முதல் இடத்தைப் பிடித்தார். தன்னை அறிமுகப்படுத்தியவர் என்ற முறையில், முத்துராமன் மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கிறார்.

சமீபத்தில், ஜெயா தொலைக் காட்சியில் ஜாக்பாட் நிகழ்ச்சியில் பேசும்போது "டைரக்டர் எஸ்.பி.முத்துராமன் என் குரு என்று குறிப்பிட்டார்.

இதுபற்றி முத்துராமன் கூறுகையில், குஷ்பு, ஆர்வத்தினாலும், விடா முயற்சியினாலும் வெகு சீக்கிரம் தமிழ் கற்றுக்கொண்டார். அது மட்டுமின்றி, தமிழரையே திருமணம் செய்து கொண்டு, தமிழ்ப் பெண்ணாகவே மாறிவிட்டார். அவருக்கு எனது வாழ்த்துக்கம என்று குறிப்பிட்டார்.

**கொடி பறக்குது**

டைரக்டர் பாரதிராஜாவுடன் மீண்டும் ரஜினி இணைந்த படம் கொடி பறக்குது.

இதற்கு முன் பாரதிராஜாவின் முதல் படமான **“16 வயதினிலேயில”** ரஜினி நடித்திருந்தார். ஏறத்தாழ 11 ஆண்டு இடைவெளிக்குப்பிறகு பாரதிராஜா படத்தில் ரஜினி நடித்தார். மனோஜ் கிரியேஷன்ஸ் பேனரில் தயாரான இப்படத்தின் கதை-வசனத்தை ஆர்.செல்வராஜ் எழுதினார். ரஜினிக்கு ஜோடியாக அமலா நடித்தார். இப்படத்தில், டைரக்டர் மணிவண்ணன் முதன் முதலாக வில்லனாக நடித்தார்.

7-11-1988இல் வெளியான இப்படம், எதிர்பார்த்த அளவில் ஓடாவிட்டாலும், 100 நாட்களை எட்டிப்பிடித்தது.

நடிகர் ரஜினிகாந்த், “பிளட் ஸ்டோன்”) என்ற ஆங்கிலப் படத்தில், சொந்தக் குரலில் பேசி நடித்து சாதனை படைத்தார்.

1975 ஆகஸ்டு 15ஆந்தேதி, **“அபூர்வ ராகங்கள்”** படத்தின் மூலம் தமிழ்ப் பட உலகுக்கு அறிமுகமான ரஜினி, பின்னர் இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிப் படங்களில் நடித்தார்.

**ஆங்கிலப்படம்**

1988இல், ஆங்கிலப் படத்தில் நடிக்கும் வாய்ப்பை பெற்றார். ஆங்கிலப்படம் என்றால், இங்கு யாரோ எவரோ எடுத்த படம் அல்ல. அசல் ஹாலிவுட் படம்.

*(தொடரும்)*





# கருவாச்சி காவியம்

**வைரமுத்து- 93**

....கொஞ்சம் மோட்டுக் கையில முரட்டுக்கையா இருந்தா எடதுகையில ஏந்தி வலதுகையால மணிக்கட்ட ஒரு எளம் நசுக்கு நசுக்கி விடுவாரு.

அவருக்குத் தெரியும் அந்த மேடு வளவிய வழி மறிக்கும்ன்னு.

மெல்லுசா சல்லுசா அந்த மேடு கோடு தட்டி விடுவாரு.

வளவி என்னதான் எடக்குப் பண்ணாலும் எக்காரணத்தக் கொண்டும் எண்ணபோட்டுத் தள்ளுறதில்ல.

தொழிலுக்கு அது இழுக்காம்.

நான் வளவிக்காரசெட்டியாருதான் தாயி எண்ணக்காரச் செட்டியார் இல்லேம்பாரு சிரிச்சுக்கிட்டே.

வலது கையில பதிமூணு எடது கையில பன்னெண்டு மொத்த வளவியக் கூட்னா ஒத்தப்படையில வரணும்.


இதான் ஊர் நாட்ல உண்டானது.

ஒண்ணேமுக்கால் ரூவாய்க்கு வித்தா காலுரூவா இலாபங்கிறது கணக்கு.

இதுல சிலபேர் குடுப்பாக.

சில பேர் நவதான்யம் வாங்கிட்டுப் போறிகளாம்பாக சிலபேர் நடையா நடக்க விடுவாக வளவி விக்கப் போன எடத்துல குள்ளப் பக்கவுண்டன் பட்டியில ஒரு கூத்தாகி போச்சு.

வழியில போய்க்கிட்டிருந்த வள விக்காரரை வான்னு கூப்பிட்டான்



வெள்ளையுஞ்சொள்ளையுமா இருந்த ஒரு எளந்தாரி. அவனப் பாத்தாச் சிரிப்பா இருந்திச்சு.

உள்ள போட்டுக்கிற முண்டா பனியன் வெள்ளையா வெளிய தெரியிற மாதிரி மெல்லுசா ஒரு சட்ட உள் கால் சட்டப் பட்டைக பளீர்ன்னு வெளிய தெரியுற மாதிரி ஒரு மல்லு வேட்டி. பாவம் வேட்டிக்கும் சட்டைக்கும் வீணாச் செலவழிச்ச பய.

எஞ் சொந்தபந்தம் எல்லாத்துக்கும் வளவி போடுன்னான். சும்மா ரேஷனுக்கு அரிசி வாங்குற மாதிரி வரிசையா வந்து நின்னுட்டாக பொம்பளைக.

இன்னைக்கி நரி முகத்துல முழிச்சமடா; சாமின்னு வந்தவுக போனவுகளுக்கெல்லாம் வளவி போட்டு முடிக்க; நான் வெள்ளிக்கிழமை யாருக்கும் துட்டுத் தாரதில்லை.

நாளைக்கு வந்து வாங்கிட்டுப் போன்னுட்டான் அந்த ஆளு. சனிக் கிழமை போயிக் கேட்டா அவன் ஊர்லயே இல்ல.

மாமன் பெருமைய மச்சினிகளுக்கு காமிக்கிறேன்னு காமிச்சுட்டு வளையல அங்கமாட்டி விட்டுட்டு இவரு காதுல பூமாட்டி விட்டுட்டு ஓடியே போனான் புதுமாப்பள.

ச்ல்லிக்ககாசு கூட வரல. போனது போனதுதான். அப்படிக் காத்துலயும் வெயில்லயும் மழையில யும் குளுர்லயும் ஊர் அலைஞ்சு எச்சிய முழுங்கிக் கிட்டே எட்டணா ஒரு ரூவான்னு சேத்துவைச்சு ஒரு மகளக் கரைசேத்துட்டோம்ன்னு நெனச்சா, கரைசேத்தவ திருப்பத் தண்ணியில விழுந்து கெடக்கா.

இப்ப இருக்கிறவளக் கரை சேக்குறதா? வந்தவளக் கரை சேக்குறதா?

கண்ணாடி வளவிக சத்தம் போடும ரப்பர் வளவிக் சத்தம் போடாது. நான் பெத்த மகளுகளாக நீங்க கண்ணாடி வளவிக சத்தம் போடுறீக.

அப்பன் ரப்பர் வளவி என்னத்தப் பேசுவேன்? *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில மொழியின் முக்கியத்துவமும் சில நுட்பங்களும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பேசுதல் மற்றும் எழுதுதல் மூலம் ஒருவர் தனது எண்ணங்களை வெளிப்படுத்தவும் தொடர்பு கொள்ளவும் ஏதுவாகின்றது. மேலும் மொழித்திறன்கள் ஒருவரின் நாளாந்த அலுவல்களிலும் குழு வாழ்க்கையி லும் மற்றும் ஜனநாயக நடைமுறைகளுக்கும் வழிவகுக்கின்றன. ஒருவருடைய எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகள் சொற்களின் மூலம் பேச்சாகவும் எழுத்தாகவும் வெளிவருகின்றன. கூடியளவில் வாய்மொழிகளாகவே உள்ளன. எழுத்து மொழியானது, பேச்சு மொழி யிலும் பார்க்க கூடுதலான சொற்பிரமாணங்களைக் கொண்டுள்ளதுடன். நியம இலக்கண அமைபபையும் கொண்டது. வாய்மொழி உரையாடலின் போது கருத்து உச்சரிப்பு, முகபாவனை அல்லது அசைவு மூலமும் பிரயோகிக்கப்படுவதால் எழுத்து வடிவான கருத்து பரிமாற்றத்திலும் பார்க்க குறைந்தளவு சொற்களை அல்லது சொற்தொடர்களை கொண்டதாக அமைய ஏதுவாகின்றது.

பொதுவாக கட்டுரைகளில் முறைசார் மொழி பயன்படுத்தப்படுகிறது. கடிதங்கள் மற்றும் குறிப்புகளில் முறைசாரா மொழியும் பயன்படுத்தப்படலாம். பேச்சு உரையா டலின் போது வித்தியாசமான வகையில் முறைசார் மொழி பயன்படுத்தப்படுகின்றது. உரையாடல் தொடர்பில் பேசுபவரின் கல்வித் தகைமை மற்றும் கேட்போரின் தகைமை என்பன பங்காற்றுகின்றன. ஒரு மனிதன் சிறு பிள்ளையுடன பேசும் போது ஒருவிதமாகவும் நண்பருடன் அளவளா வும் போது வேறு விதமாகவும், சபையோருக்கு உரை நிகழ்த்தும்போது வேறு விதமாகவும் பேசுவது மரபு.

**செவிமடுத்தல்:** 1940 ஆம் ஆண்டு காலம் வரை தேர்ந்த முறையில் செவிமடுத்தல் அவ்வளவு முக்கியத்துவம் பெறவில்லை. அதன் பின்பு இரு காரணிகளால் நிலைமை யில் மாற்றம் ஏற்பட்டது. முதலாவதாக பரந்த ளவில் ஒலித் தட்டுக்கள், ஒலித்தட்டு நாடாக் கள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் அசையும் படங்கள் காரணமாகவும், இரண்டாவது குழு முறையிலான விவாதம் - கருத்தரங்குகள் - பயிற்சிப் பட்டறைகள் போன்ற காரணிகளாலும் மற்றும் வானலையில்தவழ்ந்துவரும்பல்வேறு மொழி தொடர்பான நிகழ்ச்சிகளாலும் செவிமடுததலில் அக்கறை காண்பிக்கப்பட்டது.

எமது நாளாந்த வாழ்வில் பல சந்தர்ப்பங்களில் திறனுடனான செவிமடுத்தல் தேவைப்படுகின்றது உதாரணமாக முறைசார் உரையாடல்கள், சமூக மற்றும் வியாபார தொலைபேசி உரையாடல்கள், நேர்முகப் பரீட்சைகள், கருத்தரங்குகளில் பங் கேற்றல், உரைகள், சொற்பொழிவுகள், வாசிப்புகள், அறிக்கைகள், நாடகங்கள் என்பவற்றினை செவிமடுத்தலும் வாய் மொழியிலான பணிப்புரைகளை நிறைவேற்றுதல். இளமைக்காலந் தொட்டு வகுப்பறைகளில் அறி வைப பெற்றுக் கொள் ளும்



கல்வித் தரிசனம்

வரை மேலும்நீதித் துறை சட்டத்தரணியாக இருந்தாலும் அவர்க ளின் வெற்றி உன்னிப்பாக செவி மடுத்த லிலேயே தங்கியுள்ளதுடன் ஒருவரின் வாழ்விலும், தொழி லிலும் முக்கிய பங்காற்றுகின்றது. சீரிய முறையிலான செவிமடுத்தல் ஒருவரின் பேச்சாற்றலை அதிகரிப்பதுடன் உரைகள் செய்யுள் மற்றும் நாடகங்களை செவி மடுத்தல் மூலமும் ஒருவர் தனது இலக்கி யம் மற்றும் பேச்சு தொடர்பான ஆற்றலை முன்னேற்றிக்கொள்ள முடியும்.

பயனுறுதியான செவி மடுத்தலுக்கு நான்கு விடயங் கள் முக்கியமானவை.

செவிமடுத்தல் உறுதியானதாக அமைவதுடன் செவிமடுப்பவர் அரைமனதுடன் கவனம் செலுத்த முடியாது, செவிமடுத்தல் சரியானதை பற்றிக்கொள்ளல் வேண்டுமே தவிர தெளிவில்லாத விடயத்தையல்ல. அவர் செவிமடுக்கும் விடயத்தினை முழுமையாக புரிந்துகொள்வதுடன் விடயங்களின் பகுதிகளையும் புரிந்துகொள்ளக் கூடியதாக வேண்டும., செவிமடுத்தல் மிகவும் விழிப்புணர்ச்சியு டன் செயற்படுத்தப்படல் வேண்டும். செவிமடுப்பவர் இயலுமான வரை நேர்ச்சிந்தனை உள்ளவராகவும் தன்னைச் சார்ந்து அல்லது பேச்சாளரைச் சார்ந்து முடிவு எடுக்காதவராகவும் இருத்தல் வேண்டும். செவிமடுத்தல் பண்பான முறையில் அமைதல் வேண்டும். செவிமடுப்பவர் பேச்சாளரை மரியாதையாகவும் அக்கறையாகவும் அனுசரித்தல் வேண்டும். செவிமடுப்பவர் செவிமடுத்தலின் போது தவறவிட்டதை திரும்பவும் பெற்றுக்கொள் வது எப்போதும் சாத்தியமாகாது என்பதனை கருத்திற் கொண்டு செவிமடுத்தலை உன்னிப்பாக செயற்படுத்தல் வேண்டும்.

**பேசுதல:** வாசித்தல், எழுதுதல் போல ன்றி பேசுதல் ஒருவருடைய தினசரி வாழ்வில் எல்லா நேரங்களிலும் பல்வேறு மாறுபட்ட சூழ்நிலைகளிலும் தொடர்பங்கினை வகிக்கின்றது. பேசுதல் ஒரு மொழியின் மற்றைய செயற்திறன்களைவிட அவருடையதனிப்பட்ட பண்புகள், அறிவு அனுபவம், அவர் விடயங்களைப் பார்க்கும் விதம், அவரது ரசனை போன்றவற்றில் தங்கியுள்ளது.

ஒரு சிறிய பிள்ளை சைகை மூலம் பேசப் பழகுகிறது. ஆரம்பத்தில் பிள்ளையானது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களின் பேச்சுக்களை பின்பற்றுவதுடன் ஆரம்பப் பாடசாலையின் ஆசிரியர்களின் பேச்சுக்களை பயில்கின்றது. அவர்களினால் இலகுவான விடயங்களை வாசிக்க இயலுவதுடன் சிறிய கதைகளைக் கூறவும் முடிகின்றது. மேலும் தனது உச்சரிப்பு, சொற்தெரிவு மற்றும் இலக் கணம் தொடர்பில் திருத்தங்கள் ஏற்படுத்தும் போது ஏற்றுக்கொள்ளவும் இயலுகின்றது. பாடசாலைப் பருவத்தில் சிறிய உரைகளை யாற்றவும் விவாதங்களில் பங்குபற்றவும் வேறுபட்ட மட்டத்திலான பேசசு வழக்கிலும் ஈடுபட ஏதுவாக அமைகின்றது.

வேற்று மொழியினை பயிலும்போது உச்சரிப்பு சில காரணங்களுக்காக பிரச்சினையாக அமைகின்றது. ஒருவரது உச்சரிப்பைப் பொறுத்தவரையில் அதற்கு உதவும் உறுப்புக்கள் உரிய முறையில் செயற்படல் வேண்டும். அவையாவன, ஒருவரின் நாக்கு, பற்கள், உதடுகள் மற்றும் அண்ணம் என்பனவாகும். அவை உரியமுறையில் இயங் கும் பட்சத்தில் பொருத்தமான உச்சரிப்பினை வெளிப்படுத்த முடியும். அவற்றை எவ்வாறு உரிய முறையில் இயக்குவது? தொடர்ச்சியான பயிற்சியின் மூலம் தீர்வுகாணமுடியும்.

மாணவர்களை பொறுத்தவரையில் அவர்களின் ஆங்கிலக் கல்வி வளர்ச்சியில் அகராதி முக்கிய பங்காற்றும். அகராதி என்பதன் அர்த்தம் ஒரு மொழியின் சொற்கள் அகரவரிசைக்கிணங்க பட்டியலிடப்பட்டு அதற்குரிய கருத்து அல்லது சமனான வேற்று மொழிச் சொற்களை கொண்டிருக்கும் அகராதியினை உரிய முறையில் பயன்படுத்து வதன் மூலம் பல நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும். ஒரு சொல்லைப் பொறுத்தவரையில் சொல்லின் வகை அதன் பயன்பாடு போன்றவை அகராதியில் விளக்கப்பட்டுள்ளதுடன் அச்சொல்லினை உபயோகப் படுத்தும் விதமும் குறித்துரைக்கப்பட்டிருக்கும். அகராதியைப் பற்றிப் பேசும்போது அதனை முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்திய டாக்டர் சாமுவேல் ஜோன்சன் பற்றி அறிதல் நன்று. 1709 ஆண்டு பிறந்த அவர் சிறு வயதில் உடல்நலக்குறைவு மற்றும் பொருளாதார கஷ்டத்தினால் பாதிக்கப்பட்டார். அவரது தந்தையார் இங்கிலாந்தில் புத்தக வியாபாரியாக இருந்தமையால் அவருக்கு சிறு வயதிலே சேக்ஸ்பியர் போன்றவர்களின் புத்தகங்களை படிக்கக்கூடிய வாய்ப்பு கிட்டி யது. 1728ஆம் ஆண்டு அவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தபோதும் தமது வறுமை நிலை காரணமாக 1731ஆம் ஆண்டு உரிய பட்டம் பெறாமலே உயர் கல்வியை நிறுத்திக் கொண்டார். 1737ஆம் ஆண்டு ஜோன்ஸன் லண்டனுக்குச் சென்று எழுது வதை தொழிலாக மேற்கொண்டிருந்தார். 1746இல் ஆங்கில அகராதி தொடர்பான முயற்சியை மேற்கொண்டு ஒன்பது வரு டங்களின்பின் சாதனையென்று கூறக்கூடிய வகையில் முதலாவது அகராதியை வெளியிட்டு அதன் மூலம் இலக்கிய சரித்திரத்தில் நீங்காத இடம்பெற்றார். அவரது அகராதி வெளியீட்டின் பின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் அவரது 66 வயதில் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கியதுடன் அன்று தொடக்கம் கலாநிதி ஜோன்ஸன் என அழைக்கப்பட்டார். இதிலுள்ள ரசனையான விடயம் என்னவென்றால் வறுமை காரணமாக எந்த பல்கலைக்கழகத்தில் அவரால் கல்வியைத் தொடர முடியாமல் போனதோ அப்பல்கலைக்கழகத்தினாலேயே அவருக்கு கௌரவ கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது. அவர் ஓர் ஆங்கில நூலாசிரியர், விமர்சகர் மற்றும் அக ராதிப் பேராசானுமாவார். அவரால் அறிமு கப்படுத்தப்பட்ட அகராதி 1755ஆம் ஆண்டு இரண்டு பாகங்களாக வெளியிடப்பட்டது. ஆங்கில மொழியில் பல சொற்கள் ஒரே விதமான உச்சரிப்பினையும் வித்தியாசமான எழுத்துக்கள் மற்றும் கருத்துக்களை கொண் டனவாக உள்ளன. ஆங்கில மொழியில் உச் சரிப்பிற்கென பேராசிரியர் Daniel Johns என்பவரினால் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் A.C. Gimson மற்றும் Susan Ramsaran ஆகியோரால் மீளாய்வு செய்யப்பட்ட அகராதி பாவனையில் உள்ளது.

உயர் வகுப்புகளில் மாணவர்கள் முறைசார மற்றும் முறைசாரா நிலைமைகளில் பேச்சு மற்றும் நீண்ட அறிக் கைகள் குழு விவாதங்கள் வகுப்பு மற்றும் பாடசாலை மட்ட நாடகங்க ளில் அறிவை பெற்றுக்கொள்கின்றனர். அத ற்கு மேலும் விசேட மொழிப் பயிற்சி மொழித் தேற்றம தொடர்பில் அறிந்துகொள்கின்றனர். இன்றைய உலகில் எங்கு சென்றாலும் ஆங் கில மொழியின் பிரசன்னத்தைக் காண முடியும. ஒவ்வொருவரின் வாழ்விலும் ஆங்கில மொழி முக்கிய பங்கினை வகிக் கின் றது. உதாரண மாக "ரியூஷன்" (Tuition) எனும் ஆங்கிலச் சொல் பல்வேறுபட்ட மொழி பேசுபவர்களாலும் உச்சரிக்கப் படுவதனை அவதானிக்கலாம். ஆங்கில மொழி தொடர்பாடல் மற்றும் வர்த்தகம், பொழுதுபோக்கு வேறு எந்த தொழில் துறையாக இருந்தாலும் ஆதிக்கம் செலுத்து வதனை கண்கூடா கக் காண்கின்றோம்.

ஆங்கில மொழியானது உலகிலே 40க்கும் மேற்பட்ட நாடுகளில் உத்தியோக மொழி யாக பயன்படுத்தப்படுவதுடன் எமது நாட்டிலும் பிரதான தொடர்புமொழியாக உள்ளது. அன்றும் சரி இன்றும் சரி உயர் பதவி வகிப்பவர்கள் சமூகத்தில் மதிக்கப்படுவதற்கான காரணம் அவர்களின் ஆங்கிலத் திறமையே. தற்போ தைய காலகட்டத்தில் பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் ஆங்கில மொழி கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளதுடன் சர்வதேச அளவிலும் எமது திறமையை விருத்தி செய்ய அவசியமாகின்றது.

அண்மைய பத்திரிகைச் செய்திக்கிண ங்க பல்கலைக்கழகத்தில் படிப்பவர்கள் ஆங் கில மொழியில் உரிய தேர்ச்சி பெறாவிடில் 2018ஆம் ஆண்டின் பின்னர் பட்டம் வழங்கப்படக்கூடாதென சகல அரச பல்கலைக்கழகங்களும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அறிவுறுத்தப்பட்டுள்ளன. பல் கலைக்கழக கற்கை நெறிகளில் 70% மானவை ஆங்கில மொழியில் போதிக்கப்படுவதால் பல்கலைக்கழகம் செல்லவுள்ள மாணவர்கள் ஆங்கிலக்கல்வியினை விரும்பிக் கற்க வேண்டும். அதை வட க.பொ.த . சாதாரண தர பரீட்சையில் ஆங்கில மொழி தொடர்பில் செவிமடுத்தல் மற்றும் பேசுதல் தொடர்பாகவும் மாணவர்கள பரீட்சிக்கப்படவுள்ளதாக அறியக்கிடக்கின்றது.

மாணவர்கள் பேசுவது தொடர்பாக ஆரம்பத்தில் ஏற்படும் சிறிய தவறுகள் பற்றி கவலைபபடாமல் எவ்வளவுக்கு எவ்வளவு முயற்சி செய்கிறார்களோ அவர்களுக்கு வெற்றி நிச்சயம். உலகில் எவரும் எந்தத் துறையிலும் தவறுகள் விடாமல் முன்னேறியவர்கள் இல்லை. அப்படியொருவர் கூறுவாரானால் அவர் பொய் கூறுகிறார் என்று அர்த்தம். ஒரு வர் தான் பேசும போது எழுதும்போது தவறு ஏற்படு வதை உணர்ந்தார் என்று சொன் னால் அவர் அம் மொழியில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்று அர்த்தம்.

மேடைப் பேச்சி ன்போது பேச்சானது திட்டமிடப்பட்டு தயாரிக்கப்படு தல் வேண் டும். அத்துடன் பேசும் விடயம் தொடர் பாகவும் கேட்போர் தொடர்பா கவும் போதிய அறிவிருத்தல் முக்கியம். மேடை ப்பேச்சின் போது பேசுபவரின் கண்கள் அடிக்கடி அவையோரின் கண்களைச் சந்திக்கவேண்டும். பேச்சு பயனுறுதியாக அமைவதற்கு இச்செயற்பாடு முக்கியம்.

**வாசித்தல:** 20ஆம் நூற்றாண்டில் பேச்சு மொழியானது வானொலி தொலைக்காட்சி அசையும் படங்கள் மூலம் அபிவிருத்தியடைந்தபோதும் புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் புதினப் பத்திரிகைகள், ஒருவரது எண்ணங்கள் உணர்வுகள் தொடர்பில் அதிகளவு ஆதிக்கம் செலுத்துகின்றன. எனவே வாசிப்பு என்பது ஒரு முக்கிய கலை யாக கற்றறிந்தவர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. வாசிப்பானது எல்லா நேரத்திலும் எல்லா வயதி னருக்கும் மிகுந்த அறி வினை வழங்குகின் றது. இன்றைய காலகட்டத்தில் வாசிப்பானது சமூக பொருளாதார வளர்ச்சிக்கு துணை புரிகின்றது. ஒருவரது ஆற்றலை அதிகரிப்பத ற்கும் சமூகத்தில் வெற்றியடைவதற்கும் வாசிக்கும் திறன் அவசியம். கல்வியியல் ஆராய்ச்சியாளர்கள் வாசித்தலுக்கும் கல்வியில் வெற்றி பெறவும் உறுதியான தொடர்புள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பரீட்சயமான வாசிப்பாளர்கள் ஒரு விடயத்தினை வாசித்தவுடன் அதன் கருப் பொருளினை இலகுவில் புரிந்து கொள்கின்றனர். வாசிப்பதன் மூலம் ஒருவர் தனது சிந் திக் கும் திறன், விளங்கிக் கொள் ளும் தன்மை கருத்துக்களை வெளி யிடும் திறன் போனறவற்றினை வளர் த்துக் கொள்ள முடியும்.

எனவே மாணவர்கள் பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம்.

1.தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் உரத்து



வாசித்தல்.

2.காகிதத் தாளில் முக்கியமான விடயத்தினை எழுதி அதனை திரும்பத் திரும்ப வாசித்தல்

3.செய்யுள்கள், பாடல் களை மனப்பா டம் செய்து ஒப்புவித்தல்.

4.செவிப்புல ஒலிப்பதிவு நாடாக்கள் மூலம் கல்வி சம்பந்தமான அறிவினை செவிமடுத்தல்.

**எழுதுதல்:** முற்காலத்தில் பாடசாலைகளில் எழுதுவதற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. வழமையில் ஒரு பிள்ளை யானது ஆங்கில மொழியில் தனது பெயரை முதலில் பெரிய எழுத்துக்களிலும் பின்பு தொடுத்து எழுதும் முறையிலும் எழுதப் பழகுவது இயல்பு. அதன் பின்பு வேறு பொருட்களின் பெயர்கள், சிறிய வசனங்கள் மற்றும் பாடப் புத்தகங்களிலுள்ள கேள்விகளுக்கு குறுகிய பதில்களை எழுதிப் பழகுவர். ஆக்க எழுத்துப் பயிற்சி ஆசிரியர் சொல்வதைச் செவிமடுத்து எழுதப் பழகுவர்.படிப்ப டியாக சொற்தெரிவு, நீண்ட வசன அமைப்பு மற்றும் பந்தியமைத்தலில் பயிற்சி பெறுவர். ஆங்கில மொழியைப் பொறுத்தவரையில் அகராதிப்பயன்பாடு மிகவும் முக்கியம் வாய்ந்தது. அதனுடன் எழுத்துக்களையும் உரிய முறையில் அழகாக எழுதுதல் சாலச் சிறந்தது. பரீட்சைகளின் போது கூட அழகான கையெழுத்து கூடுதலான புள்ளிகளை பெற்றுக்கொடுப்பதற்கு வாய்ப்புண்டு. ஏனெனில் அழகினை ரசிப்பது மனித இயல்பாகும். எழுதும் விடயம் தெளி வாகவும் சுருக்கமாகவும் நேரடிப் பொருளைக் கொடுப்பதாகவும் ரசனையுடையதாகவும் அமைதல் வேண்டும்.

எனவே பயிற்சி ஒரு மனிதனை பூரணப்படுத்துவதுடன், மனப்பூர்வ மான முறை யில் திரும்பத் திரும்ப கற்றலே மாண வனை வெற்றியாளனாக்குகின்றது. உதார ணமாக செல்வி ஹெலன் கெலர் பற்றி அறிந்திருப்பீர்கள்.சிறு வயதில் ஏற்பட்ட நோய் காரணமாக தனது கட்புல, செவிப் புலன்களை இழந்தபோதும் அயரா முயற்சியினால் கல்வி கற்று ஐக்கிய இராச்சியத்திலே கட்புலனற்றவர்களுக்காக எழுத்தாளராக விரிவுரையாளராக ஆலோசகராக கடமையாற்றி மேலும் ஆக்கங்களை வெளியிட்டு அதன் மூலம் கிடைத்த பணத்தினையும் அங்கவீனர்களுக்காக உதவிய பெருந்தகையாவார். அவர் 1880ஆம் ஆண்டு இப் பூமியில் பிறந்து 1965ஆம் ஆண்டில் இவ்வுலகை விட்டு மறைந்தாலும் இன்று மட்டுமல்ல என்றும் மக்களின் மனதில் வாழ்ந்துகொண்டிருப்பார்.

மேலும் முன்னோர்களான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பைபிள் நூலை முதலில் தமிழுக்கு மொழி பெயர்த்தவர். வடமராட் சியைச் சேர்ந்த சேர். முத்துக்குமாரசுவாமி தனது ஆங்கில மொழிப்புலமை காரணமாக ஆசியாவிலே முதன்முதலில் சேர் பட்டம் பெற்றவர். சதாவதானி கதிரவேற்பிள்ளை தமிழ் மொழி அகராதியினை தொகுத்த பெருமைக்குரியவர், சி.வை. தாமோதரம்பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர், சேர் பொன்னம்பலம் அருணாசலம் இலங்கையின் முதலாவது சிவில் உத்தியோகத்தர், சேர் பொன்னம்பலம் இராமநாதன், சுவாமி விபுலானந்தர், கலா யோகி ஆனந்தகுமாரசுவாமி, தனிநாயகம் அடிகளார், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம், ஜி.காங்கேயர் பொன்னம்பலம், பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் அழகையா துரைராசா, தென்கிழக்காசியாவிலேயே சிறந்த கல்விமான்களில் ஒருவராக கருதப்படுபவர். இவர்களெல்லோரும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழியாற்றல் காரணமாகவே இன்றும் போற்றப்படுகின்றனர் என்பது கண்கூடு. *(முற்றும்)*

லயன்.அம்பலவாணர் துரைசிங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தின் தாக்குதலில் 73 தீவிரவாதிகள் உயிரிழப்பு

நைஜீரிய இராணுவத்தினருக்கும் போகோஹறாம் தீவிரவாதிகளுக்கும் கொண்டுகாவிலுள்ள மீண்பிடி நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடும் மோதலில் 73 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக நைஜீரிய இராணுவம் அறிவித்துள்ளது.

பெருந்தொகையான மாடுகளைக் கூட்டமாக தமக்கு முன் அனுப்பிய மாடு மேய்ப்பவர்கள் போன்று சென்ற தீவிரவாதிகள் திடீரென நைஜீரிய இராணுவத்தினரின் காவலரண் மீது சரமாரியாகச் சுடத் தொடங்கியுள்ளனர்.

பதிலுக்கு இராணுவத்தினரும் தாக்குதலை நடத்தினர். சுமார் 150 வரையிலான தீவிரவாதிகள் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் 6 மணிநேரத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. இதில் 73 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல்களுக்கு முன்னதாக மேற்கொள்ளப்படவிருந்த தற்கொலைத் தாக்குதலை நைஜீரிய இராணுவம் முறியடித்துள்ளது.

வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட காரில் வந்த தீவிரவாதி ஒருவர் காரில் வைத்தே சுடப்பட்டதனால் நிகழவிருந்த பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது. (இ-3)

## செயற்பட்டு மகிழ்வோம் சிறுவர்விளையாட்டு நிகழ்வு

யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான செயற்பட்டு மகிழ்வோம் சிறுவர் விளையாட்டு நிகழ்வு கோட்ட ரீதியாக பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்திலும் நல்லூர்க் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய மண்டபத்திலும் யாழ்ப்பாணக்கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார். (இ-3)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கர்நாடக இசை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், வீணை, கடம், கெஞ்சிரா, மோர்சிங், தம்புரா போன்ற வாத்தியக் கலைஞர் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இசைத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட நுண்கலைத்துறை கல்லூரி அல்லது இசைக் கல்லூரியில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.


ஒன்றுக்கு மேற்பட்ட வாத்தியங்களை வாசிக்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல். வயதெல்லை 35 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் சான்றிதழ்களின் பிரதிகளுடன் தமது விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் பணிப்பாளர் நாயகம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சுதந்திரசதுக்கம், கொழும்பு-7 என்ற முகவரிக்கு 2015, மார்ச் மாதம் 23 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத் தக்கதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# வடக்கில் வீதிவிபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை ஆரம்பிப்பு!

வீதி விபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக 34 ஆம் அணி மருத்துவபீட மாணவர்களால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட பாடசாலைகளில் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.



கிளிநொச்சி மாவட்டத்தில் விழிப்புணர்வின் முதல்நாள் நிகழ்வின் ஒருபகுதி கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தின் 11 பாடசாலைகளைச் சேர்ந்த 88 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 9.30 மணியளவில் 34 ஆம் அணி மருத்துவபீட மாணவன் நா.கிரியுகனின் அறிமுக உரையுடன் ஆரம்பமாகியது.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபரின் உரை இடம்பெற்றது. அதன் பின்னர் மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு குழு முதலுதவிப் பயிற்சிக்காகவும், மற்றைய குழு கருத்தரங்கிற்காகவும் அமர்த்தப்பட்டது.

அக்குழுவிற்கு 34 ஆம் அணி மருத்துவபீட மாணவி மு.கேசினியால் வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம் என்ற தலைப்பில் கருத்தரங்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 34 ஆம் அணி மருத்துவபீட ஊடகக்குழு மாணவர்களால் தயாரிக்கப்பட்ட காணொலி ஒன்று மாணவர்களுக்காகப் போட்டுக் காண்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மற்றுமொரு காணொலி ஒன்றும் போட்டுக் காண்பிக்கப்பட்டது. அக்காணொலி மருத்துவபீட மாணவன் வே.இளங்குமரனால் மாணவர்களுக்கு விளங்கப்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கா.பிரதீபா அவர்களால் வீதி விபத்து ஏற்பட்டால் வழங்கப்படும் முதலுதவி தொடர்பான கருத்தரங்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நா.கிரியுகனால் முதலுதவி தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

மற்றைய குழுவைச்சேர்ந்த மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சியானது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வழங்கப்பட்டது. மாணவர்கள் அனைவருக்கும் வீதி ஒழுங்குமுறைகள் தொடர்பாகவும் முதலுதவி தொடர்பாகவும் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு அவர்களின் அடைவு மட்டம் மருத்துவபீட மாணவர்களால் ஆராயப்பட்டது.

நிகழ்வின் மற்றைய பகுதி கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரி கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர், கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தின் 12 பாடசாலைகளைச் சேர்ந்த 65 மாணவர்கள் கலந்து கொண்டனர். இந் நிகழ்வு காலை 9.30 மணியளவில் 34 ஆம் அணி மருத்துவபீட மாணவன் ச.சயந்தன் அகவணக்கத்துடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மங்கள விளக்கினை சிறப்பு விருந்தினர்கள் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களின் வாழ்த்துரை இடம்பெற்றது. அடுத்ததாக 34 ஆம் அணி மருத்துவபீட மாணவன் சி.யதுகுலனின் அறிமுகஉரை இடம்பெற்றது.

அதன்பின்னர் மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு குழு முதலுதவிப் பயிற்சிக்காகவும் மற்றைய குழு கருத்தரங்கிற்காகவும் அமர்த்தப்பட்டது. அக்குழுவிற்கு 34 ஆம் அணி மருத்துவபீட மாணவி லோ.நேருஜாவால் வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம் என்ற தலைப்பில் கருத்தரங்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 34 ஆம் அணி மருத்துவ பீட ஊடகக்குழு மாணவர்களால் தயாரிக்கப்பட்ட காணொலி ஒன்று மாணவர்களுக்காகப் போட்டுக் காண்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மற்றுமொரு காணொலியொன்றும் போட்டுக் காண்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 34 ஆம் அணி மருத்துவ பீட மாணவி அ.சுபாங்கியால் வீதி விபத்தில் வழங்கப்படும் முதலுதவி தொடர்பான கருத்தரங்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி பிரதேச பொலிஸ் உத்தியோகத்தர்களால் வீதி விபத்து சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது. காணொலியும் போட்டுக் காட்டப்பட்டது. மற்றைய குழுவைச் சேர்ந்த மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சியானது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வழங்கப்பட்டது.

மாணவர்கள் அனைவருக்கும் வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பாகவும் முதலுதவி தொடர்பாகவும் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு அவர்களின் அறிவுமருத்துவ பீட மாணவர்களால் ஆராயப்பட்டது. (இ-5)

## பாரதச் செய்தி

# 5.5 கிலோ கிராம் தங்கக்கட்டிகள் சென்னை விமானநிலையத்தில் மீட்பு

சென்னைக்கு வந்த விமானத்தில் கேட்பாரற்ற நிலையில் கிடந்த 5.5 கிலோ தங்கத்தை கைப்பற்றிய அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கொழும்பில் இருந்து சென்னை விமான நிலையத்துக்கு பயணிகள் விமானம் நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணிக்கு வந்தது. விமானத்தில் இருந்து பயணிகள் அனைவரும் கீழே இறங்கிச் சென்றனர். இந்த விமானம் மீண்டும் மும்பைக்கு செல்ல இருந்தது. துப்புரவுப் பணியாளர்கள் விமானத்தை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஓர் இருக்கைக்கு கீழே பை இருப்பதை பார்த்தனர்.

இதுபற்றி விமான நிலைய அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதிகாரிகள் மெட்டல் டிடெக்டர் உள்ளிட்ட கருவிகளுடன் வந்து வெடிகுண்டு சோதனை நடத்தினர். வெடிகுண்டுகள் எதுவும் இல்லை என்று உறுதி செய்த பின்னர், பையை திறந்து பார்த்த போது அதில் 9 தங்கக்கட்டிகள் இருந்தன. மொத்தம் 5 கிலோ 500 கிராம் எடையுள்ள அந்த தங்கக் கட்டிகளின் மதிப்பு ரூ.1.65 கோடி என்று தெரியவந்துள்ளது.

தங்கக்கட்டிகளை கைப்பற்றிய அதிகாரிகள், இலங்கையில் இருந்து அவற்றை கடத்தி வந்த பயணி யார் என்பதை கண்காணிப்பு கமராவில் பதிவான காட்சிகள் மூலம் கண்டுபிடிக்க முயற்சி மேற்கொண்டுள்ளனர். (இ-5)

# 'இந்தியாவின் மகள்' பெரும் சர்ச்சைக்குள்

டில்லி பாலியல் பலாத்காரம் தொடர்பாக "இந்தியாவின் மகள்" என்ற பெயரில் தயாரிக்கப்பட்டுள்ள ஆவணப்படத்துக்காக, அந்த வழக்கின் குற்றவாளியை பேட்டி கண்டதையும், அதை செய்தித் தொலைக்காட்சியில் விவாதப் பொருளாக்கியதையும் விமர்சித்து, சமூக வலைதளத்தில் இணையவாசிகள் தங்கள் ஆதங்கத்தைப் பதிந்து வருகின்றனர்.

2012 கடந்த டிசம்பர் 16ஆம் திகதி பேருந்தில் 23 வயது இளம் பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டது நாடு முழுவதும் மிகப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இச்சம்பவத்தை பிரிட்டனைச் சேர்ந்த படத் தயாரிப்பாளரும் 'பாப்டா' விருது பெற்றவருமான லெஸ்லி உட்வின் பிபிசியுடன் இணைந்து ஆவணப்படத்தை உருவாக்கியுள்ளார். அந்தப் படம் எதிர்வரும் 8ஆம் திகதி ஒளிபரப்பாகவுள்ளது.

இந்நிலையில் டில்லி பாலியல் சம்பவம் தொடர்பாக பிரிட்டன் படத் தயாரிப்பாளர் லெஸ்லி உட்வின் எடுத்த ஆவணப்படம் சர்ச்சைக்குள்ளாகி இருக்கிறது.

இவ்வழக்கின் குற்றவாளி ஒருவர் திஹார் சிறைக்குள்ளிருந்து அளித்த பேட்டி தொடர்பாக, சிறையினர் இயக்குநரிடம் அறிக்கை சமர்ப்பிக்க மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உத்தரவிட்டுள்ளார்.

"இந்தியாவின் மகள்" என்ற அந்த ஆவணப்படத்தில் பலாத்கார குற்றவாளி கூறிய கருத்துக்களை "தி டெலிகிராப்" வெளியிட்டதிலிருந்தே, பலாத்காரத்துக்குள்ளாகி இறந்த அந்த பெண்ணை மீண்டும் மீண்டும் வார்த்தைகளால் பலாத்காரம் செய்ய வேண்டாம் என்று பல தரப்பினர் தங்களது ஆழ் மனதின் கொந்தளிப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஒரு கை ஓசை எழுப்ப முடியாது. இரண்டு கைகளும் சேர்ந்து தட்டினால்தான் ஓசை வரும். நாகரிகமான இளம்பெண் இரவு 9 மணிக்கு வெளியில் சுற்றிக் கொண்டிருக்க மாட்டாள்" என்று குற்றவாளி முகேஷ் கூறியுள்ளது சமூகத்தின் கோபத்தை மீண்டும் தட்டி எழுப்பியுள்ளது.

ஆங்காங்கே போராட்டங்களும் வெடித்துள்ளன. குற்றவாளியிடம் பேட்டி கண்டுள்ள தொலைக்காட்சிக்கு எதிராகவும் எதிர்மறை கருத்துக்கள் எழுகின்றன. இந்தச் சூழலில் "இந்தியாவின் மகள்" என்ற ஆவணப்படத்தை வெளியிட மத்திய அரசும் தடை விடுத்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய-இலங்கை நல்லுறவு அமைதித் தீர்வுக்கு வழிகாட்டுமா?

இனப்பிரச்சினைக்கு அமைதியான தீர்வை எட்டுவதற்கு, 'முற்போக்கு புலம்பெயர் தமிழர்களையும், இலங்கை அரசாங்கத்தையும் ஒரு நிலைக்குக் கொண்டு வருவதற்கு இந்தியா காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும்.

**இவ்வாறு 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில், எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் வி.சூரியநாராயண்.**

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் இந்தியாவுக்கான அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டதானது இந்திய-இலங்கை உறவில் புதியதொரு அத்தியாயத்தைத் திறந்துள்ளது. இலங்கையின் முன்னைய அரசாங்கத்தில் இவ்விரு நாடுகளுக்குமான உறவில் தீவிர அழுத்தங்களும் விரிசல்களும் ஏற்பட்டன. விடுதலை புலிகளை அழிப்பதில் இந்தியாவின் பங்களிப்பு மிக முக்கியமாகக் காணப்பட்டது. விடுதலை புலிகளை அழித்த பின்னர் நாட்டின் இன மீளிணக்கப் பாட்டை ஏற்படுத்துவேன் என முன்னைய மகிந்த ராஜபக்ச மீண்டும் மீண்டும் உத் தரவாதம் வழங்கிய போதிலும் அதனை நிறைவேற்றத் தவறினார்.

சிறிலங்கா அரசியலின் போக்கை சிங்கள கடும்போக்காளர்கள் மாற்றத் தொடங்கினர். இந்திய அரசாங்கத்தின் தீவிர அழுத்தத்தைத் தொடர்ந்து வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது. இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்தை மிக விரைவாக ஓரங்கட்டத் தொடங்கியது. மகிந்த அரசாங்கம் இந்தியாவுடனான தனது தொடர்பைக் குறைப்பதற்காக சீனா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுடன் அதிக நட்புறவை வளர்ப்பதற்கான முயற்சி களை மேற்கொண்டது. இவ்வாறான ஒரு சூழலில் சிறிலங்காவில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தேர்தலில் வெற்றி பெற்றமையை இந்தியா மனதார வரவேற்றது. சிறிலங்காவின் புதிய வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முதன் முதலாக தத்தமது உத்தியோக பூர்வ பயணங்களை மேற்கொண்ட நாடாக இந்தியா விளங்குகிறது. இவர்களின் சுற்றுப்பயணத்தின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்வதற்கு முன்னர், இந்தியாவின் அயலுறவுக் கோட்பாடு குறிப்பாக அயலிலுள்ள சிறிய நாடுகளுடனான கோட்பாடு தொடர்பாகவும் அதன் நோக்கங்கள் தொடர பாகவும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்திய அயலுறவுக் கோட்பாடு கருத்தியல் மற்றும் யதார்த்தவாதம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு கலவையாகும். அமெரிக்காவுடனும் சீனாவுடனும் நெருங்கிய தொடர்பைப் பேணுவதுடன் இந்தியாவுடன் விரிசலைக் கொண்டுள்ள பாகிஸ்தான் இந்த் விடயத்தில் மிகவும் வேறுபட்ட தோற்றத்துடன் நோக்கப்பட வேண்டியது முதன்மை மிக்கதாகும். சமச்சீரற்ற எதிரெதிர் கோட்பாடுகள் இந்தியாவின் சிறிய அயல்நாடுகளுடனான உறவிற்கு வழி காட்டிகளாகும். மே 15, 1954இல் இந்தியாவின் மக்களவையில் ஜவகர்லால் நேரு உரையாற்றிய போது இந்தக் கோட்பாடானது குறிப்பாக சிறிலங்காவை நோக்கிய இந்தியாவின் அயலுறவுக் கோட்பாடு வரையறுக்கப்பட்டது.

'சுதந்திர சிலோன் மற்றும் நட்பார்ந்த சிலோனையே நாங்கள் விரும்புகிறோம். ஏனைய நாடுகளை விட சிலோன் ஒவ்வொரு விடயங்களிலும் எமக்கு மிகவும் நெருக்கமாகக் காணப்படுகிறது. அதாவது கலாசார ரீதியாக, வரலாற்று ரீதியாக, மொழி ரீதியாக, மத ரீதியாக சிலோன் எமக்கு மிக நெருக்க மாகக் காணப்படுகிறது. சிலோனை நாங்கள் ஏன் பேராசை மிக்க கண்களோடு நோக்க வேண்டும்? நாங்கள் அப்படிச் செய்யவில்லை. ஆனால் இவ்வாறான ஒரு அச்சம் சிலோனில் நிலவுகிறது. இந்த அச்சத்திற்கு மேலும் பலம் சேர்க்கும் விதமான கருத்துக்களைக் கூறவேண்டாம் என நான் இந்த அவையிடம் தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்' என ஜவர்கலால் நேரு குறிப்பிட்டிருந்தார். ஜனவரி 06, 1950இல் நாடாளுமன்றில் நேரு ஆற்றிய உரையில் இந்தியா தனது அயலுறவுக் கோட் பாட்டை எவ்வாறு பேணவேண்டும் என்பது மேலும் வரையறுக கப்பட்டது.

'நேபாளம் சுதந்திரம் அடைய வேண்டும் என்பதை நாம் வரவேற்கிறோம். நேபாளத்தில் எந்தவொரு பிழையும் இடம்பெறுவதை எங்களால் அனுமதிக்க முடியாது. நேபாளத்தை பலவீனப்படுத்தும் எந்தவொன்றையும் நாம் அனுமதியோம். ஏனெனில் இது எமது சொந்தப் பாதுகாப்பிற்கு ஆபத்தானதாக அமையும்' என நேரு தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். 1983 யூலையில் சிறிலங்காவில் கலவரம் மூண்ட போது, அப்போதைய சிறிலங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தனா வெளிச் சக்திகளின் உதவியை நாடியிருந்தார். ஆனால் இதில் இந்தியா வேண்டு மென்றே தவிர்க்கப்பட்டது. சிறிலங்கா பிறிதொரு நாடல்ல எனவும் சிறிலங்காவில் என்ன நடந்தாலும் அது இந்தியாவுக்கு உடனடிப் பாதிப்பை ஏற்படுத்தும் என இந்திராகாந்தி அறிவித்தார். சிறிலங்காவில் இடம்பெறும் நிலவரம் தொடர்பாக ஆராய்வதற்காக தனது பிரதிநிதியாக வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவை உடனடியாக சிறிலங்காவுகரு அனுப்புவதாக இந்திராகாந்தி தொலைபேசி மூலம் ஜெயவர்த்தனாவிடம் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக இந்திரா காந்தி, ஜெயவர்த்தனவிடம் ஆலோசிக்கவில்லை. இதன் பின்னர் என்ன நடந்தது என்பது வரலாற்றுப் பதிவாகிவிட்டது. இதேபோன்று சிறிலங்கா துறைமுகத்தில் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் தரித்து நிற்பதற்கு மகிந்த ராஜபக்ச அனுமதித்தார். இதன்மூலம் இவர் இந்தியாவின் அதிருப்திக்கு உள்ளாகினார். இவ்வாறான ஒரு சூழலில் சிறிலங்காவில் ஆட்சி மாற்றம் நிகழ்வதற்கு இந்தியா முயற்சித்தது. சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க, சமரவீர மற்றும் சிறிசேன ஆகியோர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக எதிரணி என்ற பொதுப் பெயரில் ஒன்றுகூடினர். அதாவது இவர்கள் சிறிலங்கா மீதான சீனாவின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவந்து மீண்டும் இந்திய-சிறிலங்கா உறவில் நல்லுறவைப் பேண விரும்பினர். ஸ்ரீலங்காவில் நடந்து முடிந்த தேர்தலில் அங்கு வாழும் தமிழர்கள், தமிழ் பேசும் முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் போன்ற சிறு பான்மை மக்களின் ஆதரவுடன் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சிங்களவர்களின் வாக்குகள் பிரிக்கப்பட்டன. இந்த அடிப்படையில், சிறிசேனவை விட மகிந்த ராஜபக்ச சிங்கள மக்களின் அதிக வாக்குகளைப் பெற்றிருந்தார். சிங்களவர்களின் அதிக ஆதரவைப் பெறுவதை முன்னுரிமைப்படுத்த வேண்டியது மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் முன்னுரிமை என்பது இயற்கையானதாகும். நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைவதற்கு முன்னர் இந்த மூலோபாயம் கைக்கொள்ளப்பட வேண்டும்.

வடக்கு மாகாணத்திற்கு சிவில் ஆளுநர் ஒருவரை நியமித்தமை, சிறிலங்காவின் உச்ச நீதிமன்றின் பிரதம நீதியரசராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டமை மற்றும் வடக்கிலிருந்து இராணுவத்தைப் பின்வாங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியமை போன்ற விடயங்களின் ஊடாக சிறிலங்கா வாழ் தமிழ் மக்களுக்கு சிறிசேன அரசாங்கம் சாதகமான சமிக்கைகளைக் காண்பித்துள்ளது.

உள்நாட்டில் ஏற்பட்டுள்ள அழுத்தங்களைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நம்பகமான உள்நாட்டு விசாரணையை மேற்கொள்வதற்கு மேலும் காலஅவகாசம் தேவை என சிறிலங்கா அரசாங்கம் ஐ.நாவிடம கோரிக்கை விடுத்துள்ளதையும் இங்கு நோக்க வேண்டும். இவ்வாறான விசாரணைக்கு இந்தியா மற்றும் அனைத்துலக சட்ட வல்லுனர்களின் உதவியை கொழும்பு பெற்றுக் கொள்வதற்கும் குறுகிய காலத் திற்குள் இது தொடர்பான அறிக்கையைத் தயாரிப்பதற்கும் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்கும், சிறிலங்கா மீது இந்தியா தனது அழுத்தத்தை வழங்க வேண்டும்.

சிறிசேன இந்தியாவுக்கான தனது பயணத்தின் போது அணுசக்தியை அமைதி வழியில் பயன்படுத்துவதற்கான ஒத்துழைப்பில் கைச்சாத்திட்டமை மிகவும் முக்கியமான விடயமாகும். இதைவிட, விவசாய ஒத்துழைப்பு, கலாசார ஒத்துழைப்பு, நலந்தா பல்கலைக்கழகம் செயற்படுவதற்கான சிறிலங்காவின் உதவி போன்ற பல்வேறு விடயங்களில் உடன்பாடு எட்டப்பட்டது. மீனவர் விவகாரம், இன மீளிணக்கப்பாடு மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு போன்றன இப் பயணத்தின் போது கலந்துரையாடப்பட்டன.

இந்தியாவுடனான ஸ்ரீலங்காவின் அணுசக்தி உடன்பாடானது மிக முக்கிய திருப்புமுனையாக அமைந்துள்ளது. மே 1974 இல் இந்தியா தனது அணு வாயுதத்தை பொக்ரனில் பரிசோதித்த போது அதனை சறிலங்கா விமர்சித்தது. அக்காலப்பகுதியில் சிறிலங்காவானது இந்திய மாக்கடலை ஒரு சமாதான வலயமாகக் கட்டியெழுப்பு வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது. வாஜ்பாயி அரசாங்கம் அணுவாயுப் பரிசோதனையை மேற் கொண்ட போது, சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் அதனை வரவேற்றிருந்தார். மகிந்த ராஜபக்ச அரசாங்கம் கூடங்குளம் அணு உலை தொடர்பான தனது எதிர்க்கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதே. ஆனால் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சிறிலங்கா இந்த விடயத்தில் அமைதி காத்தது.

அணுசக்தியை வன்முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதில் தனது சிறிய அயல்நாடுகளுக்கு உதவுவதற்கான ஆளுமையை இந்தியா கொண்டுள்ளது என்பதையே சிறிலங்காவுடனான இந்தியாவின் அணுசக்தி ஒத்துழைப்பு உடன்பாடு சுட்டி நிற்கிறது. இனப்பிரச்சினைக்கு அமைதியான தீர்வை எட்டுவதற்கு, முற்போகுு புலம் பெயர தமிழர்களையும், சிறிலங்கா அரசாங்கத்தையும் ஒரு நிலைக்குக் கொண்டு வருவதற்கு இந்தியா காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும். இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வொன்றை எட்டுவதற்குத் தான் தயாராகவுள்ளதாக வும், இந்திய அரசாங்கத்துடன் இது தொடர்பில் பேச்சுக்களை நடத்தவிருப்பங் கொண்டுள்ளதாகவும் உலகத்தமிழர்பேரவை அறிவித்துள்ளது.

இவ்வாறானதொரு கலந்துரையாடல் இந்தியாவுடன் எட்டப்பட்ட உடன்பாட்டின் அதிகூடிய பரப்புக்களை நிறைவேற்றுவதற்கு வழிவகுக்கும். இதன் அடுத்த கட்ட நடவடிக்கையானது இந்திய அரசாங்கம், சிறிலங்கா அரசாங்கம் மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகிய மூன்று தரப்பினரிடையே நடைபெறுவதற்கான வழியை உண்டுபண்ணும். உலகத்தமிழர்பேரவையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்பைப் பேணுவது என்பதும் இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதியாக இதனை அங்கீகரித்துள்ளமையும் இதற்கு மேலும் வலுச்சேர்க்கின்றது.

-நித்தியபாரதி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கி, ஹக்கீம் இனவாதம் குறித்து ஏன் எவரும் கண்டுகொள்வதில்லை

## பொதுபலசேனா கேள்வி

(கொழும்பு)

**சிங்கள இனவாதம் என்று எல்லா அரசியல் வாதிகளும் குற்றம்சாட்டுகின்றனர். விக்னேஸ் வரனின் இனவாதம் ஒருவருக்கும் தென்படு வதில்லை. ஹக்கீமின் இனவாதம் குறித்து ஒருவரும் கண்டுகொள்வதில்லை என பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்துகொண்டு கருத்துத் தெரி விக்கையிலேயே தேரர் மேற்க ண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

கண்டி சிங்கள உடன்படிக்கை குறித்து நன்கு கற்குமாறு இந்த நாட்டின் பிரதமரையும் நல்லாட்சி அரசியல்வாதிகளையும் நாம் கேட்டுக் கொள்கின்றோம்

அரசியல் செய்ய முன்னர், நாட்டை வழிநடத்த முன்னர் வெறும் வெற்றுப் பேச்சுக்களை விடுத்து இந்த நாட்டின் சுற்றுச் சூழல் குறித்து தெரிந்துகொள் ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவருக்கும் நாம் சொல்கின் றோம். நீங்கள் சோஷலிச சமூக த்தை உருவாக்குமுன்னர், கண்டி சிங்கள உடன்படிக்கையை படிக்கு மாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிங்கள இனவாதம் என்று எல்லா அரசியல்வாதிகளும் கத்து கின்றனர். விக்னேஸ்வரனின் இன வாதம் ஒருவருக்கும் தென்படுவ தில்லை. ஹக்கீமின் இனவாதம் ஒருவருக்கும் தென்படுவதில்லை

இது லொறியின் முன்னால் புது சரணய் என்று போட்டுக்கொண்டு, உள்ளே கள்ள மாடுகளை எடுத்துச் செல்வதைப் போன்றது. முன்னால் புது சரணய் என்று அடிக்கப்பட் டிருந்தால் உள்ளே மாடு இல்லை என்று நினைப்பார்கள் தானே எனவும் தேரர் மேலும் தெரிவி த்தார். (இ-5)

# அரசியலில் இணைவதற்கு தனக்கு விருப்பமில்லையாம்

## சங்கக்கார தெரிவிப்பு



(கொழும்பு)

நான் அரசியலுக்கு வரப் போகி றேன் என செய்திகள் வெளி யாகியுள்ளதாக எனது நண்பர்கள் மூலம் தெரிந்துகொண்டேன். இருப்பினும், எனக்கு அரசியலில் இணை வதற்கு எவ்வித விருப்ப மும் இல்லை என இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

தனது பேஸ்புக் வலைத்தள த்தில் இந்த தகவலை சங்கக்கார வெளியிட்டுள்ளார்.

இறுதியாக நிறைவடைந்த போட்டிக்கு வாழ்த்தும் ஆதரவும் தெரிவித்த அனைவருக்கும் எனது நன்றிகள். எங்களது கிரிக்கெட் சுற்றுப்பயணம் சிறப்பானதாகவு ள்ளது.

மேலும் நான் அரசியலில் இணையப் போவதாக பல வதந் திகள் பரவுகின்றன. அவ்வாறான வதந்திகள் அடிப்படையற்ற மற்றும் பொறுப்பற்றவையாகும்.

நான் முன்னர் கூறியது போன்றே எனக்கு இப்பொழுதும் எதிர்கால த்திலும் அரசியலில் இணைவ தற்கு ஈடுபாடு இல்லை.

இந்த கதைகளை தயவு செய்து புறக்கணித்து விடுங்கள். நான் எனது அடுத்த போட்டியை குறித்தே சிந்தித்துக்கொண்டு இருக்கிறேன் என குமார் சங்கக்கார தெரிவித் தார். (இ-5)


## துமிந்தவிற்கு எதிராக வழக்கு

முன்னாள் பாராளுமன்ற உறுப்பி னர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர மற்றும் மூவரின் மரணம் தொடர் பில், பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட 13 பேருக்கு எதிராக நேற்று முன்தினம் வழக் குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

துமிந்த சில்வா உள்ளிட்ட தரப்பி னருக்கு மொத்தமாக 17 குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் இந்த குற்றச்சாட் டுக்களை முன்வைத்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் துமிந்த சில்வா உள்ளிட்டவர்களுக்கு எதி ராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)



# பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர பதவியை ராஜினாமா

(கொழும்பு)

கொழும்பு பிராந்தியத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க பத வியை ராஜினாமா செய்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனிடம் இந்த கடிதம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்றுக்கொள்ள சில மாதங்கள் இருந்த போதிலும் பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்து கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

என்ன காரணத்திற்காக பதவி விலகினார் என்பது பற்றி கடிதத்தில் தெளிவுபடுத்தப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

அனுர சேனாநாயக்கவிற்கு எதிராக பாரியளவில் குற்றம் சுமத் தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் விரிவான விசாரணைகளை நடத்துமாறு சட் டம் ஒழுங்கு தொடர்பிலான அமை ச்சர் உத்தரவிட்டுள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## சார்ந்து வாழ்வதே சாமர்த்தியம்

மனிதர்கள் ஒருத்தரை ஒருத்தர் சார்ந்துதான் வாழமுடியும். எல்லா விதமான காரியங்களையும் தனித்தே செய்யலாம் என்றால் அது முடியாது. மற்றவர்களைச் சார்ந்து இருக்கவேண்டும். மற்ற வர்களைத் தாங்கள் சார்ந்துவரும்போது அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். இது வந்து மனிதப் பண்புகளிலேயே சிறந்த பண்பு. இதைச் சொல்லக்கூடிய அருமையான நிகழ்ச்சியைப் பாருங்கள்.

ஒருகாட்டுப் பகுதி. அந்தக் காட்டுப் பகுதியில் அருமையான ஒரு பங்களா இருக்கிறது. ஒருபணக்காரர் அதிலே வாழ்ந்து கொண்டி ருக்கிறார். எப்பவும் அந்தக் காட்டுப் பகுதியில் குளிர் அதிகமாக இருக்கும். அன்றைக்கு இரவு பார்த்தீர்கள் என்றால் மிகவும் அதிக மான குளிர். அதனால் அந்தக் காட்டுப் பகுதியில் இருக்கிற புறாக்கள் எல்லாம் குளிரைத் தாங்க முடியாமல் அப்படியே பறந்து வந்து அந்த பங்களாவுக்குள்ளே புகுந்துவிட்டன. பங்களாவுக்குள் உள்ள மேல் மாடத்தில் இருக்கிற அந்தக் கம்பிகளில் அவை வரி சையாக உட்கார்ந்தி ருக்கிறது. அப்பொழுது குளிர் தாங்காமல் நடுங்கிக்கொண்டிருக்கிறது.

அவைகளே நடுங்குகிறதென்றால் பூஞ்சிட்டுக்கள் இருக்கிறதே, சின்னஞ்சிறு சிட்டுக்கள் அவைகளால் தாங்கமுடியுமா? அந்தச் சிட்டுக்களும் அந்த பங்களாவுக்குள்ளே பறந்து வந்ததாம். பறந்து வந்தவுடனே அந்தச் சிட்டுக்கள் எல்லாம் அந்தப் புறாக்களைப் பார்த்துக் கேட்கிறது. தனித்திருந்து எங்களால் இந்தக் குளிரைத் தாங்கமுடியாது. நீங்கள் ஓர் உதவி பண்ணலாம். உங்கள் சிறகுக ளுக்குள்ளே நாங்கள் ஒவ்வொருத்தராக உள்ளே நுழைந்து கொள்கிறோம். அப்போது எங்களுக்குக் கொஞ்சம் கதகதப்பாக இருக்கும். அப்படியென்று வேண்டுகோள் விடுத்ததாம். அதைக் கேட்கச் சிலபுறாக்கள் மறுத்துவிட் டன. எங்கள் பிரச்சினையே பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இதில் உனக்கு வேறு சிறகு க்குள் இடம் கொடுக்கிறது எப்படியென்று. ஏனைய புறாக்கள் எல் லாம் அதை ஏற்றுக்கொள்ளவில்லையாம். ஆனால் அந்தக் கூட்டத் தில் இருந்த ஐந்து புறாக்களுக்கு மட்டும் நல்ல மனது இருந்தது.

அதனால் அந்தக் குருவிகளை சின்னச் சின்னக் குருவிகளை தங்களுடைய சிறகுகளுக்குள்ளே அவை வைத்துக்கொண்டதாம்.

இரவுப்பொழுது அப்படியே முடிந்து விடியற்காலை நேரம் வந் தது. அப்பொழுதுதான் அந்த வீட்டுக்காரர் மேலே பார்த்திருக்கிறார். அந்தப்புறாக்கள் எல்லாம் அங்கே இருக்கின்றன. உடனே அந்தப் புறாக்களை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்று நினைத் தாராம். அவை அப்படியே அந்தக் குளிரில் விறைத்துப் போய் இருந்திருக்கிறது. அப்போது அவருடைய பையனும் சேர்ந்து இந்தப் புறாக்களுக்கு நல்ல ஓர் உஷ்ணத்தை கொடுக்க வேண்டும். அப்படி என்று நினைத்து கீழே வந்து ஒருகணப்பை மூட்டினானாம். அந்தக் கணப்பையை மூட்டிவிட்டு அதற்குப் பக்கத்தில் விழுகிறமாதிரி அந்தப் புறாக்களை அப்படியே தட்டி விட்டிருக்கிறார்கள். புறாக்கள் எல்லாம் பொத்துப்பொத்தென்று கீழே விழுந்திருக்கிறது. எல்லாமே குளிரில் ஒரு மயக்க நிலையிலேயே இருந்திருக்கிறது.

இந்தக் கணப்பு தந்த கதகதப்பிலே சில புறாக்கள் அப்படியே கண்கள் முழித்துக்கொண்டனவாம். அவைகளுக்கு இப்போது உயிர் வந்துவிட்டது. ஆனால் இன்னும் சில புறாக்களுக்கு உயிர் வரவில்லை. அவை அப்படியே மரணம் அடைந்துவிட்டன.

ஏன் இந்த வித்தியாசம்? அப்படியென்று யோசித்துப் பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் உயிரோடு இருந்த புறாக்களுடைய சிற குக்குள்ளே இருந்து அந்தப்பூஞ்சிட்டுக்கள் வெளியில் வந்தனவாம்.

அப்பொழுதுதான் அந்தப் பெரியவருக்கு உண்மை புரிந்திருக் கிறது. ஏனைய புறாக்கள் எல்லாம் உயிர் வாழமுடியவில்லை. இந்தப்புறாக் கள் மட்டும் உயிர்வாழ்ந்திருக்கிறதென்றால் அதற்கு முக்கியமான காரணம் என்னவென்று அந்தப் பையன் கேட்டா னாம். அந்தப் பையனுக்கு அவர் விளக்கம் சொல்கிறார்.

வேறு ஒன்றும் இல்லை. இந்தப்புறாக்கள் தான் அந்தச் சின்னச் சிட்டுக்களுக்குச் சிறகுக்குள்ளே இடம் கொடுத்திருக்கிறது. அப்படி இடம் கொடுத்ததனால் அந்தப் புறாக்களுடைய சிறகுக்குள்ளே இருந்த உஷ்ணம் இந்தக் குருவிகளுக்கு இதமாக இருந்திருக்கி றது. அதேமா திரி குருவிகளுடைய அந்தச் சிறிய உஷ்ணம் புறாக்க ளுக்கு இதமாக இருந்திருக்கிறது. இப்படி ஒருத்தருக்கு ஒருத்தர் தங்களுடைய மற்றவ ருடன் உஷ்ணத்தை பரிமாறிக் கொண்ட தனால் இந்தப்புறாக்கள் எல்லாம் கொஞ்சம்குளிரைத் தாங்கிக் கொண்டு உயிருடன் இருந்தி ருக்கிறது. உதவி செய்யாத புறாக்கள் எல்லாம் அந்த உஷ்ணத்தைப்பெற முடியாததால் மரணம் அடை ந்து விட்டது. இதுதான் ஒருத்தருக்கொருத்தர் அனுசரணையாக இருப்பதிலுள்ள மகத்துவம் அப்படியென்று அந்தப் பையனுக்கு அப்பா அறிவுரை சொன்னாராம்.

இதுதான் சார்ந்து வாழ்கிறது என்பது. ஒருத்தருக்கு ஒரு சிறப்பிரு க்கும். இன்னொருத்தருக்கு இன்னொரு சிறப்பிருக்கும். இரண்டு பேரும் போட்டி போடுவதற்குப் பதிலாக அனுசரணையாக இருந்து விட்டால் சாதனைகளைப் படைக்கலாம்.

இது மற்றவர்களுக்கு மத்தியில் அவசியம் இருக்கவேண்டும். கணவன்– மனைவிக்கு நடுவில் நிச்சயமாக இருக்கவேண்டும்.

ஆனால் சில நேரங்களில் அப்படி ஆகிவிடும். ஒரு அம்மா மிகவும் வருத்தப்பட்டார்கள். தன் கணவரிடம் என் மேல் உங்களுக் குப் பிரியமே இல்லை. எப்பொழுது பார்த்தாலும் கிரிக்கெட் நினைப் பிலேயே இருக்கிறீர்கள். பிரியம் இருக்கிறதென்றால் நம்முடைய திருமணத் திகதியைச் சொல்லுங்கள் என்று கேட்டார்களாம். அந்த வீட்டுக்காரர் சொல்லியிருக்கிறார். ஆ... நன்றாக நினைவுக்கு வந்துவிட்டது. அன்றைக்குத்தான் பாகிஸ்தானும் இந்தியாவும் கிரிக்கெட் ஆட்டத்தில் கும்ளே 6 விக்கெட் எடுத்தார். சச்சின் டெண்டுல்கர் 100 ஓட்டங்கள் எடுத்தார் இல்லையா என்று. அந்த அம்மா என்ன ஆகியிருப்பார் பாருங்கள்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைமக்களுக்கு வரப்பிரசாதம்

# இந்திய பட்ஜெட்!



"அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும"!

"அனைவரும் நோயின்றி இருக்க வேண்டும்"!

"அனைவரும் பயனடைய வேண்டும்"! ஏழைமக்களுக்கு வரப்பிரசாதம் இந்திய பட்ஜெட!

"அனைவரும் பயனடைய வேண்டும்"! "யாரும் துயரப்படக் கூடாது"!-

இந்த வார்த்தைகளுடனும், நம்பிக்கை யுடனும் தன்னுடைய 2015ஆம் ஆண்டு 16ஆம் திகதி இவ்வாண்டுக்கான நிதி நிலை அறிக்கையை படித்து முடித்தார் இந் திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி. நிதிய மைச்சராக இருக்கும் அருண்ஜேட்லி கைதே ர்ந்த வழக்கறிஞர். உச்சநீதிமன்றத்தில் தனது வாதங்களை அவர் எடுத்து வைக் கும் அழகே தனி. அதே மாதிரி இந்த முறை நாடாளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து, அவர் பிரதமர் நரேந் திரமோடி தலைமையிலான அரசின் செயல் திட்டங்களை எடுத்து வைத்தபோது சங் கீதம் வாசிப்பது போன்ற இனிமை தென்பட் டது. இப்படியொரு நிதியமைச்சர் நமக்குக் கிடைக்கவில்லேயே என்று எதிரக்கட்சியில் அமரந்திருந்த காங்கிரஸ் தலைவி சோனியாவே கூட நினைத்திருக்கலாம். அப்படியொரு அற்புதமான உரை.

நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யும் முன்பே மத்திய நிதி அமைச்சர் ஒரு நல்ல காரியத்தைச் செய்தார். அது மத்திய வரி வருவாயில் 42 சதவீதத்தை மாநில அரசுக ளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற 14ஆவது நிதிக் கமிஷனின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டது. இதுவரை மத்தியில் இருந்த அரசுகள் செய்யாத விடயம் இது. மத்திய-மாநில கூட்டாட்சி என்ற தத்துவ த்தை முன்னெடுத்துச் செல்ல விரும்பும் பிரதமர் மோடி அரசின் மிக முக்கியமான வரலாறறுச் சிறப்பு மிக்க முடிவு இது. இது வரை "நிதி கொடுங்கள்" என்று மாநில அரசு கள் மத்திய அரசுடன் போராடிக் கொண்டிரு க்கும். மாநிலங்களை நகராட்சியை போல் கருதுகிறீர்கள் என்று தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதாவே கூட தேசிய வளர்ச் சிக் குழுக் கூட்டத்திலேயே பேசியிருக்கிறார். இப்படியொரு சூழ்நிலையில் குஜராத் மாநிலத்தின் முதல்வராக இருந்து விட்டு இப்போது பிரதமராகியிருக்கும் மோடியின் "மாநில அரசுகளுக்கு மதிப்புக் கொடுக்கும்" அணு குறை மிகச் சிறந்த முன்னோடியாக இருக்கி றது. இதன் மூலம் மத்திய அரசு இந்த வருடம் மட்டும் 5.24 கோடி ரூபாயை மாநில அரசுகளுக்கு கொடுக்கப்போகிறது. மத்திய- மாநில அரசுகளின் உறவில் இது ஒரு புது அத்தியாயம்!

இது ஒரு புறமிருக்க பாரதீய ஜனதா அரசு பொதுவாக கார்ப்பரேட்டுகளுக்கு உரிய அரசு என்ற புகார் வரும். கீழ்மட்ட மக களை கண்டுகொள்வதில்லை என்ற குற்றச சாட்டு கிளம்பும். சமூக சிந்தனையுடன் காங்கிரஸ் கட்சிதான் செயற்படும் என்று இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்தி லேயே காங்கிரஸ் கட்சிக்குப் பெயர் உண்டு. அனைத்து மாநிலங்களிலும், குறிப்பாக டில்லியிலும் காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ள படுதோல்வி, வாக்கு வங்கிக் குறைவு போன்றவை பா.ஜ.க.வுக்கு புதிய வியூகத்தைக் கொடுத்திருக்கிறது.

அதன்படி கார்ப்பரேட்டுகளுக்கு 30 சதவீத வரியை 25 சதவீத வரியாக குறைக கும் அதே நேரத்தில் ஏழைகளுக்கு வருடத்திற்கு 12 ரூபாய் பிரிமியம் கட்டினால்போதும் விபத்தால் உயிரிழந்தால் 2 இலட்சம் ரூபாய் பணம் கிடைக்கும் என்ற இன்சூரன்ஸ் திட்டத்தை அறிவித்துள் ளது. அது மட்டுமி ன்றி 18 வயது முதல் 50 வயது வரை உள்ளவர்களுக்கு விபத்து மற்றும் இய ற்கை மரணங்கள் ஏற்பட்டாலும் 2 இலட் சம் ரூபாய் கிடைக்கும் இன்சூரன்ஸ் திட்டமும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு வருடத்திற்கு 330 ரூபாய் பிரிமியம் கட்டினால்போதும். இதன்படி பார்த்தால் ஒரு நாளுக்கு ஒரு ரூபாய்க்கும் குறை வாக கட்டினாலே போதும் விபத்திலோ, இயற்கை யாகவோ மரணம் அடை ந்தால் 2 இலட்சம் ரூபாய் பணம் கிடைக்கும் என்ற திட்டம் கிராமப்புற, ஏழை எளிய மக்களின் வாழ்க் கையில் ஒளி வீச வைக்கும் திட்டம். ஏன் பிறந தோம், எதற்காக வளர்ந் தோம், எப்படிச் செத்தோம் என்பதையே அறியாமல் இறந்து போகும் குடும்பங்களைக் காப்பாற்ற வந்துள்ள அற்புதமான திட்டம் இது என்றால் மிகையாகாது. மத்திய அரசு அதுவும் பா.ஜ.க. தலைமையிலான அரசு இப்படியொரு திட்டத்தை ஏழைகளுக்குக் கொண்டு வந்துள்ளது என்றால் அதைத்தான் "மோடி முத்திரை" என்று நாம் அறிகிறோம்.

இதே போல் இதுவரை பெரிய "கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு" எப்படி கடன் கொடுப்பது, அவர்களுக்கு எப்படி சலுகைகள் கொடுப்பது என்பது மட்டுமே நிதிநிலை அறிக்கையின் முக்கிய நோக்கமாக, முதல் நோக்கமாக இருக்கும். ஆனால் இந்த முறை தாழ்த்தப் பட்டவர்கள், மலைவாழ் மக்கள், பிற்படுத்தப் பட்ட மக்கள் ஆகியோர் நடத்தும் குறுந் தொழில் நிறுவனங்கள், சிறு தொழில் நிறு வனங்கள் போன்றவற்றை எப்படி முன்னுக் குக் கொண்டு வரலாம் என்று சுதந்திர இந்தியாவில முதன்முதலாக திட்டமிடப்பட்டுள்ளது. இவர்களுக்கு கடன் வழங்கி இந்த தொழில் களை மேம்படுத்த 20,000 கோடி ரூபாயில் "முத்ரா" திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் சுமார் 5.77 கோடி சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்கள் பயனடையும். இந்திய வேலை வாய்ப்பின் பெரும் பகுதியை தீர்த்து வைக்கும் இந்த நிறுவனங்களை முதன் முதலில் கண்டுபிடித்து அதற்கு கடன் கொடுத்து கைத்தூக்கி விட வேண்டும் என்ற சிந்தனை உ விற்று பிரதமரான ஒருவருக்குத் தான் வரும் என்பதை நிரூபித்திருக்கிறது இந்த நிதி நிலை அறிக்கை. ஏழைகள் நடத் தும் தொழில் நிறுவனங்கள், சின்னச் சின்ன நறுவ னங்களைக் காப்பாற்ற பட்ஜெடடில் உள்ள "மோடி முத்திரை" இது.

பெண்களின் நலனிலும் மோடிக்கு அதிக அக்கறை என்பதை நிரூபிக்கும் வகையில் இந்த நிதி நிலை அறிக்கையில் சுமார் 79,258 கோடி ரூபாய் பெண்களின் சமூகப் பாதுகாப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் முத் தாய்ப்பு வைத்தாற்போல் "ஒவ்வொரு குடும் பத்திற்கும் வீடு" "ஒவ்வொரு வீட்டிற்கும் 24 மணி நேர மின் சப்ளை" "ஒவ்வொரு குடும்ப த்திலும் ஒருவருக்கு வேலை" "வறுமை ஒழி ப்பு" "பயனாளிகளின் மானியங்கள் நேரடி யாக அவரவர் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் உன்னதத் திட்டம்" "விவசாயிக ளுக்கு கடன் வழங்க மட்டும் ஒரு இலட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு" "இந்த வருடத்தில் விவசாயிகளுக்கு 8.5 கோடி ரூபாய் கடன் கொடுக்க இலக்கு"- இப்படி நிதி நிலை அறி க்கையில் வெளிவந்துள்ள அறிவிப்புகள் அனைத்தும் இந்தியாவில் உள்ள மேல்தட்டு மக்களை மட்டும் கவனத்தில் எடுத்துக் கொள் ளாமல், ஏழை- எளியவர்கள், இளைஞர்கள், பெண்தள், விவசாயிகள் அனைவருக்கும் வாழ வழி அமைத்துக் கொடுக்க எடுக்கப்பட்ட முயற்சியாகவே இருக்கிறது. எல்லாவற்றுக் கும் மேலாக தொழில் துறையை கைதூக்கி விடவும், "கோல்ட் பான்ட்" மூலம் தங்கத்தை தேசிய சொத்தாக பாதுகாக்கவும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டம் வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் நடுத்தர மக்களுக்கு ஏற்ற வாறு வருமான வரி விலக்குகள் கொடுக்கப் படவில்லை என்பது வருத்தத்திற்குரிய நிக ழ்வாகவே இருக்கிறது. இந்த பட்ஜெட்டை தாக் கல் செய்து பேசிய அருணஜேட்லி, முந்தைய அரசு விட்டுச் சென்ற போது இருந்த 15 பில்லி யன் டொலர் வெளிநாட்டு முதலீடுகள் பிரதமர் மோடி வந்த பிறகு இப்போது 55 பில்லியன் டொலர்களாக உயர்ந்திருக்கிறது. முந்தைய அரசில் 11.2 சதவீத இருந்த சில்லறை பண வீககம் இப்போது 5.1 சதவீதமாக குறைந்திருக்கிறது. இதற்கு முன்னால் இருந்த அரசு காலத்தில் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை மொத்த உற்பத்தியில் 4.6 சதவீதமாக இருந்தது. ஆனால் மோடி அரசு வந்த பிறகு இப் போது இந்த பற்றாக்குறை 1.3 சதவீதமாக குறைந்திருக்கிறது. இப்போதைய பொரு ளாதார வளர்ச்சி 7.4 சதவீதம் என்றாலும், இந்த பட்ஜெட் காலத்தில் அது 8- முதல் 8.5 சதவீதமாக அதிகரிக்கும் என்ற நம்பிக்கையை வெளியிட்டிருக் கிறார்.

அந்த வகையில் இந்த நிதி நிலை அறி க்கை "கார்ப்பரேட்" "அந்நிய முதலீடு" "மேல் தட்டு மக்கள்" என்பதோடு நிற்காமல் ஏழை கள், கிராமங்கள், கிராம அளவில் உள்ள சிறிய சிறிய தொழில் நிறுவனங்கள் வரை ஊடுருவிச் சென்றுள்ளது.

இது ஒரு வெளியில் சொல்லப்படாத் "பாப்புலிஸ்ட் பட்ஜெட்" என்றே சொல்ல வேண்டும். அந்த அளவிற்கு ஏழைகளைக் காப்பாற்றும் திட்டங்கள் இந்த நிலை அறிக்கையில் இடம்பெற்றிருக்கின்றன.

பட்ஜெட்டின் நோக்கஙகள் சிறந்தவை. அதை நடைமு றைப்படுத்துவதில் எந்த அளவிற்கு வெற்றி கிடைக்கப் போகிறது என்பதுதான் நிதி அமைச்சர் அருண் ஜேட்லி யின் கையில் இருக்கிறது.


நூறு நாட்களுக் குள் 12.50 கோடி வங்கிக் கணக்குகளையும், 9 மாதத்திற்குள் 50 இலட் சம கழிப்பிடங்களையும் கட்டி முடித்த பா.ஜ.க. அரசுக்கு தலைமை வகிக்கும் பிரதமர் நரேந்திர மோடி மீது நம்பிக்கை வைத்துப் பார்த்தால், இந்த பட்ஜெட் இந்தியாவை நிஜமான உயரத்திற்கு எடுத்துச் செல்லும். அதில் எள் அளவும் சந் தேகமில்லை!

-காசிநாதன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சாட் இராணுவம் அதிரடி

# தீவிரவாதிகளிடமிருந்து நைஜீரிய நகரம் மீட்பு!



(திக்வா)

நைஜீரியாவில் போகோஹறாம் தீவிரவாதிகள் ஒரு குறிப்பிட்ட அரசை உருவாக்க வலியுறுத்தி தொடர்ந்து தாக்குதல் மற்றும் கடத்தல் சம்பவங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அயல் நாடுகளான கேமரூன், சாட் உள்ளிட்ட நாடுகளிலும் அவர்களின் அட்டூழியம் நீடித்து வருவதால், அந்த நாடுகளின் இராணுவமும் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்தநிலையில் நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள திக்வா என்ற நகரம் போகோஹறாம் தீவிரவாதிகளின் வசம் இருந்தன.

நகரை மீட்கும்வகையில் தீவிரவாதிகள் மீது சாட் நாட்டு இராணுவம் அதிரடி தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலில் பல தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இராணுவ வீரர் ஒருவரும் உயிரிழந்தார்.

இராணுவத்தின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாததால், தீவிரவாதிகள் திக்வா நகரை விட்டு தப்பி ஓடி விட்டனர்.

இதனையடுத்து இராணுவம் அந்த நகரை மீட்டது. இதுகுறித்து சாட் இராணுவ அதிகாரி கூறுகையில்,

'திக்வா நகரம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த தாக்குதலில் பல தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்' என்று தெரிவித்தார்.

இதற்கிடையே கடந்த சனிக்கிழமை நைஜர் இராணுவம் நடத்திய தாக்குதலில் 6 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும், சாட் இராணுவம் நடத்திய வான்வழி தாக்குதலில் 2 வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## எரிமலை வெடித்தது



சிலி நாட்டின் தென் பகுதியில் அமைந்திருக்கும் வில்லாரிகள என்ற எரிமலை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பாலையில் வெடித்தது. செவ்வாய்க்கிழமை அதிகாலையில் இந்த எரிமலை குமுறத் தொடங்கியது.

இதையடுத்து, எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டிருக்கும் அதிகாரிகள், எரிமலைக்கு அருகில் வசிப்பவர்களை வெளியேற்றி வருகின்றனர்.

அருகிலிருக்கும் ப்யூகோன் நகர மக்கள் அமைதியாக வெளியேறி வருவதாக அந்நகர முதல்வர் தெரிவித்துள்ளார். 2ஆயிரத்து 840 மீற்றர் உயரமுள்ள இந்த வில்லாரிகா எரிமலை, எப்போதும் உயிர்ப்புடன் உள்ள எரிமலையாகும். அதன் மையத் தில் எரிமலைக் குழம்பு நிரம்பிய ஏரியும் இருந்தது. மலையேறுபவர் கள் அதிகம் வந்து செல்லும் மலை இது.

இதற்கு முன்பாக 1985ஆம் ஆண்டில் இந்த எரிமலை வெடித்துள்ளதாக சிலியின் சுரங்கத் துறை தெரிவித்துள்ளது.

இருபதாம் நூற்றாண்டில் மட்டும், மலைச் சரிவில் வழியும் சாம்பலில் சிக்கி 100க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

ப்யூகான், கனரைப் நகரங்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காலி செய்யப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எரிமலை வெடிப்பு ஏற்பட்டு 20 நிமிடங்களுக்குப் பிறகு, அது மீண்டும் அமைதியடைந்ததாக ப்யூகான் நகர முதல்வர் கார்லோஸ் பர்ரா தெரிவித்துள்ளார்.

"இப்போது சாம்பலோ, லாவா குழம்பு வழிவதோ இல்லை. முழுமையாக அமைதியாகவிட்டது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## எபோலோ தடுப்பு முயற்சிகளை ஒருங்கிணைக்க பிரசல்ஸ் மாநாடு

மேற்கு ஆபிரிக்காவில் எபோலா கொள்ளை நோயினால் மோசமாக பாதிக்கப்பட்ட லைபீரியா, சியாராலியோன் மற்றும் கினி ஆகிய மூன்று நாடுகளின் ஜனாதிபதிகளும் பிரசல்ஸில் நடைபெறும் மாநாடு ஒன்றில் பங்கேற்கின்றனர்.

எபோலா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் முயற்சியாக இந்த மாநாடு நடைபெறுகின்றது.

சிறார்களை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு பாதுகாப்பாக பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 60 மில்லியன் டொலர் நிதியுதவி சேர்க்கும் திட்டத்தை லைபீரியா தொடங்குகின்ற பின்னணியில், இந்த மாநாடு விரைவில் நடத்தப்படவுள்ளது.

லைபீரியாவில் அநேகமான பாடசாலைகளில் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் இல்லை என்று பிரசல்ஸ் மாநாட்டை இணைந்து ஏற்பாடு செய்துள்ள அமைப்புகளில் ஒன்றான ஒக்ஸபாம் நிறுவனத்தின் தலைமை அதிகாரி மார்க் கோல் ட்ரிங் தெரிவித்தார்.

மூன்று நாடுகளிலும் பாடசாலைகளில் மருத்துவ வசதிகளையும் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளையும் சுத்திகரிப்பு உபகரணங்களையும் ஒக்ஸ்பாம் நிறுவனம் வழங்கிவருகின்றது.

எபோலா வைரஸூக்கு இந்த மூன்று நாடுகளிலும் சுமார் 9 ஆயிரத்து 500க்கும் அதிகமானோர் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)




## 80 கிலோ எடையுடன் மலைக்க வைக்கும் நாய்

இங்கிலாந்தின் நியூ ஹேம்ப் ஷயரில் உள்ள மர்லான் மற்றும் லிசா க்ரெனான் தம்பதியர் சக நண்பர்களிடம் தங்களது பிரியத்துக்குரிய செல்ல நாயை அறிமுகப்படுத்துகின்றனர்.

எனினும், அவர்களது நண்பர்களால் அதை நாய் என்று நம்பவே முடியவில்லை. ஒரு வளர்ந்த குதிரையைப் போல் இருக்கும் பிட்புல் இனத்தை சேர்ந்த பிரமாண்டமான அந்த நாய்க்கு என்ன பெயர் வைத்திருக்கிறீர்கள்? என்று நண்பர்கள் திகைப்புடன் கேட்கின்றனர். சற்றும் தாமதிக்காமல் "ஹல்க்" என்று மர்லான் கூறுகிறார். "பின்ன இவனுக்கு வேற என்ன பெயர் வைக்க முடியும்?" என்று நாக்கு நுனி வரை வெளிவந்த வார்த்தையை எச்சில் கூட்டி விழுங்கியவாறு மனதுக்குள் சிரிக்கின்றனர்





விருந்தினர்கள். தினமும் 2 கிலோ மாட்டிறைச்சியை 'ஸ்னாக்ஸ்' ஆக மட்டும் சாப்பிடும் ஹல்க்குக்கு பிரதான உணவாக வேளை தவறாமல் புரோட்டீன் கலந்த உணவு வகைகள் வரிசையாக பிளேட்களில் அணிவகுத்தபடி இருக்கும்.

உலகின் அதிக எடை கொண்ட பிட் புல்லாக நம்ம ஹல்க்தான் வருவான் என்று மர்லான் நண்பர்களிடம் அடித்துக் கூறுகிறார். காரணம் பிறந்து 17 மாதங்களே ஆன ஹல்க்கின் தற்போதைய எடை 80 கிலோ. ஹல்க் இன்னும் வளருவான். இரண்டு கால்களை தூக்கியபடி நிமிர்ந்து நிற்கும் போது தனது எஜமானியை விட உயரமாக இருக்கும் ஹல்க்கை பார்த்தாலே அடி வயிறு கலங்குவதாக அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் மர்லனோ, "வீட்டில் தனியாக இருக்கும் எனது மூன்று வயதுக்குழந்தை ஜோர்டானுக்கு காவலாக ஹல்க்கை தைரியமாக நம்பி விட்டுப்போவேன். ஹல்க்குக்கு பிடித்தமான விளையாட்டே ஜோர்டானை முதுகில் தூக்கி வைத்துக்கொண்டு வீட்டை ரவுண்ட அடிப்பதுதான்" என்கிறார். (இ-5)

## உலகிலுள்ள மிகவும் செலவுமிக்க நகரங்கள் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் சிங்கப்பூர்

உலகின் மிகவும் செலவுமிக்க நகரங்கள் குறித்து எகனாமிஸ்ட் இண்டலெஜின்ஸ் யூனிட் எனும் அமைப்பு ஆய்வு நடத்தியது. இந்த ஆய்வில் கடந்த ஓராண்டில் உலகில் மிகவும் செலவுமிக்க நகரங்களின் முதல் ஐந்து இடங்களில் எவ்வித மாற்றமும் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

அந்த வகையில் சிங்கப்பூரை அடுத்து பாரிஸ், ஒஸ்லோ, ஜூரிக் மற்றும் சிட்னி ஆகியவை செலவு மிக்க நகரங்கள் என அந்த ஆய்வு கூறுகிறது. நியூயோர்க் நகரின் வாழ்க்கைத் தரத்தை அடிப்படையாகக் கொண்டு உலகின் 133 நகரங்களில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.



உணவு, உடை, மின்சாரம், வீட்டுவரி, தொலைபேசி, இணையதளம், குடிநீர், கழிவுநீர் போன்ற 160 செலவினங்களை ஒப்பிட்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டது. அடிப்படை பொருட்களை பொறுத்த வரையில் நியூயோர்க்கை விட சிங்கப்பூரில் விலைகள் 11 சதவீதம் கூடுதலாக உள்ளது.

சிங்கப்பூர் மற்றும் சோல் நகரங்களிலேயே துணிகளின் விலை மிகவும் அதிகமாக உள்ளன. அங்கு நியூயோர்க் நகரைவிட அவை 50 சதவீதம் விலை அதிகமாக உள்ளது. வாகனங்களின் விலையைப பொறுத்த வரையில் அங்கு காரகளின்விலை மிகவும் கூடுத லாக உள்ளன என்றும், அங்கு பயணக்கட்டணங்கள் நியூயோரக்கைவிட மூன்று மடங்கு கூடுதலாக உள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## கோப்பி அருந்துவதால் ரத்தக்குழாய் அடைப்பை தவிர்க்க முடியுமாம்

இதய நோய்களுக்கான முக்கிய காரணங்களில் ஒன்றான இரத்த குழாய்கள் கொழுப்பால் அடைபடுதலை, தினமும் 3 முதல் 5 கோப்பிகள் வரை அருந்துவதன் மூலம் தவிர்க்க முடியும் என்று தென்கொரிய விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இருபத்தையாயிரத்துக்கும் அதிகமான ஆட்களை ஸ்கான் செய்து ஆராய்ந்த இந்த விஞ்ஞானிகள், தினமும் மிதமான அளவு கோப்பியை அருந்தி வருபவர்களுக்கு இரத்த குழாய்களில் கொழுப்பு பொருட்கள் படிவதற்கான ஆரம்பமான, "கல்சியம் படிதல்" குறைவாகக் காணப்பட்டதாக கூறியுள்ளனர்.

கோப்பி அருந்துவதற்கும் இதய நோய்களுக்குமான தொடர்பு குறித்து சூடான வாதங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

கோப்பி அருந்துவது, இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யலாம் என்று சில விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற பெரும்பான்மையே சுதந்திரக் கட்சியின் இலக்காகும்!

## பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மீள்கட்டமைப்புப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் பொதுத தேர்தலில் சு.கவுடன் கூட்டிணையவுள்ள கட்சிகளுடன் சேர்ந்து, நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையை பெற்றுக்கொள்வதே எமது கட்சியின் இலக்காகும் என கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


'எமது நடவடிக்கைகளை பலமற்றவையாக்கும் திட்டத்தில் பல்வேறு பிற்போக்கு சக்திகள் முயற்சித்து வருகின்றன. முற்போக்கு சக்திகளை ஒன்றிணைத்துக் கொண்டு கூட்டணியாக எதிர்வரும் காலத்தில் செயற்படுவோம்.

அரசியல் கட்சிகளால் ஏற்பாடு செய்யப்படும் அரசியல் கூட்டங்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனுமதியின்றி அக்கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்பதற்கு முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, சு.கவின் மக்கள் பிரதிநிதிகள், தங்களது தனிப்பட்ட கருத்துக்களை ஊடகங்களுக்கு முன்வைக்கவும் முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர் சந்திப்புக்களில் அவர்கள் பங்கேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்றும் அக்கட்சியின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## சரத் பொன்சேகாவுக்கு 'பீல்ட் மார்சல்' பதவியுயர்வு வழங்கவுள்ள ஜனாதிபதி

ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவை இராணுவக் கட்டமைப்பின் அதியுயர் (பீல்ட் மார்சலாக) பதவிக்கு நியமிக்க ஜனாதிபதி மைதத்திரி பால சிறிசேன தீர்மானித்துள்ளதாக தெரியவந்துள்ளது.



எதிர்வரும் 22ஆம் திகதி குறித்த பதவி உயர்வு வழங்கவுள்ளதாகவும் இந்நிகழ்விற்காக பாதுகாப்பு அமைச்சு தற்பொழுது நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

அதற்கமைய இராணுவத்தில் அதி உயர் பதவிகளில் ஒன்றாக பீல்ட் மார்சலாக முதல் முறையாக இலங்கையில் சரத்பொன்சேகா நியமிக்கப்படவுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்ட யுத்தத்திற்கு சரத் பொன்சேகாவே தலைமை தாங்கியிருந்தார்.

எனினும் 2010ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டதன் பின்னர் சரத் பொன்சேகா தனது பதவிகளை இழந்ததுடன் சிறையில் அடைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேன வழங்கிய வாக்குறுதிகளுக்கமைய சரத் பொன்சேகா இழந்த அனைத்து பதவிகள் மற்றும் வரப்பிரசாதங்களும் மீண்டும் கிடைக்கப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு அமைச்சர் ராஜித சேனாரட்ன கோரிக்கை

"எனக்கு எதிரான விசாரணைகளை துரிதப்படுத்துங்கள்" என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கையூட்டல் மற்றும் ஊழல் மோசடிகள் தவிர்ப்பு ஆணைக் குழுவிடம் எனக்கு எதிராக, ஜயந்த சமரவீரவினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முடிந்தளவு விரைவில் விசாரணைகளை நடத்துமாறு கோரிக்கை விடுக்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

கையூட்டல் மற்றும் ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளேன்.

இந்த முறைப்பாடு தொடர்பில் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் தரப்பினருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 15மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை



இராஜதந்திர ரீதியில் தலையீடு செய்து மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என மீன்பிடித் துறை அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கை மீனவர்கள் 15 பேர் நீண்ட காலமாக மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் ஊடாக இந்த விடயம் குறித்து பேசப்படும். இந்தியாவைப் போன்று சுலபமாக மியன்மாரில் மீனவர்கள் விடுதலை செய்யப்படமாட்டார்கள்.

இராஜதந்திர ரீதியில் அணுகி பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்கப்படும் என ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனை நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி.சிவப்பிரகாசம் சரஸ்வதி



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், நிலாவெளியை வதிவிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் சரஸ்வதி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை நடைபெற்று பின்னர் பி.ப 5.30 மணியளவில் நிலாவெளி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### பொன்னையா தம்பிஜயா



மிருசுவில் விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தம்பிஜயா கடந்த 2 ஆம் திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சம்மாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### நாகேசு நவரத்தினம்

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)



வட்டு வடக்கு,சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேசு நவரத்தினம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் காலை 9 மணியளவில் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


### திருமதி.சந்திரசேகரம் மனோன்மணி



மட்டக்களப்பு பெரிய கல்லாறைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சந்திரசேகரம் மனோன்மணி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பெரியகல்லாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி சின்னத்துரை நேசரத்தினம்



காரைநகர் சத்திரந்தை களபூமியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நேசரத்தினம் கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் காரைநகர் தில்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி கதிரவேலு தங்கம்மா



பூம்புகார் அல்வாய் வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி. கதிரவேலு தங்கம்மா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று இடம்பெற்று பின்னர் பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்கம்பத்துடன் மோதியது உழவியந்திரம்; சாரதி பலி!

(மல்லாவி)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் உழவியந்திரம் வீதியின் அருகில் இருந்த மின் கம்பத்துடன் மோதியதில் சாரதி தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் கல்விளான் கிராம குளதிற்கு முன்பாக நடைபெற்றுள்ளது.இதில் மல்லாவி புகழேந்தி நகரைச் சேர்ந்த கந்தசாமி ரதீசன் (வயது -20 ) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார். இது தொடர்பில் தெரியவருவதாவது,உழவு இயந்திரம் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வேளை தடுப்பானை திடீரென இயங்கவில்லை. இதனையடுத்து குறித்த வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியின் அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதுண்டது.

இதன்போது சாரதி தூக்கி வீசப்பட்டதில் சில்லுக்குள் சிக்குண்டு படுகாயம் அடைந்த நிலையில் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவரது சடலம் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டு நேற்றைய தினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-2-15)

## மகாறம்பைக்குளத்தில் ஒருவர் சுட்டுக்கொலை

(குருமன்காடு)

வவுனியா மகாறம்பைக் குளத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த வேளை அவரைப் பின் தொடர்ந்து வந்தவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.


இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு 10.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இதன்போது வடிவேலு (வயது-45) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது.

மகாறம்பைக்குளத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த போது பின்தொடர்ந்து வந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் முச்சக்கரவண்டியில் பயணித்தவர் ஸ்தலத்திலேயே பலியானார். சடலம் முழுவதும் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

வவுனியாவில் ஹோட்டல் ஒன்றை நடத்தி வரும் இவர் முன்னர் வவுனியா நகரில் சன் ரீ.வி மீள் ஒளிபரப்பு நிலையத்தை நடத்தி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2-250)




வடமாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் கூழாமுறிப்பு கிறிஸ்தவ தேவாலயத்திற்கான ஒரு தொகுதி தளபாட உபகரணங்கள் அண்மையில் வடமாகாண சபை உறுப்பினர் திருமதி மேரிகமலா குணசீலனால் வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம். (படம்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

## கசிப்பு விற்பனை செய்த பெண்ணுக்கு அபராதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து கிளிநொச்சி நீதவான் எம்.ஐ.வகாப்தீன் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார்.

கசிப்பு வைத்திருந்த 50 வயதுடைய பெண்ணை கிளிநொச்சி பொலிஸார் கடந்த 2 ஆம் திகதி கைது செய்தனர்.

இதன்போது பெண்ணிடமிருந்து 500 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது, பெண் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அபராதம் விதித்த நீதவான், அபராதம் கட்டத்தவறின் ஒரு மாதகால சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் உத்தரவிட்டார். இதேவேளை, அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்த இளைஞன் ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து நீதவான் உத்தரவிட்டார். கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் வைத்து கடந்த 2 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞனை நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, இளைஞன் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். (அ-2)

## மொழிவிருத்தி செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் ஆரம்பக்கல்வி பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்ற தரம்-2 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மொழி விருத்தி செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

மேற்படி செயலமர்விற்கு பாடசாலை அதிபர்கள் தரம்-2 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியரை தவறாது அனுப்பி வைப்பதோடு அவர் ஆசிரியர் கைந்நூலையும் மற்றும் தர மேம்பாட்டு செயல்நூல் செயற்பாடுகள் தொடர் பான முன்னேற்ற அறிக்கையையும் எடுத்து வரவேண்டும் என அவர் கேட்டுள்ளார். (அ-2-15)

## கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 6213 தொழில் நிறுவனங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வன்னி யுத்தத்தின் பின்னர் கடந்த 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் மீள்குடியேற்றம் நடைபெற்றது.

அன்றில் இருந்து இதுவரையில் இம்மாவட்டத்தில் கைத்தொழில், வணிக சேவை வழங்கும் 6 ஆயிரத்து 213 நிறுவனங்கள் உள்ளதாக மாவட்டச் செயலக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது மாவட்டத்தில் ஆயிரத்து 81 கைத்தொழில் நிறுவனங்களும் 5 ஆயிரத்து 132 வணிக சேவை நிறுவனங்களும் இயங்குகின்றன.

இதற்கமைய கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 557 கைத்தொழில் நிறுவனங்களும் 2 ஆயிரத்து 761 வணிக சேவை வழங்கும் நிறுவனங்களும் கண்டாவளை பிரதேச செயலாளர், பிரிவில் 158 கைத்தொழில் நிறுவனங்களும் 822 வணிக சேவை நிறுவனங்களும் உள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 136 கைத்தொழில் நிறுவனங்களும் 559 வணிக சேவை நிறுவனங்களும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 230 கைத்தொழில் நிறுவனங்களும் 990 வணிக சேவை நிறுவனங்களும் அமைந்துள்ளன என அந்த புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)




## 4 இ.போ.ச.பேருந்துகள் கிளிநொச்சி சாலைக்கு

(கிளிநொச்சி)

புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலைக்கு புதிய 4 பேருந்துகள் வழங்கப்படவுள்ளதாக கிளிநொச்சி சாலை முகாமையாளர் எஸ். ஜீவாநந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்து சபையின் வடமாகாண சாலைகளுக்கு வழங்கப்படும் 32 புதிய பேருந்துகளிலேயே, 4 பேருந்துகள் கிளிநொச்சி சாலைக்கு வழங்கப்படும்.

முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் வழங்கப்பட்ட 10 பேருந்துகள் கிளிநொச்சி சாலைக்கு கொடுக்கப்பட்டன.

மொத்தம் 28 பேருந்துகள் சேவையில் ஈடுபட்டன. தற்போது மேலதிக 4 பேருந்துகள் கிடைத்தால் சேவைகளை விஸ்தரிக்க முடியும் என அவர் மேலும் கூறினார். (2)

## மாற்றுத் திறனாளிகளை பராமரிப்பது குறித்த கருத்தரங்கு இன்று

(மல்லாவி)

அக்ராட் நிதி அனுசரணையுடன் உயிலங்குளம் கிராம முன்னேற்ற அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் மாற்றுத் திறனாளிகளை பராமரிப்பது தொடர்பான கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை மு/தென்னியன்குளம் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக உயிலங்குளம் கிராம முன்னேற்ற அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் அ.ஸ்ரீகாந்தன் அறிவித்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற போர் நடவடிக்கை காரணமாகவும் மற்றும் ஏனைய வழிகளாலும் மாற்றுத் திறனாளிகளாக ஆக்கப்பட்டுள்ள எமது உறவுகளை பராமரிக்க வேண்டிய தேவைப்பாடு எமக்குண்டு.

இதனை நோக்கமாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட 60 பேருக்கு மாற்றுத் திறனாளிகளைப் பராமரிப்பது தொடர்பான கருத்தரங்கு நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)

## அறநெறி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு வழங்குங்கள்

### முதலமைச்சரிடம் கோரிக்கை

(குருமன்காடு)

நீண்ட காலமாக இந்து சமய கலாசார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்ற அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்த கொடுப்பனவை வழங்க கோரி வெங்கல செட்டிகுளம் பிரதேச சபையின் உபதவிசாளர் த. சந்திரமோகன் வட மாகாண முதலமைச்சருக்கு கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

இவர் இதன்போது அனுப்பி வைத்துள்ள கடிதத்தில குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இந்து அறநெறி ஆசிரியர்களுக்கு இது வரை முறையான வேதனமோ அல்லது ஊக்குவிப்பு கொடுப்பனவோ வழங்கப்படவில்லை. வவுனியாவில் சுமார் எழுபதிற்கும் மேற்பட்ட அறநெறி பாடசாலைகள் இயங்குகின்றன.

கலாசார சீரழிவுகள், போதைவஸ்து பாவனை என்பன காரணமாக இளம்பருவத்தினர் பாதை மாறி செல்கின்ற இந்த காலப் பகுதியில் அவர்களை ஒழுக்க சீலர்களாகவும், கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை கடைப்பிடிப்பவர்களாகவும், எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக வளர்வதற்கும் அறநெறிப்பாடசாலைக் கல்வி பெரிதும் உதவுகின்றது.வெறுமனே பாடசாலைக்கல்வி மட்டும் இவர்கள் நற்பண்போடு வாழ போதுமானதல்ல.

ஆகவே, அறநெறிப்பாடசாலைகள் சீராக இயங்குவதற்கும் அவற்றை கண்காணிப்பதற்கும் ஏற்ற ஒழுங்குகளை செய்வதோடு இதுவரை காலமும் சமய, சமூக பணியாக கல்வி கற்பிக்கும் அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாதாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குவதற்கு வட மாகாண சபை முன்வரவேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிசை விதைப்பு இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்

(தர்மபுரம்)

**நெற் பயிர்ச்செய்கையில் நெல் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கிலும் உற்பத்திச் செலவைக் குறைக்கும் வகையிலும் இலகு இயந்திரங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயிகளால் விதைநெல்கள் வீச்சு முறையிலேயே தற்போது விதைக்கப்படுகின்றது.

எதிர்வரும் காலங்களில் விதை நெல்லை வரிசை விதைப்பு முறை மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில், களைகளை அகற்றும் இயந்திரம் மற்றும் வரிசை விதைப்பு இயந்திரம் என்பவற்றை வழங்கவுள்ளோம்.

இத்திட்டம் குறித்து ஆர்வமுள்ள விவசாயிகள் அனைவரும் தத்தமது பிரதேச விவசாய போதனாசிரியர் மூலம் அல்லது விவசாயத் திணைக்களங்களுடனும் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெறுவதுடன் பயிற்சிகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-282)

## திறன் விருத்தி கருத்தரங்கு

(மல்லாவி)

அக்ராட் நிறுவனத்தின் நிதியனுசரணையுடன் உயிலங்குளம் கிராம முன்னேற்ற அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் மாற்றுஆற்றல் உடையோருக்கான திறன்விருத்தி கருத்தரங்கு இன்று வியாழக்கிழமையும் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மு/ கோட்டை கட்டிய குளம் அ.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளதாக உயிலங்குளம் கிராம முன்னேற்ற அபிவிருத்தி சங்க தலைவர் அ.ஸ்ரீகாந்தன் தெரிவித்துள்ளார்.


இக்கருத்தரங்கினை அன்னை இல்ல உளவளத்துணையாளர்கள் எஸ்.கெனடி, யூலி கமால் ஆகியோர் நடத்தவுள்ளனர்.

இதில் 40 மாற்றாற்றல் உடையோர் பங்கேற்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)



கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு அண்மையில் பாடசாலை அதிபர் த.தர்மராசா தலைமையில் நடைபெற்ற போது ....

# கடலுக்கு அண்மித்த கிராமங்களில் விவசாயத்தை ஊக்குவிக்க முடிவு



(மன்னார்)

கடலுக்கு மிக அண்மித்த கிராமங்களில் விவசாயத்தை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக நேற்று முன்தினம் மன்னார் துள்ளு குடியிருப்பு, பாவிலுபட்டான் குடியிருப்பு பிரதேசத்தில் நிகழ்வு நடைபெற்றது.

இத்திட்டத்திற்கு அமைவாக மண், நீர் என்பன குறித்த கிராமத்தில் பரிசோதனைக்கு உட்படுத்த ப்பட்டு அவை விவசாய நடவடிக்கைகளுக்கு ஏதுவாக அமைந்திருந்தமையால் இந்தப் பகுதிகளில் முதற்கட்டமாக வீட்டுத்தோட்டத்தை ஊக்குவித்து விவசாய உள்ளீடுகள் மற்றும் பழமர வகைகள் விருந்தினர்களினால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. அனர்த்தங்களை தாக்குப் பிடிக்க கூடிய சமூகங்களை கட்டி எழுப்பும் ஒரு திட்டமாக இது அமைந்துள்ளது.

இதன் அடிப்படையில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மன்னாருக்கான கிளை, விவசாயத்திணைக்களம், உலக தரிசனம் நிறுவனம் ( வேள்ட்விசன் ) நிறுவனம் ஆகியன இணைந்து மன்னாரில் குறித்த திட்டத்தின் முதல் நிகழ்வை நேற்று ஆரம்பித்துவைத்தன.

இதன்போது 42 பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள் மற்று பழமர வகைகள் விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மன்னார் பிரதேச செயலாளர் வசந்தகுமார், வேள்ட்விசன் நிறுவனத்தின் மன்னார் மாவட்ட முகாமையாளர் செல்வநாயகம் செல்வபதி, மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் , மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.றியாஸ், வேள்ட் விசன் நிறுவனத்தின் வடமாகாண அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர் கே.ஜே.குரூஸ் மற்றும் அதிகாரிகள் உட்பட பயனாளிகள் கலந்து கொண்டனர். (அ-2)




## இராணுவ வாகனம் மோதி சிறுவன் படுகாயம்

(மல்லாவி)

மாங்குளம் மகாவித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள ஏ-9 வழியாக சென்று கொண்டிருந்த சிறுவனை இராணுவ ட்ரக் வாகனம் மோதித் தள்ளியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு,மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பி.ப 3.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.இதில் மாங்குளம் புதிய கொலணியில் வசித்து வரும் மு/ சண்முகரட்ணம் ஆரம்ப வித்தியாலயத்தில் கல்வி பயின்று வரும் மாணவன் சுகதாசன் யதுர்சன் (வயது-10) என்ற சிறுவனே படுகாயம் அடைந்தவராவர்.இதுதொடர்பாக தெரியவருவதாவது பிரஸ்தாப சிறுவன் குறித்த வீதியில் சென்று கொண்டிருந்த வேளை கிளிநொச்சியிலிருந்து மாங்குளம் நோக்கி பயணித்த இராணுவ ட்ரக் வாகனம் மோதியது.

இதனையடுத்து சிறுவன் படுகாயமடைந்த நிலையில் மேற்படி வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டார்.இது தொடர்பான மேலதிக விசாரணையை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டனர். (அ-2-15)

♦♦♦♦♦♦♦♦♦♦♦

## கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சகல விளையாட்டுக் கழகங்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை 9 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.எனவே அனைத்து விளையாட்டு கழகத் தலைவர், செயலாளர், உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு பச்சிலைப்பள்ளி பிர தேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் சி.ஜெயக்குமார் கேட்டுள்ளார். (அ-2-277)

## 25 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள்

(கிளிநொச்சி-1)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஆறு கிராம,மாதர் அபிவிருத்தி சங்கங்களுக்கு சமையல் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் 25 தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக மண்டபத்தில் வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரனினால் வழங்கி வைக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார். (அ-2-277)

# வாள் வெட்டுக்கு இலக்கான இளைஞர் வைத்தியசாலையில்

### நடவடிக்கை எடுக்காத பொலிஸார்

இளைஞன் ஒருவர் வாள்வெட்டில் இலக்காகி படுகாயம் அடைந்த நிலையில் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு 9.30 மணியளவில் மல்லாவி நகரப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இதில் துணுக்காய் உயிலங்குளத்தைச் சேர்ந்த டேவிட்கிங்சோ (வயது-27) என்ற இளைஞனே வாள்வெட்டிற்கு இலக்கானவர் ஆவார். இது தொடர்பில் தெரியவருவதாவது, பிரஸ்தாப இளைஞன் வீதியால் பயணித்து கொண்டிருந்த வேளை மல்லாவி நகரப் பகுதியில் மறைந்திருந்த இருவர் வாளால் சரமாரியாக வெட்டியதில் படுகாயம் அடைந்த அவர் மயக்கமுற்று இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார்.

இந்நிலையில் அவ்வழியால் பயணித்தவர்கள் அவரை மீட்டு மல்லாவி வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.இரத்தப்பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக மேலதிக சிகிச்சைக்காக அவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் அப்பகுதி மக்கள் கருத்துக் கூறுகையில்,மல்லாவி பொலிஸார் இதுவரை எதுவித விசாரணையையும் முன்னெடுக்கவில்லையெனவும் வாளால் வெட்டியவர் தொடர்பில் தகவல் தெரிந்தும் இது வரை அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை வெல்வான்
தரணியை வெல்வான்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முன்னையவரின் ஆடம்பரத்தை முறியடித்த பின்னையவர்

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் 3ந் திகதி வருகை தந்திருந்தார். அவரின் யாழ்ப்பாண விஜயம் ஒரு விழாவுக்கானதோ அல்லது ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கானதோ அல்ல. மாறாக வடக்கு மாகாணத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்காகவே அவர் வருகைதந்திருந்தார்.

அதேநேரம் ஜனாதிபதி மைத்திரியின் யாழ்ப்பாண விஜயம் மிகவும் எளிமையாக-சாதாரணமாக அமைந்திருந்தது. ஊடகச் செய்தியைத் தவிர, ஜனாதிபதியின் யாழ்ப்பாண வருகையை வேறு எந்த ஆடம்பரங்களும் கட்டியம் கூறி நிற்கவில்லை.

முன்பென்றால் மகிந்த ராஜபக்ஷவின் யாழ்ப்பாண விஜயத்தின் போது, யாழ் நகரம் அலங்கரிக்கப்படும். ஒவ்வொரு மின்கம்பங்களும் மகிந்தவின் புகைப்படத்தை தாங்கி நிற்கும். முகாம்களில் இருக்கின்ற படையினர் வீதிகளுக்கு வருகின்ற ஒரு திருவிழாவாக அது அமைந்திருக்கும்.

நடனம், நாட்டியம், மேளதாளம், பாட்டு, பக்கவாத்தியம் என்ற கலைநிகழ்வுகளால் மகிந்தவின் மனதைக் குளிரவைக்கும் முயற்சியில் ஆளுநர் அலுவலகம் அலமலக்காக ஓடித்திரியும். இதற்காக பிரபல்யமான பாடசாலை மாணவர்களுக்கு பயிலரங்கு நடக்கும். யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் முகட்டு ஓட்டுக்கும் வர்ணம் தீட்டும் பணி நடக்கும். அதை உலங்கு வானூர்தி அவதானிக்கும்.

யாழ். மாவட்டத்தில் பார்க்கும் இடம் எல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் நிமலனாக மகிந்தவின் கட்டவுட்டுக்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

அடேங்கப்பா! வீதிகள்தோறும் மாணவர் அணிவகுப்பு; படைத்தரப்பினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் என எங்கும் ஒரே திருவிழா மயம்.

கூடவே விடுதிகளில் தங்கி நிற்கும் அதிகாரிகளின் கூட்டம் இப்படியாக கோடிக்கணக்கான ரூபாய் செலவில், வடக்கின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடந்திருக்கும். பின்னர் சொல்லவோ வேண்டும் மகிந்தவின் தடிப்பான உரையை. இப்படி எல்லாம் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடந்த பின்னர் மன்னர் மகிந்த ராஜபக்ஷ காங்கேசன்துறைக்குச் செல்வார். அங்கு மிதக்கும் படகில் அவரின் நீராடல் நடக்கும். அதைப் புகைப்படம் ஆக்குவதில் ஒரு பெரும் அரச கூட்டம் முண்டியடிக்கும். காங்கேசன் விடுதியில் போசன சுகம் நடக்கும். இதுவே ஜனாதிபதி மகிந்த கலந்து கொள்ளும் வடக்கின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமாக இருந்திருக்கும்.

ஆனால், நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பக்குவமாக நடந்தேறியது.

உரிய நேரத்திற்கு ஜனாதிபதி மைத்திரி யாழ் செயலகத்திற்கு வந்தார். சம்பிரதாயத்திற்கு முதல்வர் விக்னேஸ்வரன் மாலை அணிய, கூட்டம் ஆரம்பமாகியது.

வீதிகளில் எந்தச் சலனமும் இல்லை. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எந்த விடயம் கதைக்கப்படவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டதோ அந்த விடயம் கதைக்கப்பட்டது. தமிழர்களின் பிரச்சினையை உணர்ந்து கொண்ட நாட்டுத் தலைவராக மைத்திரியின் உரை அமைந்திருந்தது.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் அபிவிருத்தி என்ற எண்ணக்கருவுக்குள் கவனம் செலுத்தினர். அரசியல் பேதங்கள் கூட்டத்தில் தென்படவில்லை என்பதாக ஜனாதிபதி மைத்திரியின் தலைமையில் நடந்த வடக்கின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை விமர்சிக்கலாம்.

தேவையற்ற செலவுகளை, ஆடம்பரங்களை தவிர்த்தமை மைத்திரியின் முன்னுதாரணம் என்றே கூறவேண்டும்.

# ஆயிரத்து 300 ரூபாய் செலவில் மாங்குளத்தில் வைத்தியசாலை

## சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண மக்களுக்காக ஆயிரத்து 300 மில்லியன் ரூபாய் செலவில் புனர்வாழ்வு வைத்தியசாலையொன்றை மாங்குள த்தில் புதிதாக அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணமும் ஏனைய மாகாணங்களைப் போன்று சிறந்த சேவையாற்றி வருகின்ற நிலையில் வடக்கு மாகாணத்தில் இன்றும் அதிகளவான தேவைகள் இருப்பதாகவும் எனினும் அவற்றைப் பூர்த்தி செய்வதற்குரிய வளங்கள் பற்றாக்குறையாக இருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் 2014 ஆம் ஆண்டிற்காக சிறந்த சுகாதார சேவைக்கான விருது வழங்கும் நிகழ்வு யாழ் நகரிலுள்ள ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற போது விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சத்தியலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டிலுள்ள 9 மாகாணங்களில் வடக்கு மாகாணத்தில் விசேட தேவையுடையோர் எண்ணிக்கை அதிகமாகவே காணப்பட்டது. இவர்களில் பெரும்பாலானோர் சுகாதாரத் தேவையுடையவர்களாகவே காணப்படுகின்றனர். இதனடிப்படையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுகாதாரத் துறையினர் ஏனைய மாகாணங்களை விட அதிகமாக உழைக்க வேண்டிய தேவை நிறையவே உள்ளது.

வடக்கில் கடந்த காலத்தில் நடைபெற்ற போரின் காரணமாக இங்குள்ள மக்கள் சொத்து மற்றும் உயிரிழப்புக்களை எதிர்நோக்கியிருந்தனர். அத்தோடு இந்தப் போரின் போது அவயங்களை இழந்த, பெற்றோர்களை இழந்த சிறுவர்களும் பெரியவர்களும் தற்போதும் பெரும் துயரங்களையும் துன்பங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்றாலும் வடக்கு மாகாணத்தின் சுகாதாரக் குறிகாட்டி ஏனைய மாகாணங்களுக்கு நிகராகவே உள்ளது. வடக்கு மாகாணத்தின் விசேட தேவைகளை ஆராய்ந்து ஐந்து வருடத்திற்கான சுகாதாரத் திட்டமொன்றினை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

எமது மாகாணத்தைப் பொறுத்த வரையில் சுகாதாரத்துறையில் ஆளணிப் பற்றாக்குறை நிறையவே காணப்படுகிறது. குறிப்பாக மாகாணத்திலுள்ள 101 வைத்தியசாலைகளில் 37 வைத்தியசாலைகளில் நிரந்தர வைத்தியர்கள் ஒருவர் கூட இல்லாத நிலையே இருக்கின்றது. இந்த நிலைமையானது நாட்டிலுள்ள மாகாணங்களில் வடக்கு மாகாணத்தில் மட்டுமே காணப்படுகின்ற பிரதான குறைபாடாகும் என்றார்.

வடக்கில் பல ஆயிரக்கணக்கான விசேட தேவையுடையோர். கணவனை இழந்த பெண்கள் என எப்பொழுதுமே பிரச்சினைகளின் மத்தியில் பல தரப்பட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களினது நலனிலேயே வடக்கு மாகாண சுகாதார திணைக்களம் அக்கறை கொண்டு சேவைகளை முன்னெடுக்க வேண்டுமென்றும் அமைச்சர் சத்தியலிங்கம் கேட்டுக்கொண்டார். (எ-4)

# பர்தா, நிகாப் உடைகளுக்கு அரசு தடைவிதிக்க வேண்டும்

## பொது பல சேனா வேண்டுகோள்

முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசங்களுக்கு தடைவிதிக்கும் முன் முஸ்லிம் பெண்கள் அணியும் பர்தா, நிகாப் உடைகளுக்கு தடை விதிக்க வேண்டும் என பொது பல சேனா பௌத்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் தற்போதைய அரசாங்கம் பல்வேறு விசித்திரமான சட்டங்களை முன்வைக்கின்றது.

இந்நிலையிலேயே முழுமையாக முகத்தை மூடிய தலைக்கவசத்தை தடை செய்ய வேண்டுமென கோரி புதிய சட்டமொன்றை இயற்றியுள்ளது.

இவ்வாறு சட்டங்களை கொண்டு வரும் தற்போதைய அரசாங்கம் ஏன் முஸ்லிம் பெண்கள் முகத்தை மூடி அணியும் பர்தா, நிகாப் உடைகளுக்கு தடை விதிக்கவில்லை என கேள்வி யெழுப்பியுள்ளார்.

தலைக்கவசம் அணிந்து தப்பு செய்கிறவர்கள் யார் என்பதை அறிய முடியும். எனினும் நிகாப், பர்தா உடைகளினுள் இருப்பவர்கள் யாரென்பதை எவ்வாறு அவதானிப்பது. கடந்த காலங்களில் இவ்வகையான ஆடைகளை பயன்படுத்தியே இலங்கையில் பல்வேறு குற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

மாமா. அஸ்மின் போன்ற குற்றவாளிகள் இவ்வகை உடைகளில் ஒளிந்திருந்தே தப்பித்து வந்தனர்.

எனவே தலைக்கவசத்திற்கு தடை விதிப்பதாயின் முஸ்லிம் பெண்களின் ஆடைகளுக்கும் தடை விதித்து பாதுகாப்பினை உறுதிபடுத்த வேண்டும்.

ஒரு நாட்டின் சட்டம் என்பது அனைவருக்கும் பொருந்தக் கூடியது. மதசார்பில் ஒரு சில தரப்பினருக்கு மாத்திரம் சாதகமாகவும். ஏனையோருக்கு வேறு விதத்தில் சட்டம் இயற்றுவதை ஏற்று கொள்ளமுடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)



## சத்திய தரிசனம்

### பாதுகாப்பான முதலீடு


❖ இரக்கமும், பரந்த மனப்பான்மையும் கொண்டவர்களே ஆன்மிகநெறி வழி நடக்க தகுதி படைத்தவர்கள்.

❖ அன்பு இல்லாத இதயம் வறண்ட பாலைவனத்திற்குச் சமமானது.

❖ மன வங்கியில் அன்பு என்னும் பணத்தை முதலீடு செய்யுங்கள். அதுவே பாதுகாப்பான முதலீடு. யாராலும் திருட முடியாது.

❖ பெண்களைத் தாயாகக் காண்பவனே மனிதர்களில் முழுமை பெற்றவன்.

❖ மனிதனைப் பேரின்ப நிலைக்கு இட்டுச் செல்லும் ஆற்றல் நல்லொழுக்கத்திற்கு மட்டுமே இருக்கிறது.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### நமசிவாய என்பதன் சிறப்பு தெரியுமா?

இம்மந்திரத்தின் வகைகளை ஐந்தாகக் கூறுவர்.
தூல பஞ்சாக்கரம் - நமசிவாய
சூக்கும பஞ்சாக்கரம்-சிவாயநம
காரண பஞ்சாக்கரம்-சிவாய சிவ.
மகாகாரண பஞ்சாக்கரம்-சிவ.
மகாமனு பஞ்சாக்கரம் -சி.
தூல பஞ்சாக்கரம்- நமசிவாய

நமசிவாய என்னும் திருவைந்தெழுத்து சிவபெருமானின் முதல் திருமேனியாகும். மந்திர வடிவான இறைவனின் திருமேனியில்.

திருவடி - ந, திருஉந்தி - ம, திருத்தோள்கள் - சி, திருமுகம் - வா, திருமுடி - ய.

இத்தூல மந்திரம் உலக இன்பங்களைத் தந்து இம்மை நலம் அருளக்கூடியது. இதுவே ஞானமார்க்கத்தின் முதல் படி ஆகவேதான் ஞானிகளும் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரும் இம்மந்திரத்தைப் போற்றி ஜெபித்தனர்.


சூக்கும பஞ்சாக்கரம்-சிவாயநம


சிவாயநம என்னும் அட்சரம் சிவனிருக்கும் அட்சரம் என சிவவாக்கியர் குறிப்பிட்டுள்ளார். இம்மந்திரம் இம்மை- மறுமைப் பயன்களை அளிக்கவல்லது. மாணிக்கவாசகப் பெருமாள் இம்மந்திரத்தை தவமிருந்து பெற்றார் என்பர். உலக இன்பங்களைத் தருவதோடு விரும்பும் காலத்தில் திருவடிப் பேற்றையும் அளிக்கவல்லது. நடராஜ மூர்த்தியின் ஞான நடனத்திருக்கூத்தே சூக்கும பஞ்சாக்கரத் திருமேனியாகும்.

(அடுத்த வாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் மாபெரும் போர்





## இன்று ஆரம்பம்

வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 109 ஆவது கிரிக்கெட் போட்டிகள், இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. வடக்கின் மாபெரும் போரானது 1901 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்த கிரிக்கெட் போட்டியானது 108 போட்டிகளை கடந்து வந்துள்ளது.

தவிர்க்க முடியாத காரணத்தால் சில போட்டிகள் நடைபெறவில்லை. இதுவரையில் நடைபெற்ற போட்டிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 34 போட்டிகளிலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 27 போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளதுடன் 39 போட்டிகள் சமநிலையிலும், 7 போட்டிகள் முடிவு தெரியாத நிலையிலும், 1 போட்டி கைவிடப்பட்டும் உள்ளன.

1993ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு பெற்ற 354 ஓட்டங்கள், ஒரு இனிங்ஸில் பெற்ற அதிகூடிய ஓட்டமாகவுள்ளது.


சென்.ஜோன்ஸ் கல்லூரி 1999 ஆம் ஆண்டு 6 விக்கெட்டுக்கள் இழப்புக்குப் பெற்ற 326 ஓட்டங்கள் அந்த அணியின் அதி கூடிய ஓட்டங் களாக இருக்கின்றது.

இதுவரையில் 18 சதங்கள் பெறப்பட்டுள்ளதுடன், 1990 ஆம் ஆண்டு சென். ஜோன்ஸ் கல்லூரி வீரன் எஸ்.சுரேஸ் குமார் பெற்ற 145 ஓட்டங்கள் அதி கூடிய தனிநபர் ஓட்டமாகவுள்ளது.

1951ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வி. சண்முகம் 26 ஓட்டங்கள் கொடுத்து 9 விக்கெட்க்களை கைப்பற்றியமை இதுவரையில் சிறந்த பந்து வீச்சாக காணப்படுகின்றது. 1950 ஆம் ஆண்டு சென். ஜோன்ஸ் கல்லூரியை சேர்ந்த ஈ.ஜி.தேவநாயகம் 33 ஓட்டங்கள் கொடுத்து 9 விக்கெட்களை கைப்பற்றியமை அந்த அணியின் சிறந்த பந்துவீச்சாகவுள்ளது.

பல சாதனைகள் நிகழ்த்தப்பட்ட வடக்கின் மாபெரும் கிரிக்கெட் போட்டியின் இவ்வருடம் நடைபெறவுள்ள 109ஆவது போட்டி, அதிக எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. (க)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்




# ஐக்கிய அரபு எமிரேட்ஸை வீழ்த்தி பாகிஸ்தான் அசத்தல் வெற்றி

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான உலகக்கிண்ண லீக் போட்டியில் பாகிஸ்தான் 129 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

நியூசிலாந்தில் உள்ள நேப்பியரில், பாகிஸ்தான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் மோதும் உலகக்கிண்ண "பி" பிரிவு லீக் போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணித்தலைவர் முகமது தாகிர் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு தொடக்க ஆட்டக்காரர் நசிர் ஜாம்ஷெத் (4) ஏமாற்றம் அளித்தார்.

பின் இணைந்த அகமது ஷேசாத (93), ஹாரிஸ் சோகைல் (70) ஜோடி கைகொடுத்தது. அடுத்து வந்த மக்சூட் (45) அரைசத வாய்ப்பை இழந்தார்.

பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் மிஸ்பா (65) நம்பிக்கை தநதார். உமர் அக்மல் (19) நிலைக்கவில்லை. அப்ரிடி (21), வாகாப் ரியாஸ் (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதனால் பாகிஸ்தான் அணி 300 ஓட்டங்களுக்கு மேல் எடுத்து ஐக்கிய அரபு எமிரேட்சுக்கான இலக்கை கடினப்படுத்தியது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சார்பில் குருகே 4 விக்கெட்டுகளையும், முகமது நீவீது ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

கடின இலக்கை விரட்டிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பாகிஸ்தான் பந்துவீச்சில் திணற ஆரம்பித்தது. தொடக்க வீரர்களாக களமிறங்கிய அம்ஜத் அலி (14), ஆண்ட்ரி பெரெங்கர் (2) நிலைக்கவில்லை.

அடுத்து வந்த கிருஷ்ண சந்திரன் (0) டக்-அவுட் ஆக வெளியேறினார். இதைத் தொடர்ந்து ஜோடி சேர்ந்த குராம்கான் (43), ஷைமன் அன்வர் (62) சிறப்பாக விளையாடி ஆட்டமிழந்தனர்.

ரொகன் முஸ்தபா (0) ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் வெளியேறினார். அம்ஜத் ஜாவட் (40) அதிரடியாக விளையாட ஓட்டங்கள் சேர்த்தார். மொகமட் நவீட் (0), மொகமட் தக்வீர் (0) ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியால் 50 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 210 ஓட்டங்களை மட்டுமே குவிக்க முடிந்தது. இதனையடுத்து பாகிஸ்தான் அணி 129 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் தரப்பில், சோகைல் கான், வஹாப் ரியாஸ், அப்ரிடி தலா 2 விக்கெட்டுகளையும், ராஹட் அலி, சொகிப் மக்சூட் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். சிறப்பாக விளையாடி வந்த நிலையில் சததததை தவறவிட்ட பாகிஸ்தானின் அகமது ஷேசாத் போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல்...

நேற்று காணாமல் போனவர்களின் உறவினர்கள் யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி விட்டு முதலமைச் சரை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

குறித்த சந்திப்பில் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு முதலமைச்சர் கருத்து தெரிவிக்கையில், இலங்கையின் பல இடங்களில் குறிப்பாக மஹரகம, திருகோணமலை, அம்பாந்தோட்டை போன்ற இடங்களில் இரகசிய முகாம்கள உள்ளதாகவும் அவற்றில் காணாமல் போனவர்கள் பலர், தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் எமக்கு சில இரகசிய தகவல்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

அவ்வாறு தடுத்து வைககப்பட்டுள்ளவர்கள் படையினரின் சப்பாத்துக்களை துடைப்பதற்கும் இதர சில வேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் நாங்கள் அறிந்திருக்கின்றோம். இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக நாம் அரசாங்கத்திற்கும் தனிப்பட்டவகையில் ஜனாதிபதிக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றோம்.

அவர்கள் எங்களிடம் கேட்டிருககின்றார்கள் அவ்வாறான முகாம்கள் இருக்கின்றன என உங்களுக்கு எவ்வாறு தெரியும் என நாம் அதனை அவர்களுக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றோம். மேலும் இவ்வாறு உள்ளவர்களை முதலில் அடை[illegible]ாம் காண வேண்டும். அதன் பின்னர் அவர்களை விடுவிப்பது தொடர்பில் நாங்கள் நடவடிக்கை எடுக்கலாம்.

எனவே ஆக்க பொறுத்த நாம் ஆற பொறுக்கவேண்டும். ஏனெனில இரகசிய முகாம்கள் என்பதனால் அவை தொடர்பில், நாம் விசாரணைகளை முன்னெடுக்க முடியாமலிருக்கின்றது. மேலும் சிறைகளிலும் மற்றும் நலன்புரி முகாம்களிலும் அடையாளம் காணப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை வெசாக் தினத்தன்று அதாவது எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதி பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்குமாறு நாம் ஜனாதிபதியிடம் கேட்டிருக்கின்றோம்.

அந்தவகையில் அவர்கள் விடுவிககப்படுவார்கள் என நாங்கள் நம்பு[illegible]றோம் என கூறினார். இதன் போது காணாமல் போனவர்களின உறவினர்கள் அரசாங்கத்தின் 100 நாள் செயற்றிட்டத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுங்கள் என முதலமைச்சரிடம் கோரினர்.

அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் அந்த விடயம் தொடர்பாக நாம பரசீலிக்கலாம். மேலும் காணாமல் போன பிள்ளைகள் தொடர்பான முழுமையான தகவலகளை எமக்கு கொடுங்கள். அவ்வாறு கொடுத்தால் அதனை நானே ஒரு பிரேரணையாக வடிவமைத்து மாகாணசபையில் தீர்மானமாக நிறைவேற்றுவேன்.

மேலும் நான் முன்னர் குறிப்பிட்டதைப்போன்று இரகசிய முகாம்கள் தொடர்பான அடையாளப்படுத்தல மற்றும் அங்குள்ளவர்கள தொடர்பான தகவல்கள் தேவை. எனவே அதனை முதலில் பெற்றுக் கொண்டு நாம் நடவடிக்கை எடுப்போம். இதேபோன்று காணாமல் போனவர்களின் உறவினர்கள் இங்குவரும் வெளிநாட்டு பிரதி நிதிகளை சந்திக்க விரும்பினால் என்னிடம் முதலிலேயே கூறி வையுங்கள். அவ்வாறு கூறி வைததால் அது தொடர்பில் நான் உரிய நடவடிக்கையினை எடுப்பேன்.

இதேபோன்று நீங்கள் ஜனாதிபதியை சந்திக்க கேட்டிருக்கின்றீர்கள். அது தொடர்பிலும் நாம் நடவடிக்கை எடுத்து ஜனாதிபதியை நீங்கள் சந்திப்பதற்கு ஆவன செய்து கொடுக்கப்படும் என முதலமைச்சர் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார். (எ-4)

## உறவுகளை...

இவ் ஆர்ப்பாட்டத்தில் பெருமளவான மக்கள் ஒன்று திரண்டு தமது உறவுகளை மீட்டுத் தருமாறு கண்ணீருடன் வீதியில் புரண்டு கதறியழுதமை அனைவரது கண்களிலும் கண்ணீரை வரவைத்தது.

நேற்றுக் காலை பத்து மணியளவில் யாழ் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய இப் போராட்டம் 12 மணிவரை இடம் பெற்றது. இதன் பின்னர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்காக யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பதற்குச் சென்றனர்.

இதன்போது மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் நின்றிருந்த காவலாளி அவர்களை உள்நுழைய விடாது தடுத்திருந்தார். இதன் போது ஆவேசமடைந்த போராட்டக்காரர்கள் காவலாளியின் தடையையும் மீறி மாவட்ட அரச அதிபரிடம் சென்று கதறியழுது ஜனாதிபதிக்கான மகஜரையும் கையளித்தனர்.

### ஆளுநருக்கு மகஜர்

இதன் பின்னராக அங்கிருந்து வடக்கு மாகாண ஆளுநர் அலு வலகத்திற்குப் பேரணியாகச் சென்று அங்கும் ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டுக் கதறினர். இதனையடுத்து ஆளுநர் குறிப்பிட்ட சிலரை உள்ளே வரவழைத்து பேச்சுவார்த்தை நடத்தியதோடு இது தொடர்பில் மீண்டுமொருமுறை விரைவில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் மேலும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு இதனைத் தெரியப்படுத்துவ்தாகவும் உறுதியளித்தார்.

### முதலமைச்சருக்கு

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆளுநர் அலுவலகத்திலிருந்து ஏ9 வீதி வழியாக பேரணியாக யாழ் சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்திற்குச் சென்று அங்கு முதலமைச்சர் சி. வி.விக்னேஸ்வரனைச் சந்தித்து தமது உறவுகளை நீங்களாவது மீட்டுத் தரவேண்டு மெனக் கண்ணீர மல்க்க் கோரினர்.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது உறவுகள் தற்போதும் உயிருடன் இருப்பதாகவும் அவர்களை மீட்டுத் தர வேண்டு மென்றும் கதறியழுது கோரினர். இதன் போது பலரும் காணாமல் போன தமது உறவு களின் புகைப் படங்களை தாங்கிக் கொண்டு அழுது புலம்பியமை அங்கிருந்தவர்களை மனமுருகச் செய்தது.

### எமக்குத் தெரியும்

நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க எங்களுடைய பிள்ளைகளை வெள்ளை வாகனத்தில் கடத்திச் சென்றார்கள். அதன் பின்னர் அங்கே இருக்கிறார் இங்கே இருக்கிறார்கள் என்று கூறனர். இதனை நம்பி நாமும் பல வருடங்களாக ஏன் இன்றும் அலைந்து திரிகின்றோம்.

ஆனால்எமக்குரிய பதில்எதுவுமே இதுவரையில் கிடைக்கவில்லை. இந்நிலையில் புதிய அரசு இதற்கு நீதியான நடவ டிக்கை மேற்கொண்டு இரகசிக முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற உறவுகளை விடுதலை செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர்.

இவ்வாறு கண்ணீரும் கதறலுமாக கடத்தப்பட்ட உறவுகள் நடத்திய போராட்டத்தினால் யாழ் நகரமே சோகத்தில் ஆழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் மக்கள் பிரதிநிதிகள் என்று இங்கு கூறிக் கொள்பவர்களும் தம்மை பிரதிநிதிப படுத்திக் கொண்டு திரிகின்ற அரசியல்வாதிகள் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்றும் போராட்டக்காரர்கள குற்றஞ் சாட்டியிருந்தனர்.

இதேவேளையில் இந்தப் போராட்டமானது கடந்த வருடங்களில் இடம்பெற்ற போராட்டங்கள் போன்று பொலிஸ் மற்றும் இராணுவப் புலனாய்வாளர்களது கண்காணிப்பு இருந்ததுடன் அச்சுறுத்தும் நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக மேற்கொள்[illegible]ளப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இப்போராட்டத்தில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், வலி. வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளர் எஸ்.சஜீவன், போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவர் வி.சகாதேவன் ஆகியோர கலந்து கொண்டிருந்தனர். (எ-4)

## கடத்திச்...

மத்தி உதவிப்பொலிஸ் அத்தியட்சகரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அராலி வடக்கு செட்டியார் மடத்தினை சேர்ந்த பாஸ்கரன் அனுஜன் என்பவர் கடந்த 2012 ஆம் ஆண்டளவில் காணாமல் போயுள்ளார்.

தனதுமகன்காணாமல்போனமை சம்பந்தமாக கொழும்பு ஆட்டுப்பட்டி பொலிஸ் நிலையத்தில் 08.09. 2012 அன்று தாயார் பி.செல்வி என்பவர் முறைப்பாடொன்றினையும் செய்துள்ளார். இம் முறைப்பாடு தொடர்பிலேயே குறித்த தாயாருக்கு பொலிஸார் கடிதமொன்றினை இவ்வருட முற்பகுதியில் அனுபபியுள்ளனர்.

அக்கடிதத்தில் இம் முறைப்பாடு தொடர்பில் அழுத்கடை பொலிஸ் நிலையத்திற்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளது எனவும் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் பாஸ் கரன் அனுஜன் என்பவர் பலரிடமிருந்து கடன் பெற்றுள்ளதாகவும் அதனை மீள செலுத்த முடியாத நிலையிலேயே யாருக்கும் தெரியாமல் படகு மூலம் அவுஸ் திரேலியாவிற்கு போயிருக்கலாம் என்ற தீர்க்கமான தகவலே கிடைக்கப் பெற்றுள்ளது.

இது சம்பந்தமாக மேலதிக தகவல் கிடைக்கப்பெற்றால் உங்களுக்கு தகவல் தரப்படும் என அக் கடிதத்தில குறிப்பிடப்பட்டு இறுதியில கொழும்பு மத்தி உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ஜயரத்ன என்பவரின் கையெழுத்தும் இடப்பட்டுள்ளது என்றார் அத்தாய்.

இதேவேளை, விசாரணை செய்துவிட்டு விடுதலை செய்து விடுவோம் என கூறப்பட்டு இராணுவத்தால் பிடித்து செல்லப்பட்டவர்கள் இதுவரை எங்கே என்று தெரியவில்லை அதற்கான ஆதாரங் களும் தம்மிடம் உண்டு என பல தாய்மார்கள் ஊடகங்களிடம் கதறியழுதனர்.

தமது பிள்ளைகளினை தடுப்பு முகாம்களில் மற்றும் இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந் தமையை நேரில் வெளி நாட்டில் உள்ள சிலர் கண்டதாக கூறியுள்ளனர். அவர்களுடைய பாதுகாப்பு காரணமாக நாம் அவற்றை வெளியே கூறவிலலை. எமது பிளளைகள் கணவனமார் எமக்கு வேண்டும் என்றனர். (எ-4)

## உள்நாட்டு...

யானசரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணை ஒன்றுக்காக கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு வந்திருந்த போதே செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவம் போர்க்குற்றத்தில் ஈடுபட வில்லை என்பதே தமது நிலைப்பாடு என்கின்ற போதிலும், குற்றசசாட்டு முன்வைக்கப் படுமிடத்து அதனை விசாரிக்காமல், குற்றச்சாட்டை நிரா[illegible] அதிகமான சிப்பாயகளைக் கொண்ட இராணுவத்தில் ஒரு சிலர் குற்றங்களை புரிந்திருந்தால், அதனை விசாரித்து அவர்களை தண்டிப்பது அவசியம என்றும் அவர் கூறினார்.

சர்வதேச அழுத்தங்கள் காரணமாகவே விசாரணைக்கு இலங்கை அரசாங்கம் முன்வந்துள்ளதாக கூறப்படுவது குறித்து கேட்டபோது, அதனை மறுத்த சரத் பொன்சேகா, இதற்கு முன்னரும், குற்றச்சாட்டுக்கள் வந்த போது பொது விசாரணைகள் நடந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இராணுவத்தினருக்கு எதிரான எந்த விசாரணையையும் எதிர் கொள்ள தான் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். (எ-11)

## அரசின்...

தேச நாணய நிதியத்தின் நிபுணர்கள், இலங்கை தற்போது உடனடி நெருக்கடியை எதிர் கொள்ளவில்லை என்று கூறியுள்ளனர்.

நேற்று கொழும்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபுணர் குழுவின் தலைவர் ரொட்சினேய்டர செய்தியாளர்களிடம் பேசிய போது,

2009ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கையின்வெளிநாட்டுநாணயக் கையிருப்பு நல்ல நிலையிலேயே உள்ளது.

போர் உச்சக்கட்டத்தை எட்டியிருந்த போது சர்வதேச நாணய நிதியம், 2.6 பில்லியன் டொலரை இலங்கைக்கு கடனாக வழங்கியிருந்தது.

தற்போது நிலைமை முற்றிலும் வேறுபட்டது. எம்மால் நிலுவையாக உள்ள கொடுப்பனவு உதவியையே வழங்க முடியும் என்று தெரிவித்துள்ளார். (எ-11)

## பிராந்திய...

பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை - மூதூர் ஈச்சிலம்பற்று, வட்டவான் பிரதேசத்தில வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மகளுக்கு நிவாரணங்களை வழங்கும நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர இரா.சம்பந்தன் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மத்திய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளைப்பெறாமல் மாகாண சபையில் அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொண்டமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் இதன் போது இரா. சம்பந்தனிடம் கேள்வியெழுப பினர். இரா.சம்பந்தன் தெரிவித்த தாவது,

மாகாண ரீதியாக எமது மக்களுக்கு அதிகாரம் கிடைக்க வேண்டும். எமது மக்கள் தனிப் பட்ட மக்கள். அவர்களுக்கு ஒரு கலை, கலாசாரம், மொழிப் பாரம்பரியம் உண்டு. அந்த வகையில், அவர்களுக்கு ஒரு அரசியல் அந்தஸ்து கிடைக்க வேண்டும். மத்திய அரசாங்கத்தில் நாங்கள் சேர்வது பற்றி துரிதமாக செயற் படாமைக்குக் காரணம் பிராந்திய சுயாட்சியை நாங்கள் பெற வேண்டும். பிராந்திய சுயாட்சியைப் பெற்று எமது மக்களின் கைகளில் அதிகாரம் வந்த பின்னர் மத்திய அரசாங்கததில் சேர்வதா, இல்லையா என்பதைப் பற்றி பரிசீலிப்போம் என்றார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் மத்திய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொள்ளுமா என்பது தொடர்பிலும் இதன் போது கேள்வியெழுப்பப்பட்டது.

இந்த அரசாங்கம் தொடருமாக இருந்தால் அதைப்பற்றி பரிசீலிக்க வேண்டிய தேவை ஏற்படும் என குறிப்பிட்ட அவர், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கூடி அந்த விடயம் தொடர்பாக முடிவெடுக்கும் எனவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேர்மையாக செயற்படுவார் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் இரா.சம்பந்தன் இதன்போது தெரிவித்தார். (எ-11)

## மருந்து...

மக்கள் என்னை ஜனாதிபதி தெரிவு செய்தமைக்கு நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

ஔடதங்கள் பாதுகாப்புச் சட்ட மூலத்தை காணாமல் போக செய்வதற்காக 2011 ஆம் ஆண்டு மருந்து உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து தலா 25 லட்சம் ரூபாய் திரட்டப்பட்டதாகவும் இப்படியான மருந்து உற்பத்தி நிறுவனங்கள் உட்பட அதனுடன் தொடர்புடைய 400 நிறுவனங்களிடம் இவ்வாறு பணம் திரட்டப்பட்டதாக பின்னர் எனக்கு தெரியவந்தது.

திரட்டப்பட்ட அந்த பணம் எங்கு போனது என்பதை நான் அறிய வில்லை. அந்த பணத்தின் மூலம் கிடைத்த பலம் காரணமாக சட்ட மூலம் காணாமல் போக செய்யப்பட்டது.

கூட்டுத்தாபனத்தின் தலைவராக முன்னாள் ஜனாதிபதியின் மருத்துவர் பணியாற்றினார். அவர் ஜனாதிபதி ஒருவரை போல் நடந்து கொண்டார்.

இந்த சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் ஜனாதிபதியாக நான் கலந்து கொள்வது காலத்தின் கோலம். இதற்கு எதிராக செயற்பட்டவர்கள் எவரும் சட்டமூலம் இவ்வாறு நிறைவேற்றப்படும் என்பதை எதிர்பார்த்திருக்கவில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். (எ-11)


## மரண அறிவித்தல்

### இரட்ணராஜா சரஸ்வதி (கீதா)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், அரியாலையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இரட்ணராஜா சரஸ்வதி (கீதா) நேற்று (04. 03.2015) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசிங்கம் - நாகம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான டேவிற் - கனகம்மா தம்பதிகளின் மருமகளும், இரட்ணராஜாவின் (ஜோர்ச்) அன்பு மனைவியும், ஞானரட்ணம், அன்புரட்ணம், தனரட்ணம், அன்புச்செல்வி, செல்வரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகதீஸ்வரன், ஜஸ்மின், றெஜிமாலினி ஆகியோரின் மாமியாரும், காலஞ் சென்றவர்களான இரத்தினம், கந்தசாமி, செல்லத்துரை, இராஜேஸ்வரன், சுந்தரம் மற்றும் சிவபாக்கியம், சின்னத்துரை, அன்னம்மா ஆகியோரின் சகோதரியும், நிலக்சன், நிதுசன், விதுஜன், ஜெனிஸ்ரன், ஜெனிசிகா, ஜெனயா, ஒலிவியா சாரோன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (05.03.2015) வியாழக்கிழமை 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக பரியாக்கோபு ஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(9675)

தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானை அடித்து நொறுக்கி அவுஸ்திரேலியா பிரமாண்ட வெற்றி

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான உலகக்கிண்ண லீக் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 275 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது. அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில், நேற்று நடந்த உலகக் கிண்ண தொடருக்கான 'ஏ' பிரிவு லீக் போட்டியில், அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான் அணிகள் விளையாடின.

நாணயச்சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணித் தலைவர் மொஹமட் நபி, முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார். இதனையடுத்து அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.



அதன்படி, தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய ஆரோன் பின்ச் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். அடுத்து வந்த டேவிட் வோர்னர் அதிரடியாக விளையாடி 4ஆவது சதத்தை பதிவு செய்தார்.

இவருக்கு ஜோடி சேர்ந்து ஒத்துழைப்பு கொடுத்த ஸ்ரீபன் ஸ்மித் அரைசதம் கடந்தார். இரண்டாவது விக்கெட்டுக்கு 260 ஓட்டங்கள் சேர்த்த போது வோர்னர் (178) ஆட்டமிழந்தார். இவர் 19 பவுண்டரி, 5 சிக்ஸர்கள் விளாசினார்.

ஸ்ரீபன் ஸ்மித் (95) சதமடிக்கும்வாய்ப்பை இழந்தார். அடுத்து வந்த மக்ஸ்வெல், 21 பந்துகளில் அரைசதத்தை பதிவு செய்தார். அடுத்து போல்க்னர் (7) ஒரு பவுண்டரி அடித்த நிலையில் வெளியேறினார்.

ஆப்கானிஸ்தான் பந்துவீச்சை சிதறடித்த மக்ஸ்வெல் சிக்ஸர்களாய் வாணவேடிக்கை காட்டினார். இவர் 39 பந்துகளில் 88 ஓட்டங்கள் (6 பவுண்டரி, 7 சிக்சர்) எடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த மார்ஷ் (8) ஆட்டமிழக்க, ஹடின் (20) களத்தில் இருந்தார். அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 417 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை எட்டியது.

ஆப்கானிஸ்தான் சார்பில் ஷபூர் சட்ரன், தாவ்லத் சட்ரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ஹமிட் ஹசன், நவ்ரோஸ் மங்கள் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து 418 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய ஆப் கானிஸ்தான் அணி 37.3 ஓவர்களிலே 142 ஓட்டங்களில் சுருண்டது.

ஜாவிட் அமடி (13), உஷ்மான் ஹானி (12), நவ்ரோஸ் மங்கள் (33), சமியுல்லா ஷென்வாரி (17), நஷிபுல்லா ஜட்ரன் (24), அஸ்சர் சாசரி (10) ஆகியோர் மட்டும் இரட்டை இலக்க ஓட்டங்களில் நடையை கட்டினர். மற்றவர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இதனால் அவுஸ்திரேலியா 275 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றிபெற்றது. அவுஸ்திரேலிய தரப்பில், வேகத்தில் மிரட்டிய ஜோன்சன் 4, ஸ்ரார்க், ஹேசில்வூட் ஆகியோர் தலா 2, கிளார்க், மக்ஸ்வெல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

ஆப்கானிஸ்தானை அடித்து நொறுக்கிய டேவிட் வோர்னர் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)


2015 இல் 3 இலட்சம் பேருக்கு நிரந்தர குடியுரிமை வழங்கும்*

SIKARAM **கனடா** Express Entry Visa

தொழில்வாய்ப்புடன் நிரந்தர குடியுரிமை

மேசன், தச்சுவேலை, குழாய் பொருத்துநர், மின்னிணைப்பாளர் உள்ளிட்ட பின்வரும் தொழில்நிலைகளில் 2 வருட அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

Electricians, Mechanics, Plumbers, Carpenters, Masons, Pipefitters, Gas Fitters, Printing & Other Machine Technicians, Telecommunication Workers, Contractors & Supervisors, Agriculture/ Horticulture Related Services, Fishermen/ Women, Chefs, Cooks, Bakers & Butchers

உள்ளிட்ட50க்கும் மேற்பட்ட தொழில்நிலைகள்

(C-278)

கனேடிய குடிவரவுத் திணைக்கள அங்கீகாரம் பெற்ற முகவர் ஊடான சேவை.

மேலதிக விபரங்களுக்கு www.Sikaram.lk FREE / Assessment

info@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு / தபால் மூலம் சுய விபரக்கோவையை அனுப்பி விண்ணப்பிப்பதற்கானதகுதியை அறிந்து கொள்ளுங்கள்.

எந்தவொரு நாட்டுக்குமான எந்தவகை விசா சேவையையும் வழங்கும் Sikaram (Pvt) Ltd., No.2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்) Tel: 077 36 16 798 / 021 222 00 11

முற்பதிவு அவசியம் *நிபந்தனைகளுக்கு உட்பட்டது


## யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரின் எண்ணெய்க்கசிவு

மேற்படி பிரச்சனையை ஆராய்ச்சி செய்வதற்கும் தீர்வு காண்பதற்குமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக பின்வரும் தகவல்கள் பாதிக்கப்பட்ட பொதுமக்களிடமிருந்து கோரப்படுகின்றன. பின்வரும் வினாக்களுக்கு உங்களுடைய நேர்மையான பதில்களை எதிர்பார்க்கின்றோம்.

1. எப்பொழுது நீங்கள் கிணற்று நீரில் எண்ணெய்க்கசிவு உள்ளதை அறிந்தீர்கள்?
2. தற்பொழுது இந்த எண்ணெய்க்கசிவின் அளவு மாற்றமடைந்துள்ளதா?
3. உங்களுக்கோ உங்கள் குழந்தைகளுக்கோ ஆரோக்கியம் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதா?
4. வேறு ஏதாவது தகவல்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்களா?
5. உங்களுடைய பெயர்?
6. பாதிக்கப்பட்ட கிணறுகள் உள்ள முகவரி?
7. உங்களுடைய தொலைபேசி இலக்கம்?

உங்களுடைய பதில்களை 12/02/2015 க்கு முன்னர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும். கு. சுந்தரலிங்கம், இல.09 சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். உங்கள் பதில்களை கொண்டு உங்களை சந்தித்து கலந்தாலோசிக்க எதிர்பார்க்கின்றோம்.

K. Suntharalingam Chief Consultant Engineer
Environmental Engineering Consultants (9673)

## தூய குடிநீருக்கான விசேட செயலணி

யாழ் மாவட்டம்

### எண்ணெய் மாசு முறைப்பாடு

கிணற்று நீரில் எண்ணெய் மாசு கலந்திருப்பது தொடர்பாக இதுவரை எவ்விடத்திலேனும் முறைப்பாடு செய்தவர்கள் மற்றும் செய்யாதவர்கள் அனைவரையும் சுன்னாகத்தில் அமைந்துள்ள தூய குடிநீருக்கான விசேட செயலணியின் இணைப்புச் செயலகத்தில் முறைப்பாட்டுப் படிவத்தைப் பெற்று, பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

• முறைப்பாட்டாளர்கள் அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும் •

முறைப்பாட்டுப் படிவத்தைப் பூர்த்தி செய்து ஒப்படைக்கவேண்டிய இறுதித் திகதி 11.03.2015.

தொடர்பு இல : 021 300 3840

**தூய குடிநீருக்கான விசேட செயலணி**

காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்
(சுன்னாகம் ஸ்ரேசன் கிளினிக் அருகாமை)

(C-276)


## வாடகைக்கு தேவை

சிறிய ரக பட்டா (மூடிய நிலையில் உள்ள) வாகனம் சாரதியுடன் மாதாந்த வாடகைக்குத் தேவை. (9671)

தொடர்புகளுக்கு : 0750436062


## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 1930 . 11 . 21 | 2014 . 02 . 14 |



## இராசக்கோன் குழந்தைவேலு

ஓய்வுநிலை அதிபர்
மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்

ஆயிரம் பிறைகண்ட எங்கள் ஐயா
அன்னையவள் திருவடியில் சரண்புகுந்து
ஆண்டொன்று ஓடியே மறைந்தாலும்
நேயமுடன் உன்நினைவால் வாழுகின்றோம்
நித்தமும் உன் செயல்களையே எண்ணி எண்ணி
பாயிரமாய் பாட்டெழுதிப் பார்த்தாலும் நின்
பாசத்திற்கு ஈடில்லை இல்லை ஐயா
ஓயாமல் உன்நினைவைச் சுமந்து நின்றே
உம் ஆத்மா சாந்திபெற பிரார்த்தனை செய்வோம்

நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

(9670)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org